270

# திருவாடானைப் புராணம்

9 APR 1930

1929

270

OFFICE OF THE REGISTR... OF ...
No.
9 - APR 1930
MADRAS

C

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவாடானைப் புராணம்

683
294.535

திருவாரூர் - சாமிநாத தேசிகர்
இயற்றியது

சென்னை

திருப்பதி ஸ்ரீ மஹந்து அச்சுக்கூடத்திற்

பதிப்பித்தது

*Copy-right Registered*

சுக்கில௵ கார்த்திகை௴

**December, 1929**

இந்தப் பிரதியின் எண் : 230


## விற்பனைக் குரிய புத்தகங்கள்.

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| 1. | திருப்புகழ் முதற்பாகம் ... ... | 2 | 8 | 0 |
| 2. | ௸ இரண்டாம் பாகம் ... ... | 3 | 0 | 0 |
| 3. | ௸ மூன்றும் பாகம் ... ... | 3 | 8 | 0 |
| 4. | சிவஸ்தல மஞ்சரி (அச்சில்) ... ... | 1 | 8 | 0 |
| 5. | பிரமோத்தர காண்டம் (சிவ கதை) ... ... | 0 | 6 | 0 |
| 6. | திருத்தருப்பூண்டி புராண வசனம் ... ... | 0 | 6 | 0 |
| 7. | திருவாடானைப் புராணமும் வசனமும் ... | 0 | 12 | 0 |
| 8. | காசி மாஹாத்மியம் (சிவ கதை) ... ... | 0 | 1 | 0 |
| 9. | திருநீர்த் தல புராணம் ... ... | 0 | 4 | 0 |
| 10. | திருத்தணிகைத் திருப்புகழ் முதலியன ... | 0 | 6 | 0 |
| 11. | திருத்தணிகைத் தலபுராண வசனம் ... | 0 | 3 | 0 |
| 12. | ௸ 10-11 ஒன்றாய்ச் சேர்ந்தது ... | 0 | 8 | 0 |
| 13. | அறுபத்துநான்கு திருவிளையாடற் பாட்டு ... | 0 | 2 | 0 |
| 14. | History of the Tamil Prose Literature... | 0 | 6 | 0 |
| 15. | சுந்தர மூர்த்தி ஸ்வாமிகள் சரித்திரம் ... | 0 | 6 | 0 |
| 16. | வ. த. சுப்பிரமணிய பிள்ளை சரித்திரம் ... | 0 | 12 | 0 |
| 17. | கடோரசித்தன் கதை ... ... ... | 0 | 2 | 0 |
| 18. | மஞ்ஞைப் பாட்டு ... ... ... | 0 | 0 | 6 |
| 19. | சேவற் பாட்டு ... ... ... | 0 | 0 | 6 |
| 20. | வள்ளி-கிழவர் வாக்குவாதம் ... ... | 0 | 0 | 6 |
| 21. | வேல் பாட்டு ... ... ... ... | 0 | 0 | 6 |

ஒரே காலத்திற் பத்துப் பிரதிகள் வாங்கினால் ஒரு பிரதி விலையின்றிக் கொடுக்கப்படும். தபாற் செலவு முதலியன வேறு.

77091

வ. சு. சண்முகம் பிள்ளை,
292, லிங்க செட்டித் தெரு,
சென்னை : MADRAS.



உ

# பொருளடக்கம்


| | பக்கம் | பாடற் றொகை |
|---|---|---|
| முகவுரை | v | |
| நூலாசிரியர் வரலாறு | viii | |
| ஸ்தலத்துக்குரிய தேவாரப் பதிகம் | x | |
| ,, ,, திருப்புகழ் | xii | |
| பாயிரம் | ௧-௬ | ௨௦ |
| நகரச் சிறப்பு | ௬-௧௦ | ௨௪ |
| புராண வரலாறு | ௧௦-௧௬ | ௩௨ |
| 1. மணிமுத்தாநதிச் சருக்கம் | ௧௬-௨௦ | ௨௬ |
| 2. பாரிஜாதவனச் சருக்கம் | ௨௦-௨௩ | ௧௭ |
| 3. சூரிய பூசைச் சருக்கம் | ௨௩-௪௮ | ௯௭ |
| 4. வாருணி சாபமடைந்த சருக்கம் | ௪௯-௫௫ | ௩௪ |
| 5. வாருணி சாப விமோசனச் சருக்கம் | ௫௫-௬௬ | ௫௨ |
| 6. மார்க்கண்டன் பூசைச் சருக்கம் | ௬௭-௭௬ | ௫௦ |
| 7. அன்னத்துவசன் பேறுபெற்ற சருக்கம் | ௭௬-௮௪ | ௪௭ |
| 8. அகத்திய பூசைச் சருக்கம் | ௮௫-௯௭ | ௫௫ |
| 9. காமதேநு சாபமடைந்த சருக்கம் | ௯௭-௧௦௩ | ௩௯ |
| 10. காமதேநு சாபவிமோசனச் சருக்கம் | ௧௦௩-௧௧௦ | ௨௬ |
| 11. தநஞ்சயன் பூசைச் சருக்கம் | ௧௧௦-௧௧௭ | ௩௮ |
| | | ௫௫௭ |


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
9- APR 1930
MADRAS

உ

சிவமயம்

# முகவுரை

## (I) தலவிளக்கம்.

திருவாடானை என்னுந் தலம் பாண்டியநாட்டுப் பாடல் பெற்ற * பதினான்கு தலங்களுள் ஒன்று. திருஞான சம்பந்த ஸ்வாமிகளது தேவாரம் பெற்றது. மானாமதுரை ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடகிழக்கு 44-மைல். சிவகங்கை ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கு 33-மைல். காளையார்கோயி லெனப்படும் திருக்கானப்பேருக்குக் கிழக்கு 21-மைல்.

அறந்தாங்கியிலிருந்து 30-மைல். பரமகுடியிலிருந்தும் இராமநாத புரத்திலிருந்தும் 32-மைல். ஆனால் இம்மூன்று வழிகளில் ஒன்றாவது சரியான வழியன்று.

**ஸ்தலத்தின் திருநாமங்கள்** :—இத்தலம் சீகாழியைப் போலப் பன்னிரு திருநாமங்களைக் கொண்டது. அத்திரு நாமங்களாவன :—

| | |
|---|---|
| (1) பாரிஜாத வனம் | (7) ஆடானை |
| (2) வன்னி வனம் | (8) மார்க்கண்டேயபுரம் |
| (3) குருக்கத்தி வனம் | (9) அகத்தீச்சுரம் |
| (4) வில்வ வனம் | (10) பதுமபுரம் |
| (5) முத்திபுரம் | (11) கோமுத்தீச்சுரம் |
| (6) ஆதி ரத்நேச்சுரம் | (12) விஜயேச்சுரம் |

—புராண வரலாறு-௨௧

* மதுரை, திருப்புனவாயில், திருக்குற்றாலம், திருவாப்பனூர், திருவேடகம், திருநெல்வேலி, இராமேசுரம், திருவாடானை, திருப் பரங்குன்றம், திருச்சுழியல், திருக்கானப்பேர் (காளையார் கோயில்), திருப்புத்தூர், கொடுங்குன்றம் (பிரான்மலை), திருப்பூவணம்.

**ஆதியில்,** நீல ரத்தினத்தாற் சிவலிங்கஞ்செய்து சூரியன் பூசித்ததால் ஸ்வாமிக்கு **ஆதிரத்நேசுரர்** என்றும், தலத்திற்கு **ஆதிரத்நேச்சுரம்** என்றும் பெயர் போந்தன. 'ஆதியா னுறை ஆடானை' என்பது தேவாரம். துருவாசமுநிவருடைய சாபத்தால் ஆட்டுத்தலையும் ஆனையின் உடலும் பெற்ற வருண புத்திரன் சாபநிவாரணம் பெறுமாறு பூஜித்தமையால் தலத்துக்கு **ஆடானை** என்னும் பெயரும், ஸ்வாமிக்கு அஜகஜேசுரர் என்னும் பெயரும் உண்டாயின.

**ஸ்வாமி** திருநாமங்கள் :—ஆடானை நாதர் : அஜகஜேஸ்வரர், ஆதிரத்நேஸ்வரர், ரத்நநாதர்.

**அம்பிகை** திருநாமங்கள் :—அன்பாயி அம்மை ; சிநேகவல்லி.

**தீர்த்தங்கள்** ஆறு :—

| | |
|---|---|
| (1) மணிமுத்தாநதி | (4) மார்க்கண்டேய தீர்த்தம் |
| (2) சூரிய புட்கரணி | (5) அகத்திய தீர்த்தம் |
| (3) வருணதீர்த்தம் | (6) க்ஷீரகுண்டம் |

—புராணவரலாறு-௩௦

**ஸ்தலவிருக்ஷம்** :—பாரிஜாதம், வன்னி, குருக்கத்தி, வில்வம்.

வழிபட்டுப் பேறுபெற்றோர் :—

| | | |
|---|---|---|
| சூரியன் | அகத்தியர் | அரிச்சந்திரன் |
| வருணபுத்திரன் | கௌதமர் | மநு |
| வருணன் | காலவர் | முசுகுந்தன் |
| மார்க்கண்டர் | பாரத்துவாசர் | அதிவீரன் |
| உரோமசர் | சநகாதி நால்வர் | மாந்தாதா |
| வசிட்டர் | அன்னத்துவசன் | அருச்சுனன் |

—புராண வரலாறு-௨௮



இங்ஙனம் தேவர், முநிவர், அரசர் முதலியோர் பூசித்த விசேடமுடைய தாதலாற், * "செப்பரிய புகழ்த் திருவாடானை சேர்ந்து, செந்தமிழ் மாலைகள் சாத்தி" என்றார் சேக்கிழார் ஸ்வாமிகளும்,

இத்தலத்து ஈசன் **மலரருச்சனைக்கு** உகந்தவர் என்பதும், அங்ஙனம் பூசிக்க வினையும் பிணியும் ஒழியும் என்பதும் ஆளுடைய பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பாடல் ஒவ்வொன்றிலும் பசுமரத்தாணி யறைந்தாற்போலக் கூறியுள்ளதால் அறியக்கிடக்கின்றன.

## II. தலபுராணம் அச்சிட்ட வரலாறு.

இத்தகைய பெருமை வாய்ந்த தலத்தை **1927—ஆம்** வருடம் மேமீ 5உ தரிசிக்கப் பெற்றேன். அவ்வமயம் என்னை யாதரித்த பிருமஸ்ரீ. தி-முத்துஸ்வாமி குருக்கள் அவர்கள் தம்மிடம் இருந்த "புராணச் செய்யுள்" கையெழுத்துப் பிரதி ஒன்றையும், தாம் வசன நடையில் எழுதி வைத்திருந்த மான்மியத்தையுந் தந்து அவற்றை அச்சிடுமாறு அநுமதித்தனர். வேறு பிரதி வேண்டி விசாரித்ததிற் காலஞ்சென்ற தமிழ்க்குரிசில் - ராஜராஜேஸ்வர சேதுபதியவர்கள் பேரன்புடன் பிறிதொரு கையெழுத்துப் பிரதியை அனுப்பினார்கள். இனித் தாழாது கிடைத்தவாறு அச்சேற்றிவிட்டால் உள்ளதாவது மறையாது என்னும் முடிவுகொண்டு கிடைத்த பிரதிகள் இரண்டையுங் கொண்டு தெரிந்த வரையில் நூலைச் சீர்திருத்தி அச்சேற்றினேன். வசனம் இருந்தவாறே நடை மாறாது அச்சிடப்பட்டது. நூலிற் பிழைகள் பல உள. ஆயினும் இப் புராணம் பாடிய பெரியோர்

* பெரிய புராணம்—ஞானசம். ௮௧௧.

அவையடக்கமாகச்

"சங்கரனர்ச் சனைவேட்டோர் அரவிந்த நாண்மலரும் தாழைப் [போதும்,
பங்கமுற்றுங் கண்டகம்பற் றினுங்கொய்து புல்லிதழும் பார்த்து [நீக்கி, யங்கவை கொள்வார்."

எனக் கூறியவாறு, குணத்தையே பாராட்டிக் குறைதமைப் பொறுத்தருள்வார் ஆன்றோர். என்னுந் துணிபுகொண்டு நூலை அச்சிட்டு முடித்து ஸ்தலபுராணம் அச்சேறவில்லை என்னுங் குறை ஒன்றையே நீக்கினேன்.

## III. நூலாசிரியர் வரலாறு.

இப்புராணத்தைத் தமிழிற் பாடியவர் கமலாபுரி (திருவாரூர்) சிதம்பரதேசிகர் குமாரர் சாமிநாததேசிகர். இவருடைய போதகாசிரியர் திருவாரூர்ச் சொக்கநாத தேசிகர் குமாரர் உலகப்பிரகாச தேசிகர் என்பவர். இவர் "பங்கயமின் வளர்சேது பதியரசே புவிவெல்க" என வாழ்த்துக் கூறியுள்ளதாற் சமீபகாலத் திருந்தவர் என்பதும், தளபதியாயிருந்த 'வயிரவமால்' என்ற அன்பரின் விருப்பத்தின்படி இவ் வாடானைப் புராணத்தை இயற்றினார் என்பதும் இந் நூற் பாயிரத்தால் விளங்குகின்றன.

நூலாசிரியர் தமிழ் நன்கு கற்றவர் என்பது அவர் வாக்கால் ஏற்படுகின்றது. நூலிற் பல அரிய தமிழ்ப்பதப் பிரயோகங்கள் உள்ளன. இவை ஆங்காங்கு எழுதியுள்ள உரைக்குறிப்பால் உணரலாகும். ஆசிரியரது கவித்திறமையும் வியக்கத்தக்கதே. ஒரு பொருள் குறிக்கும் பல சொற்கள் விரவப்பாடுதலில் இவர் இன்புற்றுள்ளனர். சூரிய பூசைச் சருக்கத்திற் சூரியனுக்குள்ள ஆயிரங்கதிரோன், ஆதவன்,



கிரகவேந்து, பரிதி, இரவி, சுடரவன், திநகரன், அலரி, என்று, பானு, அருணன், ஞாயிறு, மார்த்தாண்டன், தரணி, கதிரவன் என்னும் பல நாமங்களும் வரும்படிக் கவிகளை அமைத்துள்ளனர். இவர் சொற்சாதுரியம் படவும் பாடுவர்.

"ஐயம் வருவதே யிலையென அறியாய், என்றுரைத் திலகு
மென்றுவுக் கருளி யென்றுய ரகற்று நான் மறையோன்.

—சூரிய பூசைச் சருக்கம்-௬௬, ௬௭.

"இருவினை யகற்றி, முக்குறும் பெறிந்தே, யிசையு நாற் கரணமு மடக்கி, வரும்புல னைந்தும் வெலும் உரோமசர்"

—ஷை ௬௮.

"ஞாயிறு திங்களோன் றிருந்தே" —ஷை ௭௨

'கனி யெனக் காயினை போற்றி—

—மார்க்கண்டன் பூசை-௧௧.

பாவையர் இசைபாடும் முறையை விளக்கிய "ஓவியர்க்கும் எழுத ஒண்ணா" என்னும் பாடலும் பாராட்டற் பாலது.

அன்னத்துவசன் பேறு பெற்ற சருக்கம்-௩௪.

இந்நூலாசிரியரின் சிவபக்திநிலை மிகச் சிறந்ததென்பது அவர் அவ்வச் சருக்கத்திற் கூறியுள்ள தோத்திரப்பாக்களால் விளங்குகின்றது.

திருத்தருப்பூண்டி
1. 12. 1929.

வ. சு. சண்முகம் பிள்ளை.

சிவமயம்

## திருஞானசம்பந்த ஸ்வாமிகள் அருளிச் செய்த

# தேவாரப் பதிகம்

பண் – நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

1. மாதோர் கூறுகந் தேற தேறிய
ஆதி யானுறை யாடானை
போதி னாற்புனைந் தேத்து வார்தமை
வாதி யாவினை மாயுமே.

2. வாடல் வெண்டலை யங்கை யேந்திநின்
றாட லானுறை யாடானை
தோடு லாமலர் தூவிக் கைதொழ
வீடு நுங்கள் வினைகளே.

3. மங்கை கூறினன் மான் மறியுடை
யங்கை யானுறை யாடானை
தங்கை யாற்றொழு தேத்த வல்லவர்
மங்கு நோய்பிணி மாயுமே.

4. சுண்ண நீறணி மார்பிற் றோல்புனை
யண்ண லானுறை யாடானை
வண்ண மாமலர் தூவிக் கைதொழ
எண்ணு வாரிட ரேகுமே.

5. கொய்ய ணிம்மலர்க் கொன்றை சூடிய
ஐயன் மேவிய ஆடானை
கைய ணிம்மல ரால் வணங்கிட
வெய்ய வல்வினை வீடுமே.



6. வானி ளம்மதி மல்கு வார்சடை
யானஞ் சாடலா னாடானை
தேன ணிம்மலர் சேர்த்த முன்செய்த
வூன முள்ள வொழியுமே.

7. துலங்கு வெண்மழு வேந்திச் சூழ்சடை
யலங்க லானுறை யாடானை
நலங்கொண் மாமலர் தூவி நாடொறு
வலங்கொள் வார்வினை மாயுமே.

8. வெந்த நீறணி மார்பிற் றோல்புனை
யந்த மில்லவ னாடானை
கந்த மாமலர் தூவிக் கைதொழுஞ்
சிந்தை யார்வினை தேயுமே.

9. மறைவல் லாரொடு வான வர்தொழு
தறையுந் தண்புன லாடானை
யுறையு மீசனை யேத்தத் தீவினை
பறையு நல்வினை பற்றுமே.

10. மாய னும்மல ரானுங் கைதொழ
ஆய வந்தண னாடானை
தூய மாமலர் தூவிக் கைதொழத்
தீய வல்வினை தீருமே.

11. வீடி ஞார்மலி வெங்க டத்துநின்
றாட லானுறை யாடானை
நாடி ஞானசம் பந்தன் செந்தமிழ்
பாட நோய்பிணி பாறுமே.

திருச்சிற்றம்பலம்.

உ

## அருணகிரிநாத சுவாமிகள் அருளிச் செய்த

# திருப்புகழ்

ஊனாரு முட்பிணியு மாறாக வித்தவுட
லூதாரி பட்டொழிய வுயிர்போனால்-
ஊரார் குவித்துவர ஆவாவெனக் குறுகி
ஓயா முழக்கமெழ அழுதோய;
நாறா விதச்சிவிகை மேலே கிடத்தியது
நாறா தெடுத்தடவி யெரியூடே-
நாணாமல் வைத்துவிட நீறாமெனிப் பிறவி
நாடா தெனக்குனருள் புரிவாயே;
மாறாக துத்திமுடி மீதே நிருத்தமிடு
மாயோனு மட்டொழுகு மலர்மீதே-
வாழ்வா யிருக்குமொரு வேதாவு மெட்டிசையும்
வானோரு மட்டகுல கிரியாவும்;
ஆறா வரக்கருடன் வானோர் பிழைக்கவரு
மாலால முற்றவமு தயில்வோன்முன்-
ஆசார பத்தியுடன் ஞானா கமத்தையரு
ளாடானை நித்தமுறை பெருமாளே.

உ

# திருவாடானைப் புராணம்

## பாயிரம்

### விநாயகர்

பனைக்கர மிலட்டுக மணைத்தபடி பார
முனைத்தட மருப்பொருகை முன்றிகழ நின்றே
தனைப்பணி யறத்தினர் தமக்குள விருப்பி
னினைத்தது முடித்தவன் மலர்ப்பத நினைப்பாம்.

### ஆடானை நாதர்

பூமேவு சதுமுகனு மாழி மாலும்
புரந்தரனு மிகவுளபுங் கவர்கள் யாரு
மாமேவு சதுமறையுந் தேட நின்ற
வளரொளியை யானந்த மயமா யோங்கித்
தேமேவு சுவையமுதைக் கருணை ஞானச்
செழுங்கனியைப் பசியநறுந் தேனார் தண்பூங்
காமேவு மாடானைப் பதிவாழ் முக்கட்
கடவுளையா மிகமகிழ்ந்து கருதல் செய்வாம். (க)

### அன்பாயி அம்மை

மருக்கமழுங் குழலாளைக் கலைசேர் சோதி
மதியனைய முகத்தாளை வல்லா மென்றே
யிருக்குமிரு தனத்தாளை யிலையுண் டென்னு
மிடையாளை யடியவர்க ளெவரு ஞானப்

பெருக்கமுற நின்றுளை யுலகை யெல்லாம்
பெற்றுவளர்த் திறைவனிடம் பிரியா தோங்கு
மருட்கடலை யாடானைப் பதியன்பாயி
யம்மைமலர்த் தாளிணையை யகத்துள் வைப்பாம்.()

## கணபதி

சுருதிமுடி வாமிமையத் தோகைமுக நளினமலர்த்
துஞ்செஞ் சோதிப்
பருதியினை மயிற்குமர னுலகைவலம் வருமுன்னே
பரனைச் சூழ்ந்து
மிருதினிய கனிவாங்கி நுகர்ந்தானை யாடானை
மேவி யன்பர்
கருதிநினைத் ததுமுடித்த கணபதியைக் கைதொழுது
களித்தல் செய்வாம். (௩)

## முருகக் கடவுள்

கள்ளிருக்கு நறியமலர்க் கானகத்தில் வேடர்குலக்
கன்னி யான
வள்ளியள்ளித் தருந்தினைமா மகிழ்ந்தருந்தி யாங்கவளை
மணந்து வானிற்
றுள்ளியமஞ் ஞையிமேலறிச் சூர்தடிந்தண் டரைப்புரந்து
துலங்கா நிற்கு
மள்ளிலைவேற் குமாரகுரு முருகனிரு தாண்மலரை
யகத்துள் வைப்பாம். (௪)

## சம்பந்தர்

அம்பந்த மானவிழி யாதிபரை யகமகிழ்ந்து
செம்பந்தை நிகரான திருமுலைப்பா றாநுகர்ந்து
நம்பந்த வினையகல நண்ணியமெய்த் திருஞான
சம்பந்தர் செய்யமலர்த் தாமரைத்தா ளிணைபோற்றி. (௫)



## அப்பர்

கோட்டிபத்தைப் பணிவித்துக் கொலைவிடத்தை யமுதாக்கிப்
பூட்டியமா மறைக்காட்டிற் பொற்கதவந் திறப்பித்துக்
கூட்டியகற் பிணைமிதப்பக் கொற்றவனைந் தெழுத்தமைந்த
பாட்டிசைக்கு நாவரையர் பதமலரைப் பணிந்திடுவாம். (௬)

## சுந்தரர்

சுந்தர வநிதை யென்றே துதிபெறும் பரவை யார்தஞ்
சிந்தையி னூட நீர்ப்பான் செறிந்திடு மிரவி னுப்ப
ணிந்துவாழ் சடையா னைத்தூ தேகென வேவல் கொண்ட
செந்தமிழ் நாவ லூரர் சேவடி சிரமேற் கொள்வாம். (௭)

## திருவாதவூரர்

மைதவழ் குடுமி மாட மறுகணி மதுரை மூதூர்க்
கைதவ னெதிரே சேர்பாற் கடற்றிரை யெழுந்த தென்ன
யெய்தரு முதிய கானத் திசைநரி பரிய தாகச்
செய்தருள் வாத வூரர் சேவடி சென்னி சேர்ப்பாம். (௮)

## சண்டேசர்

பந்தமுறு மும்மலத்தின் றொடர்ச்சியினாற்
கறங்கூசற் பண்பு போல
வந்தபிறப் பிறப்பென்னு மலநீர்ந்து
பேரின்ப வாரி மூழ்கி
யெந்தையுயிர்க் குயிரான ஈசனையான்
பாலாட்டு * மிடங்கர் சாய்த்த
தந்தையடி யிணைதடிந்த சண்டேச
ரடிக்கமலந் தலைமேற் கொள்வாம். (௯)

---

* இடங்கர் = குடம்.

### அறுபத்துமூவர்

வேதநெறி சாதமென்றே விளங்குசைவத்
துறையினின்று வெண்ணீ றக்க
மாதரவா மகிமைதரு மைந்தெழுத்தின்
பொருளெனவே யகத்தி னோர்ந்தே
நாதனடி யவர்வேண்டும் பணியியற்றி
யருளடைந்த நாயன் மார்கள்
போதவடி வாயிருந்த அறுபத்து மூவரையும்
போற்றல் செய்வாம். (க0)

### திருநந்திதேவர்

தாரணி யிதழி வேய்ந்த சங்கரன் றிருமுன் வைகி
யோரணி யிமையோ ராதி யெண்டிசைக் காவ லாளர்
போரணி கணங்க ளேத்தப் பொற்புவேத் திரத்தை யேந்து
மாரணப் பொருடேர் நந்தி யடியிணை சிரமேற் கொள்வாம். ()

### சரசுவதி

தவள மெல்லிதழ்த் தாமரைக் கோயிலிற்
பவள மெல்லிதழ்ப் பாணிறப் பூண்முலை
துவளு மெல்லிடைப் புத்தகந் தோன்றுகை
யவளை நாளு மடிபணிந் தேத்துவாம். (கஉ)

### போதகாசிரியர்

முன்கயிலை தனிலிருந்து பிரம ஞான
முறைநால்வர்க் கருள்புரிந்து முனைசேர் சூலந்
தன்கையின்மான் மழுவிதுசே காஞ்சே ரங்கி
தமருகமீங் கிவைகரந்தெத் தலமும் போற்றப்
பொன்கலந்த மானிடமெய்ச் சட்டை சாத்திப்
பொருந்துசொக்க நாதனருள் புலவ னென்றே
தென்கமலை மேவு முலகப்ரகாசத்
தேசிகன்பங் கயச்சரணஞ் சென்னி சேர்ப்பாம். (கங)



### வாழ்த்து

மங்கலநான் மறையவரும் வானவருந் தனிவாழ்க
துங்கமெய்யன் பரும்பெருகு சுரபிகளு மிடர்தீர்க
பங்கயமின் வளர்சேது பதியரசே புவிவெல்க
திங்கள்மும்மா ரியும்பொழிக சிவசமயஞ் சிறக்குகவே. (கச)

மாநிலங்க டுயர்தீர்க வளர்தரும நெறிமல்க
ஞானநிறை முநிவரரு நற்குடியு மிகவாழ்க
கூனல்மதி சேர்மாடக் கொடிநிழற்று மாடானைத்
தானமுள பரிசனருஞ் சைவர்களுந் தழைக்குகவே. (கரு)

ஆதவனைத் துந்திருவா டானையரன் மான்மியத்தைச்
சூதன்மொழிப் படித்தமிழாற் சொல்லுவே னெனத்துணிதல்
பேதமிலாப் பிரசண்டப் பெருவளியின் வலியெதிரே
யாதரமற் றவன்வாய்க்கா லதுசெல்லொப் பாகுமரோ. (கசு)

சங்கரனார்ச் சனைவேட்டோ ரரவிந்த நாண்மலருந்
தாழைப்போதும்
பங்கமுற்றுங் கண்டகம்பற் றினுங்கொய்து புல்லிதழும்
பார்த்து நீக்கி
யங்கவைகொள் வாரதுபோ லென்வாய்ச்சொற் கவிமாசு
மகற்றி யீது
திங்களணி மவுலியெம்மான் சரிதையென்றுட் கொள்வார்க
டெளிந்து ளோரே. (கள)

நாதனருட் கயிலாய பரம்பரையாய் வரும்பொருளை
நன்று யாய்ந்து
வேதமுத லாகமங்கள் பலகலையெ லாந்தெளிந்து
விளங்கும் ஞான
மாதவர்கள் மருவுநைமி சாரணிய வனவாச
மகிழ்ந்தி யார்க்கும்
போதனைசெய் சூதமுநி புகலுமுயர் மூவாறு
புராணத் துள்ளே. (கஅ)

பிரமகை வர்த்த மென்னப் பேசும்பத் தாம் புராண
மாபிய றனிலா டானை மான்மியஞ் சவுந கற்கே
விரகறி சூதன் சொன்ன விதிப்படி தமிழாற் செய்வேன்
சிரமிசை கற்றோர் செம்பொற் சேவடி சேர்த்த லாலே. (ககூ)

அளவில்புக ழாடானை யண்ணறிருக் கதையையருந்
தமிழி னாலே
வளமருவச் செய்யெனவே தளபதியாம் வயிரவமால்
வழுத்த மேன்மை
யுளகமலா புரிபுரந்த சிதம்பரதே சிகன்றவத்தா
லுதித்த சேயன்
றளர்வில்கலை யறிவுணர்ந்த சாமிநா தக்குரவன் சாற்றி
னானே. (உ0)

பாயிர முற்றும்.

ஆகத் திருவிருத்தம். (உ0)

## நகரச் சிறப்பு

பொன்னுல களவை யெட்டி யளந்துவிண் பொருந்து மீனைத்
தன்னுழை சுடர்போற் றூங்குந் தன்மைய புரிசைச் செம்பொன்
மின்னுமா மேரு வெல்லை யளப்பபோல் விளங்குஞ் சென்னிக்
கன்னியங் கோபு ரங்க ணிரைநிரை கவின்கொண் டோங்க ()

நீடிய பனியாற் காலா னிறைகுளிர்க் குடைந்த சோதி
மாடமே லாய செய்ய மணிக்குட நெருப்ப ணைத்துக்
கூடிய கொண்ட லென்னும் படாகத்தைக் கொண்டு மூடி
யாடக மறுகு தோறு மணியணி யாக மேவும். (உ



தெற்றியிற் கழக மீதிற் செறிந்திடுங் கொடிகள் வானி
லொற்றையந் திகிரித் தேரோ னுலகினைக் கடந்து செய்ய
பொற்றன வரைவிண் மாதர் புலவியான் வாடுஞ் சோக
மற்றிட விசிறி வீசு மழகென வசையு மன்றே. (ந)

செம்பொனாற் செய்து வார்த்த சிகரத்தின் முடிமேற் சோதி
பம்பிய மரக தத்தாற் பண்ணிய கும்ப மோங்கல்
நப்புமந் நகரச் செல்வி நயங்கொள்செங் கொங்கை மீதி
லம்பெறு கருங்கண் போல வணிபெற விளங்கு மாதோ. (ச)

சித்திர கூட மீதிற் சேயிழைக் கொடிபொன் னரைப்
பைத்தகூந் தற்கு வாசப் பரிமளப் புகைக ளூட்ட
நித்தில வருவிக் குன்றி னீள்முகிற் குழாங்கள் சூழ
மொய்த்திடுந் தோகை யாலு முறையென விளங்கு மாதோ. ()

கணவரோ டூடு மாதர் கவின்மதிற் சிலைத்தூண் பாங்கர்
நணியவர் நேடக் கண்டு நகைநிலா முகிழ்ப்ப வாங்கே
திணியதூ ணருவி யோடச் சென்றவர் மாதர் சோகந்
தணவரு கண்ணீ ரென்று தைவரு மாட மோர்சார். (சா)

பஞ்சின்மெல் லடிக டோய்ந்த சுவட்டினைப் பதும மென்றே
அஞ்சிறை ஞிமிறு பாட அணிபளிங் கரங்கிற் சென்றே
வஞ்சிமெல் லடியார் தங்கள் வனமுலைக் குடைந்து கந்து
கஞ்சிலைவோச்சிநிற்றல் கவின்மின்னுக் கொடிகள் போலும். (எ)

மணிமய மாய்ச்செய் குன்றம் வாய்ந்தபொன் னுலகை யெட்ட
வணிகிள ரஞ்சி லோதி யந்நலா ரரம்பை மின்னார்
தணிதமி லார்கள் கூடக் காந்தர்கண் ணுடல் வாடுந்
தணியல்சேர் தாமங் கண்டு தாம்பகுத் தறிவ ராவார். (அ)

மஞ்சணி குழலா ராட வாவியின் வாளை தாவி
விஞ்சுவான் மீனந் தன்பான் மேவியே யளவ ளாவி
யெஞ்சலின் வான்யாற் றின்னீர் படிந்துமீண் டினிய வாசக்
கஞ்சமென் மலர்மேல் வந்து கண்படை கொள்ளு மாதோ. (கூ)

விரிபுனல் வாவி கஞ்ச மேபபா சிலையின் மீது
வரியளை கமஞ்சூல் கொண்டு வயிறளைந் தீன்ற முத்தைத்
தெரிதரு பவள வாய சிறையன முட்டை யென்றே
யரியதன் சிறைவி ரித்தே யடைபல கிடககு மாதோ. (க0)

கனல்விழிப் பரிய கோட்டுக் கவையடிக் காரா வாவிப்
புனலினை யுழக்க வாளை போய்வெடித் தாவிப் பெண்ணைக்
கனியினைச் சிதற வீழுங் கனிதெங்கு சூதம் பூக
வனநிரைக் கனியைச் சாடி வருக்கையங் கனியை வீழ்க்கும். ()

கொண்டல்கள் படியுஞ் செம்பொற் கோபுர நிலையின் பாங்க
ரெண்டரு கணிதத் தார்க ளெழிற்கலை நிரம்புந் திங்கண்
மண்டலஞ் சேர வந்து கடிகைதேர் மாக்கண் மோதுந்
தண்டினுற் புடைத்த தன்றோ தருங்கறை யாயதம்மா. (கஉ)

ஆவண வீதி மாடத் தம்பொன்மா ளிகையிற் சாதிப்
பூவண மடநல் லார்பாற் போந்தமா மதியைக் காந்தர்
மூவண விழியார் தங்கள் முகமென முத்தங் கொண்ட
மாவணச் சுவாதை யன்றோ மதிக்கறை யென்பார் மன்னோ. ()

பைத்திடுங் கரிய கூந்தற் பவளவாய் மின்னு ரன்பு
வைத்திடு பூச லாட மலர்க்குழல் சரிந்து தாழ
வுய்த்தவண் டவிழ்ந்த வந்த உடுபதி யிறுமென் றோடி
மொய்த்திடு மளியை யன்றோ முயற்கறை யென்பார் மன்னோ. (கச)

வெய்யவன் கதிர்கால் வீசி விரைவினிற் சென்று நீடு
மையமர் சோலை புக்கு வந்திடும் வேலை தன்னிற்
செய்யவெங் கதிரின் வெம்மை தீரப்பூந் தேறல் வாரி
பையவே வீசித் தென்றல் பனிமதி போலச் செய்யும். (கரு)

மஞ்சணி சோலை மீது மயினடங் குனிப்ப மந்தி
செஞ்சினைப் பலவின் மேவு தீங்கனி முழவங் கொட்டப்
பஞ்சமா மலர்மேல் வண்டு பாடவே கண்டு வந்து
தஞ்சிர மசைத்துச் சூதத் தருக்கணற் கனிக ணல்கும். (கசு)



தண்ணமர் வாவி யென்னுந் தையலுக் கணிய தாக
வண்ணமார் கமல மென்னும் வதனமுன் மலர நீண்ட
கண்ணெனக் கயல்க டாவக் காரணி குழல்க ளென்னப்
பண்ணமர் கீத மொய்ப்பப் பற்பல விளங்கு மாதோ. (கஎ)

புனனிறை தடாக மென்னும் பொற்கொடி குவளைக் கண்கள்
கனிவுடன் மலர்ந்து வாய்ந்த கயிரவ வாய்கள் விண்டு
வினியவார் புருவ மென்ன வெறிதரு மலைகள் வீசி
வனசமென் முகையாங் கொங்கை வயங்குமோர் சிறையின்மன்னோ()

மடல்விரி செம்ப ழுக்காய் வயங்கிய பூக மீதிற்
செடிபடு நாக வல்லிச் செழுங்கொடி தழைப்ப வாங்கே
கடிகண மியற்றி யின்பக் கலவிகூர் பெடையி னோடும்
படர்சிறை யனங்க டுஞ்சும் பற்பல கழனி சூழ (ககூ)

செந்நெலிற் றாள ராசித் திகழ்வலம் புரியி னாரங்
கன்னனித் திலக்கு வாலுங் கான்றிடு நிலவு வீச
மன்னிர வகற்றி யாங்கே வளர்சகோ ரங்க ளுண்ணத்
துன்னுநீ லங்கள் விள்ளத் துலங்குபல் கழனி யெங்கும் (உ0)

தாழ்வன மயில னார்கள் தரித்தபூங் குழலிற் றுமம்
போழ்வன விளைஞர் நெஞ்சம் பொன்னனார் நெடிய கண்வேல்
வீழ்வன புலவி மின்னார் மேலணி மணிப்பூண் மாலை
யாழ்வன கலவி தேர்ந்த வறிவுடை மாந்தர் புத்தி (உக)

வாடுவ மடவார் கொங்கை வரைச்சுமை பெறும ருங்கு
லாடுவ நடுக்க மெய்தி யணிதுகிற் கேத னங்கள்
பாடுவ திரங்கி மின்னார் பாணியில் வீணை நாத
மோடுவ தோவா நீத்த முயர்மணி முத்தா றன்றோ (உஉ)

அடிப்பன விழாவ றாத வாவண முரசப் பந்தி
குடிப்பன தணியல் மின்னார் கூந்தலின் மலர்மேல் வண்டு
துடிப்பன மின்னார் கட்சே லாடவர் மனந்தொ ளைத்துப்
பிடிப்பன நாதன் பாதம் பெரியவர் பரிவாய் நெஞ்சில் (உங)

பன்னருஞ் சிறப்பு வாய்ந்து பண்ணவர் முனிவர் போற்ற
பொன்னவள் பொருந்துஞ் செய்யம் போருகம் போல
[வோங்கிக்
கொன்னவில் கணிச்சி யேந்துங் கொன்றைவார் சடையா
[னென்றுந்
தன்னிகர் கயிலை யீதென் றுரைந்திடுந் தான மாகும் (௨௪)

**நகரச் சிறப்பு முற்றிற்று.**

**ஆகத் திருவிருத்தம். (௪௪)**

## புராண வரலாறு.

அருந்தவ முனிவர்க் கெல்லா மாசென விருந்து ஞான
மருந்தருள் செய்யுஞ் சூத மாமுனி வதன நோக்கி
திருந்திய தவஞ்சேர் தெய்வச் சவுநகர் செங்கை கூப்பிப்
பொருந்திய விருப்பி னேத்தி வினவுரை புகலலுற்றார் (௧)

வித்தக வேத நீதி வியாதனைப் பணிந்து போற்றி
யுத்தமப் பொருள்க டோர்ந்தே யுணருப சாந்த முளளோய்
பத்தாகட் கருளுஞ் சுத்த பக்குவ நிட்க ளங்கச்
சித்தனே துரியா தீத சிற்பரா நந்த வாழ்வே (௨)

ஓங்குமுப் பொருளி னுண்மை யுயர்ந்தமுக் காலச் செய்கை
பாங்குட னறிந்தட் டாங்க பாவனை நிருவி கற்ப
சாங்கனிர்க் குணச மாதி சாதித்த தருமக் குன்றே
நீங்கருங் கருணை ஞான நிதியென வளர்ந்த கோவே (௩)

பல்பவ மகற்று கின்ற பற்பல புராண மெல்லா
நலவுப கதைக ளோடு நயம்பெற வுரைத்தா யையா
யிலகுமாங் கதனி லாதி யிருடிக ளிறைஞ்சி யேத்து
மலர்விரி பாரி சாத வனத்தினின் மகிழ்ந்து வந்தே (௪)



வெய்யவன் முதலோர் முன்னம் விரும்பியே வேண்டும் பூசை
செய்யுமா திரதந நாதர் திருமகத் துவங்க டம்மை
யையநீ யறைவா யென்றே யன்பொரு வடிவு கொண்ட
சையமாந் தவமெய்ஞ் ஞானச் சவுநக முனிவன் கேட்க (௫)

வாரண மருப்புஞ் சந்தும் வாரியுட் கொண்டு செல்லுஞ்
சீருறு மணிமுத் தாற்றின் சிறப்பினை யுரைத்த வாறு
மாரண முழுது மேத்து மநாதியெம் மிறைவர்க் கேற்குஞ்
சீருறுங் கான மேன்மைச் சிறப்பினை யுரைத்த வாறும். (௬)

வள்ளவாய்க் கமலம் பூத்த மறைபயில் குரவ னந்நா
ளொள்ளரும் புவன மெல்லா மியற்றிய காலை நீடு
நள்ளிருள் சீக்குஞ் சோதி ஞாயிற்றை யழைத்தே யோங்குந்
தெள்ளொளி விரிக்கு மம்பொற் றேரினை நல்கு மாறும். (௭)

ஏகமாம் புரவி பூட்டு மிரதமேல் வைகும் பானும்
வேகமாய்க் கடவும் வேலை மேருவின் பாங்கர் நண்ணி
மாகமே நின்ற வாறும் வளரொளி வெய்யோ னெண்ணித்
தோகைவெள் ளெகின மூர்ந்த தோன்றலை நினைந்த வாறும்.()

சதுமுகன் வந்த காலைத் *தரணிதன் கருமஞ் சொல்ல
மதுமலர் மேலோன் பஞ்சாக் கரத்தினை வகுத்தே வால
விதுவளர் வேணி யானை விரும்பிய பூசை செய்ய
விதமுறுங் கரும பூமி யிடத்தினை யுரைத்த வாறும். (௯)

பொருகட லாடை சுற்றும் புடவியில் வருமா தித்தன்
றருமநன் னெறிசேர் பாரி சாதமா வனத்தில் வந்தே
நிருமலற் பூசை செய்வா னிறைபுனற் றடமுண் டாக்கித்
திருவிழா நடத்தி யாங்குத் திங்களொன் றிருந்த வாறும். ()

* தரணி=சூரியன்.

மாநதிக் கரைக டோறு மணியினை லருச்சித் தேத்தித்
தேனமர் கொன்றை வேணிச் சிற்பர னருளி னாலே
பானுவும் மகிழ்ந்தே செம்பொற் பருப்பதம் வலமாய் மேவ
நானிலம் பணியி ராசி நாயக னான வாறும். (கக)

அளப்பருஞ் சீர்த்தி பெற்ற வாடானைத் தீர்த்த மேன்மை
வளத்தினை வகுத்த வாறும் வாருணி சேனை சூழ
விளப்பிறைக் கன்னி நாக மிலகுகோ டீரத் தானைத்
துளக்கருங் கயிலை சென்று தொழுதுபின் மீண்ட வாறும். ()

செலவினிற் றுருவா சன்னாச் சிரமத்திற் றங்க வன்னோன்
சலமச மியானை யாகச் சாபத்தை யுரைத்த வாறும்
வலனுறு வருணன் கேட்டு மனத்துய ருழக்குங் காலை
கலசமா முநிவ னங்கண் காதலின் வந்த வாறும். (கங)

சகரர்தொட் டிடுநீ ருண்ட தமிழ்முநி மணிமுத் தாற்றி
னிகரறு கரைவா ழாதி ரத்நேசர் பாற்செல் லென்ன
மகரகே தனத்தான் வந்து வள்ளலைப் பூஜை செய்து
புகரறு சாபந் தீர்ந்து போற்றியங் கிருந்த வாறும் (கச)

தெளிபுனற் றடமுண் டாக்கிச் சிவலிங்க மொன்று தாபித்
தளிவளர் தவஞ்செய் மார்க்கண் டயனரு ளுபதே சத்தாற்
றளிரணி வில்வ மேன்மை தனையெலா முணர்ந்தே யீசர்க்
குளமகிழ் பூசை செய்தே யுயர்வரம் பெற்ற வாறும் (கரு)

ஆதிநா ளுணர்ந்த மார்க்கண் டயமுநி திருவா டானைச்
சோதியை யிறைஞ்சித் தன்பேர் சொலுந்தீர்த்த மொன்றுண் [டாக்கி
மேதினி புகழி லிங்கம் விதிமுறை யமைத்துப் போற்ற
நாதனங் கெய்தி வில்வ மகத்துவ நவின்ற வாறும் (கசு)

அண்டரும் பணிந்து போற்று மஜகஜ புரத்தில் வந்தே
தண்டளிர் வில்வ மூலந் தன்னிற்கண் டுயின்ற காலை
கொண்டவெஞ் சாபந் தீர்ந்து கோமகன் வானி லெய்தித்
திண்டிறற் குலிசன் போற்றச் சிறந்துவீற் றிருந்த வாறும் ()



செந்தமிழ் முநிவ னெய்திச் சிற்பரன் பூஜை செய்து
கந்தநீர்த் தடமுண் டாக்கிக் கவின்பெறு கரையின் மீது
சுந்தர லிங்கந் தாபித் தன்புடன் றொழுது வாழ்த்தி
வந்தனை செய்ய வேண்டும் வரமெலா மளித்த வாறும் (கஅ)

வேட்டிடும் வசிட்ட னென்ன மேவிடாத் தேறு தன்னை
யாட்டுரு வாக வன்னோ னங்கனஞ் சபித்த வாறும்
பாட்டிசை மகதி வீணை பயிலுநா ரதனங் கெய்திக்
கோட்டமில் வசிட்ட னுக்குங் குற்றமுண் டென்ற வாறும் ()

வசிட்டன்பால் வந்த தோட மாற்றவே மகதி யாழோன்
நசிப்பிலா டானை ரத்ந நாதனைப் பூஜை செய்ய
விசிட்டமா யுரைத்த வாறும் வேதியன் றேறுந் தன்னை
யிசைத்திரு வாடா னைக்கண் ணேகென வியம்பு மாறும் (உ0)

தேறுவு மணிமுத் தாற்றின் செழுமணிக் கரையில் வானோர்
கோனைமெய்ப் பூஜை செய்து கோமுத்தீச் சுரமா மாறும்
ஞானமா வசிட்ட னெய்தி நாதனைப் பூஜை செய்தே
யூனமாந் தோட மெல்லா மொழித்தவ னுயர்ந்த வாறும் (உக)

குருகுலத் துதித்த பார்த்தன் கோதறு பூஜை செய்து
பருதிபோ லொளிரும் பாசு பதாத்திரம் பெற்ற வாறுந்
திருவளர் விசயன் செய்த திருவிழாத் தரிசித் தோர்க
ளிருவினை யகற்றி முத்தி யெய்திவாழ்ந் திருக்கு மாறும். (உஉ)

அன்னம்வீற் றிருக்கும் வாவி யாடானைப் பதிவி சேட
மின்னணஞ் சுருக்க மாக விசைத்தரு தனையே நோக்கி
நின்னரு ளென்மேல் வைத்தா யென்றுநெக் குருகி யீசன்
பொன்னடிப் போதில் வைத்த புந்தியன் மீட்டுஞ் சொல்
வான். (உங)

இத்தல மகிமை யெல்லா மினியவித் தார மாகச்
சித்தம துவந்தென் மீது சேர்ந்தவா தரவி னாலே
யத்தனே யறைதி நின்சொ லமரர்க்கு மருந்த வொண்ணப்
புத்தமு தாகை யாலே பொலிவிருப் பாமெப் போதும் (உச)

சவுநக முனியிவ் வாறு சாற்றலே தவக்குன் றன்னான்
மவுநமாய் ரத்ந நாதன் மலரடி கருத்தி லுன்னிக்
கவரறு மனத்த னாகிக் கண்கணீர் சொரிந்து வார
வவனொரு யாம மட்டும் பரவச மானா னம்மா. (உரு)

பரவச மான சூதன் பரவச நீங்கிச் சொல்வா
னரவணி மவுலி யெந்தை யாடானை மேன்மை யெல்லாய்
வரமருள் குரவ னான வாதரா யணன்முன் னெற்குத்
திரமுடன் றெருட்டுங் காலை தெரிகுமோ வெனவை யுற்றே.
(உசு)

நலவுப தேச மாக நவின்றதைச் சொல்க வென்றே
யுலகினீர் வினைய வெல்லா முயிர்த்தொகை யனைத்தும் வேறு
புலனுறு தவந்தா னங்கள் புண்ணிய விரத மாதி
யலபல வியற்றா வண்ணம் பரகதி பெறுதற் கன்றே (உஎ)

வேறு

ஆதபன்வா ருணிவருண னன்மார்க்கண்ட
னவியுரோ மசன் வசிட்ட னகத்தி யன்சேர்
கோதமன்கா லவன்பரத்து வாச னன்பு
கொண்ட சநகாதியொரு நால்வர் மிக்க

மாதவஞ்செ யனத்துவச னரிச்சந்த் ரன்சீர்
மந்முசுகுந் தன்னதிலீ ரன்மாந் தாதா
வாதமில்பற் குனன்கோவும் பணியா டானை
யெந்தையிரு பாதமலர் சிந்தை செய்வாம். (உஅ)



வளர்பாரி ஜாதவனம் வன்னிவனம் குருக்கத்தி
வனமேற் கொண்ட
தளிரோங்கு வில்வவன முத்திபுர மாதி ரத்நேச்
சரமா டானை
கிளர்மார்க்கண் டேயபுரம் நல்லகத்தீச் சுரம்பதும
புரங்கே டில்சீ
ருளகாய கோமுத்தீச் சுரம்விஜயேச் சுரம்பனிரண்
டுளவா நாமம். (உகூ)

சித்திதரு முத்தாறு சூரியபுட் கரணிபுனற்
றிறலோன் வாவி
முத்திதரு மார்க்கண்ட முனிதீர்த்தந் தென்மலைய
முனிவன் றீர்த்தம்
பத்திதரு கிரகுண்ட மெனத்தீர்த்த மாறிவையுட்
படிந்த மேலோர்
சத்தியஞ்சத் தியமாகு நித்தியா நந்தநிலை
தன்னிற் சார்வார். (௩0)

ஈராறு திருநாம மோராறு நற்றீர்த்த
மிறையைப் போற்றிப்
பேராறு மொன்றொழிந்த நாலாறும்
பேறு பெற்ற
சீராரு மகிமைபெறு மாடானைப் பதியிலுள
சிறப்பை யெல்லாம்
யாராலு முரைப்பவரி தாலுமியாமறிந்த
வியல்பிற் சொல்வாம். (௩க)

வேறு

சாற்றக் கேளுஞ்ச வுநக ரேதவ
மாற்றல் கல்வி யறிவுபொ றுமையோர்
சீற்ற மின்மைக ருணைஜி தேந்திரிய
மேற்றம் பெற்றவர் நீரியல் பாகவே. (௫௨)

புராண வரலாறு முற்றும்.

ஆகத் திருவிருத்தம். (௭௬)

முதலாவது

## மணிமுத்தா நதிச் சருக்கம்

நல்வ ரந்தரு நாவலந் தீவினிற்
செல்வ ராமிரு தேவருந் தேடிய
கல்வி லாதிக்க டவுள் முளைத்தெழுந்
தொல்வ ளம்பதி யின்றுறை யின்கணே. (௧)

சீரி தாகச் சிறந்தினி தோங்கிய
பாரி ஜாத வனம்பல வுண்டவை
வாரி யார மலைவளங் கொண்டுசெல்
பாரின் மேம்படு பொன்னியின் பாங்கரும். (௨)

வீசு மெய்ப்புகழ் மேய குறுமுனி
யாசி லாத வருந்தமிழ் மாலைபோற்
றேசு லாவும் பலதுறை சேர்ந்திடு
மாசில் தாம்பிர வன்னி மருங்கினும் (௩)

வந்த மாநதி வைகை நருமதை
கந்த மாநதி கங்கை கவுதமை
யிந்த மாநதி கட்கிரு பானுமே
யந்த மாயுள தாங்கதி லாதியாம் (௪)



சந்த்ர பாகை சரயு மந்தாகினி
சிந்து கண்டகி திவ்விய கோமதி
பந்த நீக்குப்ர யாகை பலர்தொழ
வந்த கோதா வரிக்கு மதிகமாம். (௫)

பாச நீக்கும் விரத கிரிப்பாங்கி
லீச னாரரு ளாலின் னியத்திலே
ஓசை கொண்டுட னுற்பத்தி யாயது
தேசுடைப் பொன் மணிகளுஞ் சிந்தியே. (௬)

பன்னு செந்தமிழ்ப் பாண்டிய தேயத்தின்
மன்னு வேக வதியின் வடாதுபா
னன்மை சேர்மணி முத்த நதியென்ப
பொன்னு லாவவெப் போது மிலங்குமால். (௭)

சந்த கிற்குற டுந்தழை பீலியும்
செந்த ளிர்ப்பல தேக்கு வருக்கையும்
சிந்து ரத்தின் மருப்பொடு சேர்மணி
யுந்த ரங்கக் கரங்கொ டுருட்டியே. (௮)

நண்ணு பாலை நடுவுறுங் கூவலை
யுண்ணி றைத்துய சோலை யிருப்பையு
மெண்ணு மூலங்க ளிற்றிட வெற்றியே
கண்ணி வேடர்விற் கைவலை யேந்தியே. (௯)

கானு லாவிக் களிற்றுமி தவைமேன்
மானு லாவ வரும்பிர வாகமே
பான லாம்விழி யாய்ச்சியர் பாடியின்
மீனு லாவ மிகுந்து பெருகியே. (௧௦)

நாடி நீண்மரு தந்தனை நண்ணியே
யோடி மாமரை வாவி யுழக்கியே
யாடி யங்கவு ளன்னமன் றெல்லாங்
கூடி வீசிய குங்கும மேந்தியே. (௧௧)

சேறு செய்யுங் கழனியிற் றேக்கியே
யூறு சேதுவி னுள்ளணை தத்தியே
கூறு காஞ்சியும் வஞ்சியுங் கொண்டுதே
னாறு கோகந கமல ரேந்தியே. (கஉ)

கழிசி றந்தக ரையகத் தெய்தித்தேன்
பொழியு நெய்தலும் புன்னையுங் கைதையுந்
தழையு ஞாழலுந் தள்ளிப் புலான்மண
மொழிய வேகமோ டுற்றது நீத்தமே. (கங)

ஏரு லாம்பொரு ளீட்டிய வாடவர்
காரு லாவுமுன் காரிகை யாருழைச்
சேரு நீரிற் றினைப்பொருள் வாரியே
வாரி நீரொடு வந்து புகுந்ததே. (கச)

துறைக டோறுந் துலங்கு நவமணி
முறையின் வீசி முழங்குமுத் தாநதி
* யறலின் மூழ்கு மருந்தவர் பாவங்கள்
சிறைகொள் சிம்புண்முன் சிங்கம் விளிந்தபோல். (கரு)

உருமு வீழ வுரக மழிந்தபோ
லெரியின் மேற்படு மெண்ணரும் பஞ்சுபோ
† லரியின் முன்னுறு மாம்ப லினங்கள்போல்
‡ இரவி கண்டகன் றேகுமி ருளைப்போல். (கசு)

காம நெஞ்சினர் கல்வியி ழந்தபோல்
தீமை யோரக மானஞ்சி தைந்தபோல்
வாம விச்சையி னிற்கெடு மாயைபோல்
தாம ளித்திலர் தம்முழை வாழ்வுபோல். (கஎ)

---

* அறல் = நீர்

† அரி = சூரியன் : சிங்கம் ; ஆம்பல் = யானை.

‡ "துரிதந் துய்த்தடு தூர்த்தர்பொன் றேற்றல்போல்" என்றும் பாடம்



வேக மாருதத் தால்விளி கொண்டல்போ
லாகு மாதர வற்றவ ரீகைபோ
லேகும் *பாக்க னெதிருங் கருப்பைபோற்
சோக நீங்கத் தொலைந்திடுந் திண்ணமே. (கஅ)

தரும யோகியர் சித்தர் தபோதனர்
கரும மாகக் கடவுட் பாவுவோர்
பெருமை யன்பர்கள் பேதமி லந்தண
ரிரும ருங்குமி றைஞ்சிநின் றேத்துவார். (ககூ)

சிந்தித் தோர்க்கட்ட சித்திக ணல்கியே
சந்தித் தோர்கள் பவத்தினைச் சாடியே
வந்தித் தோர்கள் மலப்பகை மாற்றினான்
முந்தித் தோய்பவர் முத்தி மொழிவரே. (உ0)

வரிய ராக்கதிர் வெளவிய நாட்களி
லுரிய மாமக ரத்தி னுவாவினி
லரிசெல் கின்ற வயநமி ரண்டினில்
விரவு மேடத் துலாவிடு வின்கணும். (உக)

மற்ற மாதப் பிறப்பினில் மாளய
முற்ற பக்கத் துயர்விதி பாதத்திற்
பெற்றியாஞ் சென்ம நாளிற் பிதிர்தினத்
திற்ற நாட்களி லிந்நதி மூழ்குவோர். (உஉ)

அல்லல் செய்திடும் பாதக மைந்தறுஞ்
சொல்லு நோயொடு பேயுந் தொலைந்திடும்
வல்ல ஜன்மப் பிணியின் பகையறுங்
கொல்லுங் கூற்றுங் குரைகழல் போற்றுமே. (உங)

---

* பாக்கன் = பூனை ; கருப்பை = எலி.

கல்வி செல்வங் கருணை கனந்தருஞ்
செல்வ வின்பமுஞ் சீருஞ் சிறந்திடும்
நல்வ னப்பு நலமும் பொருந்திடும்
மொல்லை நெஞ்சி னினைத்த துறுமரோ. (௨௪)

முடிவி லாமணி முத்த நதிப்புனல்
படியு மாந்தர் படிவந் தரிசித்தோர்
கடிய வல்வினைக் கட்டறுத் தாலடி
யடிகள் செய்ய வடிநிழற் சேர்வரே. (௨௫)

பூத லத்தமு தென்னப் பொருதிரை
மோது மாமணி முத்த நதிக்கரை
*மீது தீசியில் விட்புலத் தண்டர்க
ளாதி மாமுனி வோருறை யவ்வனம். (௨௬)

**மணிமுத்தாநதிச் சருக்கம் முற்றும்.**

ஆகத் திருவிருத்தம். (௧௦௨)

இரண்டாவது

## பாரிஜாதவனச் சருக்கம்

திங்கள் சூடிய செஞ்சடைக் காளையார்க்
கங்கி யாசை யகத்திரு யோசனை
தங்கு மெல்லையுட் டேவ தருவனம்
பொங்கு பேரிசை யோடும் பொருந்துமால். (௧)

இவ்வ னத்தனென் றேத்தரி தாயவ
னவ்வ னத்தி லநாதி யிலிங்கமாய்
செவ்வ னப்‡பதங் கன்பணி செய்யவே
யெவ்வ னக்கொடி யோடு மிருக்குமால். (௨)

* உதீசி = வடக்கு. ‡ பதங்கன் = சூரியன்



*ஆகும் †பூசையு மன்பொ டமர்ந்திடும்
நாகங் கிரீக ளோடுநட் பாகுமே
காக மும்மைக்க ருங்குயி லுங்கலந்
தோகை யோடுற வாகி யுறையுமால். (௩)

கனலி யுங்கனற் றுலுங் கனதுதன்
புனமி கும்பணி மாமதி போல்வரா
லினமி குமிர லையிளங் கன்றுடன்
மனம கிழ்ந்து புலிப்பறழ் மல்குமால். (௪)

வரமி குந்தவ யப்புலி யொண்சிறைச்
சரப மோரணை யாய்த்தனி துஞ்சுமே
இரலை யின்மறி வால்குழைத் தேகியே
யுரமி கும்புலிப் பால்முலை யுண்ணுமால். (௫)

உரைசெய் பூவைக் குபநிட தத்தையே
பொருவி லஞ்சிறைப் பூம்பசுந் தத்தையே
சிரம சைத்துத் தினமும் பகருமே
வரம ளிப்ப வாணியும் பகருமே. (௬)

ஆல நாகம டுக்கநந் தோகையே
யால நாகம டுக்கநந் தோகையே
மாலை விண்டம னத்தள வத்திலே
மாலை கொண்டம னத்தள வத்திலே. (௭)

ஓதி மங்கய வாயிருந் துட்கொள
வோதி மன்கய வாய்வெல் மனுச்சொலு
மாத ரங்க வனமலர் மேலுறை
மாத ரங்க வனவல ரவ்வனம். (௮)

* ஆகு = எலி † பூசை = பூனை.

சிங்க மும்மத யானையுஞ் சேர்துறை
யங்க ணெய்திய ருந்துமப் பாவுடன்
செங்கண் வல்லியஞ் சேர்ந்திடு மாந்தரும்
பொங்கு முள்வயி ரம்மிலர் போற்றுவார். (கூ)

வாச நால்வகை வீயின் வரியினம்
மூசித் தாதனை யும்மது முன்னுணக்
கூசு நெஞ்ச மயக்கங் கொளுமெண
வாசில் சாம விசைபயி லும்மரோ. (க0)

புயல்கொள் காவிற்பொ ருந்துவண் டானங்க
ளயலின் வாவி யமுதுணு மவ்விடை
மயிலை வெளவில் வரும்பழி யென்றுணிச்
செயல தின்றிச் செயுஞ்சிவ தியானமே. (கக)

மனிதர் பக்ஷிமி ருகவ கையெலா
மினிய வாழ்வுட னேர்பெறு மத்தரு
முனிவர் சேவித்து மூரன் முதிர்ந்துளங்
கனிய வேதழைத் தோங்குமெக் காலமும். (கஉ)

பகர்கி ரேதாவி லேபாரி சாதமாந்
திகழ்தி ரேதாவிற் சேர்சமி ரூபமாந்
துகள றுங்குருக் கத்தது வாபர
மகம கிழ்கலிக் காமுயர் வில்வமே. (கங)

இப்ப டியுக மீரிரண் டிற்றரு
மைப்ப டிவடி வாகிய தாருவைச்
செப்ப மாய்த்தரி சித்திடு மேலவ
ரெப்ப வத்தினு மெய்துவ தில்லையே. (கச)

நன்னி லம்புக மாடானை நாதரைச்
சந்நி தானத்தில் வில்வந் தழைமலர்
மன்னி நாகமுற் றோங்கு மதியமுஞ்
சென்னி சேர்தலி னாலுஞ் சிவனுமே. (கரு)



வளந்தி ருந்திய வாடானை மன்னுகூ
விளந்த னிற்காள கண்டமு மேவலாற்
றெளிந்தி டும்பச்சை வன்னியுஞ் சேர்தலா
னுளங்க னிந்தும்ப ரீசனென் றோதுவார். (கசு)

வாக்கி னாற்சொல் மனத்தின் வலியினா
லாக்கை யாற்செய்த வைவகைப் பாவமுந்
தேக்கு தேந்தரு வைத்தரி சித்திடி
னீக்க லாமிது நிச்சய மாகுமால். (கஎ)

பாரிசாத வனச்சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் (கககூ)

மூன்றாவது

## சூரிய பூசைச் சருக்கம்.

தருமமே வடிவாஞ் சவுநக முநியே
தரும்பிர வஞ்சகா ரகமாய்
மருவிய முதன்மைப் பிரமகற் பத்தின்
மணிமய மாகியே விளங்கும்
நிருமலன் றன்னை யாயிரங் கதிரோ
னேசமாய்ப் பூசனை புரிந்து
பெருமைசேர் வரங்கள் பெற்றிடுங் காதை
பேசுவன் கேட்டியென் றுரைத்தான். (க)

வண்டுபாண் மிழற்ற முகைமுருக் கவிழ்ந்து
மதுமழை பிலிற்றவே விரிந்த
புண்டரீ கத்தி லாசுவீற் றிருந்த
புராதன சதுமறைப் புனித

வேறு

இன்னண மிசைத்த மலர்மிசைப் புத்தே
　　ளிளம் பிறை வானதி பாயும்
பொன்னவிர் கடுக்கைப் புனைசடைப் பரனைப்
　　பூசனை முறைமையிற் புரிவா
யென்னவாங் குரைத்துப் பராபரன் வடிவா
　　யிலகுமைந் தெழுத்தையு முறையா
யன்னவன் றனக்குத் திகழுப தேச
　　மாகமத் தின்படி புகன்றே. (க0)

மூவரின் முதல்வன் றனைப்பணிந் தேத்த
　　முதியநற் றனமெங் கென்னில்
மேவரும் பிரபை சகத்திர கிரணம்
　　விரிக்குமெய்த் திநகர கேளாய்
தாவில்சீர்க் கரும பூமியி லன்றோ
　　தவஞ்செய்து வரம்பெறல் வேண்டு
மாவதற் கண்டத் தளவினிப் பூமி
　　யதுவிது வாமென வுரைப்பாம். (கக)

வேறு

அணுவெட்டு ரோமநுனி யவையெட் டீர்க்கை
　　யவையெட்டாம் யூகையவை யதுவெட் டாகு
மெணு மெட்டு மவையோரங் குலம தாகு
　　மிசைநாலா றங்குலமோர் முழம தாகுங்
கணிதத்து முழநான்கு தநுவ தாகுங்
　　கருதுதநு விரண்டு தண்டாந் தண்டு தானுங்
குணிதத்தீ ராயிரமோர் குரோச மாகுங்
　　குரோசமிரண் டணைதலகே வியூதி யாமே. (கஉ)



எண்ணுகின்ற யோசனைதான் குரோசம் நாலா
　　மியல்புயோ சனை நூறு கோடி யாகும்
நண்ணுமக முயரமுமே சரியா மண்ட
　　நவிலு மண்ணுக் காயிரங்கோ டியதா மண்டம்
வண்ணமுள மண்முதலாய் நாத மீறாய்
　　வகுத்திடுதத் துவங்களுக்கிம் முறையே யண்ட
முண்ணிகழும் வித்தார மொன்றுக் கொன்றங்
　　குயருமிரு குணிதமதா யோங்குந் தானே. (கங)

பிருதிவியா யிரகோடி யண்டந் தன்னிற்
　　பேசியவிவ் வண்டத்தி னளவு சொல்வாங்
கருதுபுவி யின்கீழைம் பதுவாங் கோடி
　　கடாகமட்டு மிதன்மேலைம் பதுவாங் கோடி
யுரியமக மேருநடு வாம தற்கே
　　யுத்தரமைம் பதுகோடி யகல மாகு
மருவியதக் கணத்துமந்த வளவ தாகு
　　மன்னுமண்டப் பித்திகனங் கோடி கீழே. (கச)

இதனின்மேற் காலாங்கி யுருத்தி ரன்று
　　ணிருக்குமனை கோடியோ சனைய தாகு
மதன்மீதி லரியணையி லுயரந் தானு
　　மாயிரயோ சனையகல மிரட்டி யாகுந்
துதிசேரு மங்கியுருத் திரரா மேனி
　　துலங்கயுத யோசனையா மனற்கொ ழுந்தின்
கதிதானு மீரைந்து கோடி யாகுங்
　　கதித்தபுகை யதிற்பாதி காணுங் காலே. (கரு)

இவர்வலக்கை யினில்வாள்சத் திரமி டக்கை
　　யினிற் பலகை தநு சிருக்கு மிவரைப் போலுந்
தவமுடையர் பதின்மருள ரொவ்வொ ருத்தர்
　　தமைச்சூழும் பரிசனரோ கோடி யாகும்

பவனமிதன் மேல்நிரய மேழு நான்காம்
பகர்கோடி யோசனைதா னடுக்க டுக்கா
யிவையிருபத் தெட்டாமூ வகையாம் பாவ
மியற்றினர்கள் துன்பமுறு மிடமா மன்றோ. (கசு)

இத்தகைய நிரயமொரு கோடி யொன்றுக்
கிருக்குமிருப் புப்புடந்தா னதைப்பொ திந்தே
யத்தன்மை புடமிருபத் தொன்பா னொன்றுக்
களவொருகோ டியினுடனூற் றைம்பத் தோடு
வைத்தவெண்ணு யிரத்தறுநூற் றிருப தாகும்
வந்தபுடக் கனமுமிரு பஃதா மாங்கே
குத்திரர்சேர் நிரையமிசை நிராலம் பந்தான்
கூறுகின்ற முப்பதினுயி ரத்தின் மேலே. (கள)

இலக்கமுட னொருகோடி யிடமுப் பாக
மிதிற்கீழ்பால் மண்ணுகும் நடுவி ருப்பாங்
துலக்கமுறு மேல்பாகங் கனக மாகும்
சொன்னபுரி கூர்மாண்டர் வீற்றி ருப்பார்
கலக்கமிலா ருதயமார்த் தாண்டன் போலுங்
காந்தியுள்ளார் கனல்விழியார் மழுமா னேந்தும்
வலக்கையிடக் கையுடையா ரவரைப் போலு
மன்னுமுருத் திரர்கள்பலர் போற்ற வாழ்வார். (கஅ)

கொடியிடையார் பிடிநடையார் பவள வாயார்
கோங்கரும்பா யிளநீரா வீங்கும் கொங்கை
வடிவுடையார் பிணைவிழியார் மொழியார் பால்போன்
மஞ்சனவே வார்ந்தகருங் கூந்த லார்கள்
தடமுறுதா மரைமலர்மா மதியைப் போல்வ
தனமுடையார் கனமுடையார் பலர்தாள் போற்ற
வெடிகுரல்சேர் கணமிறைஞ்ச வளர்கூர் மாண்டர்
வீற்றிருப்பார் கொடுநிரய வேந்தர் தாமே. (கசு)



வேறு

ஓங்குபுரி மிசைவெளிதா னைன்பதுநூ றாயிரமா
மாங்கதன்மே லாபாத பாதாளத் தலமதுதான்
தாங்கியபத் திலக்கமதன் விரிவுதம னியவடிவாம்
பாங்குபெறு மதுதானு முப்பாகம் பலித்திடுமே. (உ0)

குணபாலித் தயித்தியரே குடியாகு நாகேச
ரணிசேரு மத்திமத்தி லடலரக்கர் மேல்பாலில்
வணமாக வீற்றிருப்பர் மற்றையபா தலந்தோறு
மெனுயோச னையினளவா மிராலம்ப மிடையிடையே. (உக)

வருமிதன்மேற் பதுமவொளி பாதாள தலம்வதியும்
பொருவிலதன் மேலிந்த்ர நீலதலம் பொருந்தியிடு
மருளதன்மேற் பூச்சியருக் காரிருக்கு மதலதலங்
கருததன்மேல் வெள்ளிமய பாதலங்கண் டிடுமாதோ. (உஉ)

மற்றதன்மேற் சாதலத்தைத் தானவொளி யெனமதிக்க
வுற்றதன்மேற் பாதாள நவமணிபோ லொளியிலகு
மிற்றிதன்மே லன்னியர்க ளெண்ணூறா யிரவருளர்
பற்றிதன்மேல் நிராலம்பம் பத்திலக்க யோசனையே. (உங)

வில்லிருக்கும் பிறைநுதலார் வித்துரும வொளி யிதழார்
வல்லிருக்குங் குவிமுலைமேல் வாரிருக்கும் வனப்புடையார்
சொல்லிருக்கு மியாழனையார் சுடர்மின்னுக் கொடியிடையா
ரல்லிருக்கு மலர்க்குழலா ரதலதல விலாசினியார். (உச)

செங்கமல நிகர்பதத்தார் செப்புமொழி யாலிதத்தார்
மங்கலஞ்சே ருருவுடையார் மாறாத திருவுடையார்
சங்கவளை யணிகையார் சார்ந்தவர்கள் மனங்கையா
ரிங்கிவர்க ளாடகர்தம் மிணையடியைப் பணிபவரே. (உரு)

வேறு

நண்ணுமதன் மீதுநவ விலக்கந் தன்னில்
நலமலியா டகநாதர் புரிதான் மன்னும்
வண்ணமனை யாயிரம்யோ சனைபொன் னாலே
வனப்புடைத்தாந் தயித்தியர்கட் டங்க மேந்தி
எண்ணிலர்க ளடிவணங்க வணையின் மேல்வீற்
றிருப்பரா டகவேந்த ரிதற்கு மேலே
மண்ணுலகி னகலமொரு கோடி யாகும்
வளமொளிசேர் வாலமார்த் தாண்ட வேந்தே. (௨௬)

அண்டகடா கக்கனமே முதலாப் பூமி
யளவாம்யோ சனைகோடி யைம்ப தாகுங்
கொண்டிடும்பா தாளமே ழினுக்கு நேரே
கூறுகின்ற பாதாள பிலவ ழிக்குந்
திண்டிறல்சே ராடகே சுரரே நாதர்
செல்லுபில வழியகலஞ் சகத்தி ரந்தான்
கண்டிடுபா தாலமுதல் நிரய வீறு
காறுமுள பிலவழிதான் கருதுங் காலே. (௨௭)

ஆயவண்டத் தோர்பாக முரைத்தோம் பூமி
யகலமது சதகோடி யாகு நாப்பண்
மேயமக மேருகிரி யிருக்கு மந்த
வெற்பிலக்க யோசனையாம் பூமி யின்கீழ்
பாயயோ சனைபதினா றயி ரந்தான்
புதிந்திருக்கு மேலேயெண் பத்து நான்கு
தூயசகத் திரமாம்யோ சனையு யர்ச்சி
சூழ்சகத்ர மீரெட்யோ சனைய தாமே. (௨௮)

அதனிரட்டி முடிங்கல மாகுஞ் செய்ய
வம்புயத்தின் பொகுட்டினைப்போ லிருக்குஞ் சுற்றி
யிதமுடனே பரந்திடுமே கலைகள் மூன்றங்
கிடையிடையே பொருந்தியிடு முடிவி டத்தில்



விதமுறுமே கலையினிற்பற் சிகர முண்டாம்
வேள்விநா யகன்முதலாந் திக்குப் பாலர்க்
குதவியதந் திசைசிகரத் துறைவார் நாப்ப
ணுயர்மூவர்க் குளவாமுச் சிகர மாதோ. (௨௯)

நடுமுளைத்த கொடுமுடியிற் பூரு வத்தில்
நண்ணுமநோ வதிவேத னுறையு ளாகுங்
குடதிசையிற் கொடுமுடிலை குண்ட மாயன்
கோயிலதற் கீசானி யத்தில் மன்னும்
வடிவுடைய சோதிகிரி யதனிற் சந்த்ர
மவுலியிருந் திடும்வரையி னடிவா ரத்தி
னிடமுடைய குணதிசைமந் தரவெற் பாகு
மிசைதெற்கிற் கந்தமா தனவெற் பாமே. (௩௦)

பச்சிமத்தில் விபுலகிரி யுத்த ரத்திற்
பாருசுவ வரையழுந்தி யிருக்கு நான்கில்
வைச்சகுண திசைமுதலாம் வரையின் மீது
வளர்கடம்பு நாவலச்சு வத்த மாலாம்
நச்சுகுண திசைமுதலாம் வரையின் மீதே
நண்ணுகுள மருணமா னதஞ்சி தோத
மிச்சைசெய்மா மடுவுளதா மடிவா ரத்தி
லிந்திரிதொட் டொருநான்கு திசையின் கண்ணும். (௩௧)

வளர்வுயர் சயித்திரிகா விசித்ரா நந்த
வனம்பிரச வனந்திருத்தாக் கியநாற் சோலை
புளதுநறுங் கனியென்று முதிர்க்கு நாவ
லோங்கியதென் றிசைக்கந்த மாத னத்தி
லளவகலு மகிமையொடுந் தழைத்த லாலே
யணிகொள்நவ கண்டமுநா வலந்தீ வென்பர்
தெளிவுறுமக் கனியுடைநீர் வலம தாகச்
செம்பொன்வரை யினைச்சுற்றிச் சேரு மாதோ. (௩௨)

அறைந்திடுசாம் பூநதநீர் தனைய ருந்து
மவராயுள் பதிமூவா யிரமாண் டாகு
நிறங்கனக வடிவாகு மிருக பக்ஷி
நெருங்கியு ணா மலைகளுமவ் வடிவ மாகுந்
திறங்குலவு மேருகிரி யதற்குத் தென்பாற்
றிகழ் மூன்று வரைகுணக்குக் குடக்கு வாரி
யுறும்பரிமா ணங்கிடக்கும் வடக்கு மற்றே
யுயர்வாயின் குணக்குமேற் கொவ்வொன் றாமே. (௩௩)

அட்டகுலப் பருப்பதத்தி னடுவே கண்ட
மவையொன்பா னாகுமிம கிரியின் றென்பாற்
றிட்டமுறு கண்டம்பா ரதமிக் காகுஞ்
சேரிதனை யொழிந்தகண்ட மெட்டுந் தேவ
ரிட்டமுறு முலகொப்பாம் பாரதந் தன்னி
னிசையுநவ கண்டமதிற் குமரி கண்டஞ்
சட்டமுறு மதில்வருணச் சிரம மற்றைச்
சாதிபே தம்மறைநூ றழைக்கு மாங்கே. (௩௪)

தேவகங்கை முதனதியுங் காசி யாதி
சீவன்முத்தி தலம்பொதியம் மயேந்த்ர மாதி
தூவியுயர் புண்ணியவெற் புளவாந் தீபஞ்
சூடுமெல்லை யாயிரம்யோ சனையா மற்றைத்
தாவறுவெண் ணாயிரம்யோ சனைமி லேச்சர்
சஞ்சார பூமியெனச் சாற்ற லாகு
மேவரிய யிந்திரங்கம் சேது கந்தர்
மிரங்கபதி துய்யசந்து விளங்கு நாகம். (௩௫)

மருவுசவு மியமேகாந் தருவ வெற்பு
வாருணமென் றெட்டுளதாங் குமரித் தீவில்
விரிவுறும யேந்திரமே மலயஞ் சைய
வெற்புயரூஞ் சுத்திகமே விருத்த வெற்பு



தருவளரும் விந்தியமே வாரி யாத்ரஞ்
சாற்றியவிக் கிரியேழு முளவா மந்தப்
பெரியவடி வாரஞ்சாக் கியமூஞ் சங்கம்
பேசுகுமு தம்வாரத் தலமு மாமே. (௩௬)

இலங்குகின்ற பொதியவரை யடிவா ரத்தி
லிசைதென்பாற் கநகமய விலங்கைத் தேசந்
துலங்குமிம கிரியீசா னியத்திற் றேவர்
தொழுதேத்துந் திரிபுரசுந் தரியோர் பாகத்
தலங்கலணி கொன்றைவார் சடையா னென்று
மமர்கயிலைக் கிரியுளதா கமநால் வேத
நலம்பெறுமெய்ப் பொருள்முனிவர்க் குணர்த்தி வேத
னாரணன்போற் றவுமங்க ணிருப்ப னாதன். (௩௭)

பனிவரைக்குந் தென்கடற்கு நடுவட் பூமி
பாரதமா மிமகிரிக்கு மேம கூடத்
தனிவரைக்கு நடுவுளகிம் புருட கண்டந்
தயங்குமத னுத்தரத்தி னிடத வெற்பு
மனியததன் றெற்கிலரி வருட கண்டம்
வானவர்சூழ்ந் திடுமேரு வரையைச் சுற்றி
யினியவள விரதகண்ட மாம தற்கு
ளிலங்குசாம் பூநதஞ்சூழ்ந் திருக்கு மாதோ. (௩௮)

சொன்னகிரி யுத்தரத்தி னீல வெற்பு
தோன்றுமதற் குதீசியிர மியமாங் கண்ட
மன்னுமத னுத்தரஞ்சு வேத வெற்பா
மற்றதற்கு தீசியிர ணியமாங் கண்ட
மின்னலறு சிருங்கவெற்பி னுத்த ரத்தி
னிரைகடற்கு நனந்தலையாங் குருகண் டஞ்சீர்
பன்னுகந்த மாதனத்தின் குடபால் மேலைப்
பாவைநடு கேதுமா லனம தாமே. (௩௯)

பொன்மலையின் குணக்குமா லியவான் வெற்பின்
பூருவத்திற் குணகடற்கு மேற்பாற் றீப
நன்மைதரு பத்ரமதில் வாழ்வார்க் குண்டி
நறுநீல மதிமேனி யயுத மாயுள்
மின்மருவு கேதுமா லனத்தில் வாழ்வோர்
மெய்ந்நீலங் கண்டகையின் கனியூ ணாயுள்
கன்மமறு மயுதமுள குருகண் டத்தோர்க்
காயுள்மூ வாயிரத்தோ டயுத மாமே. (௪௦)

வேண்டியநற் கனியுளவாம் புசிப்புப் பச்சை
மேனியுடை யாராலும் பெண்ணு மாகக்
காண்டகைய கருப்பமொரு பொழுதி லுண்டாய்க்
காந்திபெறப் பெற்றுமனங் களிப்பா ரந்த
நீண்டகுரு கண்டத்துத் தரபா கத்தி
னேசமிகு சாரணர்கள் முனிவர் சித்த
ராண்டுறைவர் மூலபலம் புசிப்பார் சோம
னவிரொளிமே னியர்சந்த்ர தீவி னாரே. (௪௧)

அத்தகையோர்க் காயுண்மூ வாயி ரத்தோ
டயுதமுள வாயுதிசை யதனிற் றேய
முத்தாஞ்சேர் பத்திரா சுரமா மங்க
ணுற்றிடுவர் சாரணர்கள் முனிவர் சித்தர்
வைத்தகனி மூலங்கள் புசிப்பா ராயுள்
வருமயுதத் தொடுமூவா யிரமா மேனி
சுத்தமுறு செங்கமல நிறத்த ராகுந்
துதிகொளிர மியத்தர்சந்த்ர மேனி யாரே. (௪௨)

ஆயுளயு தத்துடனீ ராயி ரஞ்சே
ரைந்நூற் மிகுசபல மசன மாகும்
தூயவிர மியத்தர்கருங் குவளை மேனி
துலங்குவரா லின்கனியே துய்ப்பா ராயுள்



மேயவிரண் டாயிரத்தோ டயுத மாகு
மேவுமரி வருடகண்டத் துறைவோர் தங்கள்
காயம்வெள்ளி கரும்பிரதம் புசிப்பா ராயுள்
கருதுமிரண் டாயிரத்தோ டயுத மாமே. (௪௩)

பொன்னுருவாங் கிம்புருட ரயுத மாயுள்
புசிப்பிரவிக் கனிமனத்திற் கவலை யில்லார்
மன்னுநரை திரைமூப்புப் பிணியொன் றில்லார்
மற்றையவேழ் கண்டத்தோர் வாழ்வு மீதாம்
சொன்னமுதல் யுகதரும மென்று முண்டாந்
துலங்கறிவு தேகபலங் குறையா தாகு
முன்னறிவு வலியாயு ளுருவ முங்கார்
முற்றும்யுக தருமம்பா ரதத்து ளோர்க்கே. (௪௪)

புலத்துழலால் வருமுணவே யன்றி யுந்தான்
புசிப்புளவா மற்றையகண் டத்து வாழ்வோர்
தலத்துயர்பா ரதத்தினில்முற் பவத்திற் செய்த
தருமத்தாற் செனிப்பர்கரு மஞ்செய் பூமி
நலத்தினிது வாமதனு லெவர்க ளுந்தாம்
நண்ணியருந் தவம்புரிவர் பார தத்தின்
றலத்தினுக்குத் தாங்குருகண் டத்தி னந்தந்
தங்குமெல்லை யிலக்கம்யோ சனைய தாமே. (௪௫)

மேருகிரிக் குடக்கொடுபூ ருவத்தி னந்தம்
விதிக்கினுமத் துணையாகு மிவற்றின் முன்னஞ்
சேருமநு குலத்தார்க்கு நேத்ர வேந்தன்
சேயர்களொன் பதின்மராண் டதனு லன்னோர்
பேருலகில் விளங்கியது கண்டங் கட்குப்
பேசுபா ரதம்பரத பூமி யாகு
மேருலவு நாவலந்தீ வெல்லை சொல்லி
லிலக்கயோ சனையாகு மிதனைச் சூழ்ந்தே. (௪௬)

கரியவுவர்க் கடலிலக்க மதனைச் சூழ்ந்து
காமர்பெறு சாகத்தீ விரண்டி லக்கம்
விரிதருமத் துணையதைச்சூழ் கீர வாரி
விளம்புமதைச் சூழ்ந்திருக்குங் குசத்தீ வெல்லை
வரிசைபெறு நாலிலக்க மதனைச் சூழ்ந்த
வாரிததி யாமளவவ் விலக்க மாகும்
தெரியுமதைச் சூழ்ந்தகிர வுஞ்சத் தீபஞ்
சேர்ந்திடுமெட் டிலக்கநெய்யின் கடலெட் டாமே. (௪௭)

இத்தகைய கடற்கப்பாற் சான்ம லித்தீ
வெட்டிரண்டா குங்குணித விலக்க மாகும்
வைத்தவதைச் சூழ்ந்தவிக்கு ரசத்தின் வாரி
வகுத்திடுமக் குணிதமதைச் சூழ்ந்தி ருக்கு
முத்தமகோ மேதமெண்ணான் கிலக்க மாகு
முற்றதைச்சூழ் மதுக்கடலு மக்க ணக்கா
நித்தியமா மிதைச்சூழ்புட் கரணித் தீப
நிகழ்ந்திடுமெட் டெட்டிலக்க நினையுங் காலே. (௪௮)

ஈங்கிதனைச் சூழ்ந்தசுத்தோ தகத்தின் வாரி
யெல்லையுமத் துணையாமிவ் வேழு தீவில்
வாங்குதிரைக் கடற்கரையி னதனைச் சூழ்ந்த
வரைகளுமோவ் வொன்றுளதாஞ் சாக மாதி
தாங்குமிரு மூன்றுதீ பத்தில் வாழ்வார்
தங்களுக்குச் சுகமலது துக்க மில்லை
பாங்குபெறு நரைதிரைமூப் பின்றி யாயுள்
பகரயுதங் கலியுகத்தின் பரிசு றாதே. (௪௯)

உரைத்திடுதீ வேழுகட லேழு வெற்பு
ஓரேழு கனகநிலஞ் சக்ர வாள
வரைக்கணமற் றிருட்பூமி பெரிய வாரி
மன்னுமண்ட கடாகத்தின் கனவ ரைக்குந்



தரைக்குளுயர் பூதலமா மொளியங் கோர்பாற்
றாங்குமிருட் பிழம்பொருபா லோங்கு வெற்புற்
றரித்தமுற்பா கத்திராக் கதரி யக்கர்
தங்குபைசா சருமினிது சரிப்பர் மாதோ. (௫௦)

குணக்குமுதற் றிசைப்பாலர் வதிவார் விண்ணோர்
குழாங்கள்பொற்பூ மியிலீல்விளை யாடு வார்க
ளிணக்கமுறு தம்முடலைக் கறித்துத் தின்றே
யிருட்பூமி யினிற்றம்மை வதைத்தோர் சேர்வார்
கணக்குறுமே கடாகத்தின் கணமோர் கோடி
கருதுபெருங் கடலுமொரு கோடி யோடு
தணப்பிலநா லேழிலக்கத் தூன மொன்று
தமநிலமூ வேழைந்து கோடி யாமே. (௫௧)

ஒன்றான மாகியநா லைந்தி லக்கத்
துடனேயெண் ணைந்துசகத் திரமா மேன்மை
குன்றாத சக்ரகிரி சொன்ன பூமி
குலவயுத மொருபஃது கோடி யாகு
நன்றாகு மிருபத்தே ழிலக்கத் தோடு
நண்ணுமொரு கோடிசத்த சமுத்தி ரந்தா
னன்றாதி யமைத்தநில மேழு மிந்த
வளவாகு மயுதமைந்து குறையத் தானே. (௫௨)

வேறு

கூறுமெல்லை பஞ்சாஷட் கோடிமே ருவினிறுவாய்த்
தேறியபூ வுலகினின்மே லுலகந்தெ ரித்திடுவா
மாறுசெயுஞ் சூரியமண் டலமிலக்க மதன்மீதே
மாறில்மதி மண்டலமு மத்துணையா மதிக்கிலரோ. (௫௩)

உடுவுலக மதன்மீதே வோரிலக்க மதன்மீதே
வடுவில்சவு மியனுலக மிரண்டிலக்க மாமதன்மேல்
விடுசுடர்ச்சுக் கிரனுலக மீரிலக்க மேற்செவ்வா
யிடமிலக்க மிரண்டதன்மே லீரிலக்கங் குருவுலகே. (ருச)

இதன்மீதே யீரிலக்கஞ் சநியுலக மெனவறிக
யதன்மீதே யோரிலக்க மெழுமுநிவ ரமருலகந்
துதிசேரு மதன்மீதே துருவனுல கோரிலக்க
மிதமாகும் பூமிமுத லிலக்கமு வைந்தாமே. (ருரு)

சொல்லுமிதன் மீதுபுவ லோகமாந் தொகையதன்மேற்
புல்லுமெண்பத் தைந்திலக்கம் புரந்தரனூர் சுவலோகம்
வல்லவதன் மீதிலிரு கோடியா மகலோக
நல்லமா தவர்கள்மரீ சியுமதனி னண்ணுவரே. (ருசா)

ஈங்கிதன்மேல் ஜனலோக மிருநான்கு கோடியுறு
மோங்குமதிற் பிதிர்தேவ ருறைவார்க ளதன்மீதே
தாங்குமா றிருகோடி தனிலிருக்குந் தவலோகம்
பாங்குசந கன்முதலாம் பயிறவத்தோ ருறைவாரே. (ருஎ)

கூறுமிதன் மீதிரண்டு கோடியிற்சத் தியலோகம்
பேறுதரு முலகினில்யாம் பிரிந்திடா திருந்திடுவாம்
தேறுமிதன் மேலாழி செங்கைமுகி லுறையுலகும்
வீறுபெறு நாற்கோடி மேலிருக்கு மெனவறிவாய். (ருஅ)

குறிக்குமிதன் மேலாறு கோடியின்மேற் சிவலோக
மறிக்கரமும் விழிக்கனலு வரிப்புலியி னதளுடையும்
பிறைக்கணியு நதிப்புனலும் பிறங்கியபொற் சடைமுடியுங்
கறைக்களமு முடையபிரான் கவுரியுட னினிதுறையும். (ருகூ)

அண்ணலுறை யுலகதன்மே லண்டகடா கக்கனந்தா
னென்னுமொரு கோடியா மிதற்கீழு மவ்வளவாம்
பண்ணமருஞ் சதகோடிப் பரப்பாமிவ் வண்டமதில்
நண்ணுசம்புத் தீவினிற்பா ரதகண்ட நவமாமே. (கூ0)



ஒன்பதினு யிரமதனி லோரெட்டு முத்தரத்தில்
மின்பயில்வெய் யோயதுமி லேச்சராச் சியமாகு
மன்புடைய குமரிகண்ட மாயிரயோ சனையாகு
மின்புறுபுண் ணியபூமி யிதிற்சயிலம் பலவுளவே. (கூக)

மேலாம்புண் ணியநதிகள் விரும்புதவ வனம்பலவா
மாலால முண்டபிரா னருட்சயம்புத் தலம்பலவா
மாலாய பவந்தீர்க்க வருந்தீர்த்தம் பலவுளவாம்
பாலாய மனமுநிவர் பயிலாச்சி ரமம்பலவே. (கூஉ)

தீர்த்தமுடன் மூர்த்திதலந் திருந்துமிடம் பலவாகுஞ்
சீர்த்திபெறு மீரேழு புவனத்திற் செறிவோரு
மோர்த்தயங்கு மிவ்விடைவந் தியற்றியபூ ஜாபலத்தால்
மூர்த்தியரு ளாற்போக மோக்ஷபலன் பெறுவார்கள். (கூந)

மாலவனே முதலமரர் வழியாக் கதாசுரர்
சீலமுநி வரர்மனிதர் சேடன்முதற் பாதலத்தோ
ரேலவிந்தக் கருமபூ மியிலியற்றும் புண்ணியத்தாற்
சாலவரும் பாவத்தாற் சுவர்க்கநர கஞ்சார்வார். (கூச)

ஆதலாற் றினகரனே யரியபுண்ய பூமியினிற்
சீதமணி நதிக்கரையிற் றேவியோ டினிதிருக்குஞ்
சாதிமணி மயவிலிங்க சம்புவைப்பூ ஜித்திடுவாய்
வேதமுதல் வெளிவந்து வேண்டுவரங் கொடுத்திடுமே. (கூரு)

வேறு

கருமமின் கிதமும் முறைபிற ழாது
கடவுளை யருச்சனை புரிந்தா
லிரவிநீ கிரக நாயக னாகி
யிசைப்பிர மாண்டமட் டியரோ

ருருளது விசைத்துக் கலினவாம் புரவி
யொன்றுபூட் டியவுன திரத
மருவியே நடக்கு மிதற்குவே றையம்
வருவதே யிலையென வறிவாய். (௬௬)

என்றுரைத் திலகு மென்றுவுக் கருளி
யென்றுய ரகற்றுநான் மறையோன்
சென்றுமுன் மறையப் பிரமவாக் கியத்தைத்
தேசுடைப் பாநுவுட் கொண்டே
மன்றலங் கடுக்கை வான்மதி புனையும்
வார்சடைப் புண்ணியப் பொருளை
நன்றுடன் பூசை புரிவதற் கெண்ணி
நானில மீதினில் வந்தான். (௬௭)

பவமெலா மகற்றும் புண்ணிய தலமாம்
பாண்டிய தேயமாங் கதனி
னவமணி கொழிக்குந் திரைமணி முத்தா
நதிவட கரையினிற் றண்ணு
ரவிர்மதி வேணிக் காளையார்க் கங்கி
யாசையி லிரண்டுயோ சனையில்
தவமிகும் பெரியோர் வணங்கிய பாரி
சாதமூ லத்திடை மகிழ்ந்தே. (௬௮)

இருவினை யகற்றி முக்குறும் பெறிந்தே
யிசையுநாற் கரணமு மடக்கி
வரும்புல னைந்தும் வெலுமுரோ மசர்சீர்
மார்க்கண்ட முநிமுத லாய
வருமறை தேரு முநிவரர் தமைக்கண்
டகமகிழ்ந் தங்ஙன மெய்திப்
பெருகொளி நீல மணிமய மாகப்
பெருமைசே ரிலிங்கத்தை மகிழ்ந்தே. (௬௯)



விதிமுறை யாவா கனம்பணி நறிய
விரைமலர் தூயருச் சித்தே
துதிமொழிந் ததற்பின் சயம்புவா யாவில்
சோதியா மிலிங்கமற் புதமாய்
வதிதரு மகத்தி னுதீசியி லணித்தாய்
மாதவர் பணிந்திடு மேன்மை
யதிகநற் பாரி சாதமா வில்வ
மதற்குறும் பூருவ திசையில். (௭௦)

மருவுகாற் பாணக் கடையினிற் புனித
மகத்துவ தீர்த்தமுண் டாக்கி
யருணனுங் கதற்குத் தனுதுநா மஞ்சேர்த்
தறனிறை யத்தடந் தனக்கு
நிருதிதிக் கதனி லுறைந்திடு மாதி
நிருமல விலிங்கத்தின் வடபாற்
கருணைவா ரிதியாங் கவின்பெறு சிநேக
வல்லியைக் கருத்திலுண் மகிழ்ந்தே. (௭௧)

இலகொளி பரப்புஞ் சகலமெய் வனப்பு
மிலக்கண முழுவது முடைத்தா
யலரருள் வடிவாஞ் சிநேகவல் லியைச்சை
வாகமப் படியருச் சித்தே
நலமருள் சிவனைத் தினந்தொறு மேத்தி
ஞாயிறு திங்களொன் றிருந்தே
யுலகெலா முவப்பத் தனுதுபேர் வாவி
யுறுதிரு மஞ்சன மாட்டி. (௭௨)

சந்திர திலக மணிந்துநாண் மலரிற்
றணியல்சே ரணியல்க டரித்து
மந்திர முறையே நிவேதனம் புரிந்து
மணந்தரு தூபதீ பங்கள்

சுந்தரம் பெறுசோ டசவுப சாரஞ்
சொலுமுறை யியற்றியே துதித்து
வந்தனை புரிந்து தியானச மாதி
மருவினன் வாலமார்த் தாண்டன். (எங)

பூசனை யுவந்த வில்வ வனேசன்
பூரண நிறைமதி யனந்த
தேசுடைப் படிகத் திருவுருத் தோன்றச்
செஞ்சடை வெண்பிறை தவழ
மாசறுநீல கண்டமுந் துலங்க
வளர்பச்சை யிலதைபால் விளங்க
ஆசில்வெள் விடைமேல் வந்துமுன் னின்று
னருங்கண நாதர்கள் போற்ற. (எச)

காண்டலு மிரவி கண்களி கூர்ந்து
கலிங்குநீ ரெனப்புனல் வாரப்
பூண்டயங் குடலம் புளகமாய்ச் செங்கை
புடைத்துநின் றாடினன் பாடி
நீண்டமா லறியாத் திருவடி மலர்மேல்
நிலமுறப் பணிந்தன னெழுந்தா
னண்டநா யகனைச் சிரத்தின்மேற் செங்கை
யஞ்சலி குவித்துமுன் றுதித்தான். (எரு)

எண்ணுதற் கரிய புவனகோ டிகளை
யெழில்பெற வமைத்ததிற் சிறந்து
நண்ணுபற் பலவாந் தருவினிற் றோன்று
நவையிலான் மாக்களைப் படைத்தே
யுண்ணிறை தவத்திற் குறுபய னுதவி
யொழிவிலா வானந்த மருளு
மண்ணலே பாரி சாதமா வனத்தி
லையனே நின்னடி சரணம். (எசு)



அறிவினுக் கறிவா யணுவினுக் கணுவா
யருவமா யுருவம தாகிச்
செறிதரு பூத மனைத்துமா யளவைத்
திறத்தினு லறிவரும் பொருளாய்க்
குறிகுண மிலதாய்க் குறைவிலா நிறைவாய்க்
கூறுதற் கரியவாய் நின்றோய்
நறியபூம் பாரி சாதமா வனத்தில்
நாதனே நின்னடி சரணம். (எஎ)

மெய்யடி யவர்க ளிதயதா மரையின்
மேவிய பரமனே சரணம்
பையர வணையி லரியய னறியாப்
பனிமதி வேணியாய் சரணம்
செய்யகோ கநக வதனமின் பாகா
தேவர்க டேவனே சரணம்
மையறும் பாரி சாதமா வனத்தில்
வள்ளலே நின்னடி சரணம். (எஅ)

என்றிவை பலவு மேத்த வெம்பெருமா
னிரவிநீ யுலகினை வலமாய்க்
குன்றெனு நெடுந்தேர் மிசையினி தேறிக்
குலவுதி யெனவருள் புரிந்து
சென்றன னிலிங்கத் தினிலருள் பெற்ற
தினகரன் விநாயகன் றிகழும்
வென்றிவேற் குமரன் முதலவ ரான
விண்ணவர்க் கவரவர் மறுவால். (எகூ)

செழும்பிர திட்டை பணியருச் சித்தே
செவ்விதின் வளம்பெறு முருகி
னெழுந்தருள் சோமாஸ் கந்தரே முதலா
மெழிலுறு திருவுரு வமைத்தே

கொழுஞ்சுட ரிரவி யணிவிழா நடாத்திக்
கோதிலா நல்வர மடைந்தான்
முழங்குநீ ருலக முழுவதுந் துதிகண்
மொழிந்திடு மத்தலந் தனையே. (௮௦)

அன்றுதொட் டியம்பு மாசிலா நாம
மாதிரத் நேசுர மாகுந்
துன்றுமெய் யடியார் சூழ்ந்துவந் தனைசெய்
சோதிரத் நேசனை நினைப்போர்க்
கொன்றிய சோதிட் டோமமா மகப்பே
றுற்றிடு மாதி ரத்நேச
னென்றுளங் குளிர வொருதர முரைத்தா
லீறிலா முத்தியை யடைவார். (௮௧)

மன்னுமத் தலத்தின் பெருமையை யரவ
மன்னனும் வழுத்துதற் கரிதாந்
துன்னுமன் பதையோர் சுடரவன் றடத்திற்
றோய்ந்திடி லன்னவன் மநுவை
யுன்னிநீ ராட லுத்தம மன்றே
ரொளிதிகழ் பாநுவி னுலகந்
தன்னிலே யடைவார் சகலசித் திகளுந்
தழைத்திடு மாங்கவர் தமக்கே. (௮௨)

பவமெலா மகற்று மத்தட மதனிற்
படிந்திடு மேலவர் பிதிர்க்கள்
தவமிகு பிரம சந்ததி யான
சநகர் சநந்தா ராவார்
அவமிருத் தகலு மரியநோய் தீரு
மணிபெறுஞ் செல்வமு முண்டாம்
புவனியி னினிதாய்ப் புந்தியி னினைத்த
பொருளெலா மெய்துவ ரன்றே. (௮௩)



ஏதமி றரணி யிறைஞ்சிய தலங்க
ளின்னமுண் டியம்புவ னென்னச்
சூதமா முநிவன் சவுநக முநிக்குச்
சொற்றனன் தொலைவிலா துயர்ந்த
மாதவர் பணியுந் தாமிர வருணி
மாநதிக் கரையினுத் தமஞ்சேர்
பேதமின் மகிமை யருச்சுன தாருப்
பெருமைசேர் மூலத்தி னுவந்தே. (௮௪)

சூசக விலிங்க மெனும்பெயர் தரித்த
சோதியை யருச்சனை புரிந்தான்
றேசரி மூன்று வதுபுனற் பொன்னி
திகழுமு தீசியங் கரையி
லாசறு கோடீ சுவரர்நேர் குடக்கி
லாம்பிரே சன்னெனு மிலிங்கம்
பூசனை புரிந்தா னதற்கிசை மேற்கிற்
பொருந்துமி யோசனை நாப்பண். (௮௫)

துலங்கிய சோதீச் சுரனெனு நாமஞ்
சொலுஞ்சிவ லிங்கத்தை யுவந்து
நலம்பெறு பூசை யியற்றினன் க்ருதமா
லாநதிக் கரையினில் நண்ணும்
தலம்புகழ் கூடற் பிராசிவம் பலிலே
தழைத்திடுங் குக்குலு விருக்ஷ
வலன்றிகழ் மூலத் தினிற்பிர வாள
வடிவமா யுமையொடு மருவும். (௮௬)

அந்தரங் கேச னெனுந் திருநாம
மணிசிவ லிங்கத்தை முறையான்
முந்தவே யமைத்துப் பெருகிய பூசை
முடித்தன னவ்விலிங் கத்தைப்

பந்தரீங் கிடவே தரிசனஞ் செய்வோர்
பழுதிலா முத்தியை யடைவா
ரந்தமா தலத்தீ சானிய திக்கிற்
கணியதா முத்தர திசையில். (௮௭)

புத்திர தீப தருவின்மூ லத்திற்
பொருவில்முத் தீச்சுர னெனும்பேர்
வைத்திடுங் குறியை யருச்சனை புரிந்தான்
வரந்தரு மந்தநல் லிலிங்க
முத்தியை யளிக்கு மொருமையாங் கரண
மூன்றுடன் றரிசனஞ் செய்தான்
மெய்த்துயர் செயுங்குட் டாதிரோ கங்கள்
வினையெலா மகன்றிடு மாதோ. (௮௮)

இப்படி வரங்க ணல்கியே யிலிங்க
மிருக்குமவ் வனத்தினிற் றென்பா
லொப்பறு மானை மடுவெனுந் தீர்த்த
முற்றிடு மொளிநவ மணிக
ளப்பலை கொழிக்கும் பொன்னியின் வடபா
லழிவில்பாண் டியகண்ட மதற்குச்
செப்புமுத் தரத்தி லிரத்தியந் தாருச்
சிறந்திடு மூலமாங் கதனில். (௮௯)

சோதியாம் பதிரீச் சுரனெனுஞ் சிவனைத்
துகளறு பூசனை முடித்தான்
றீதிலா வந்தப் பதரியந் தருவைத்
தெரிசனம் புரிந்தமா னுடர்கள்
கோதிலா யோக ஞானமே பெற்றுக்
குறைபடா முத்தியை யடைவ
ராதலா லதனைத் தரிசனஞ் செய்யு
மப்பலன் றனக்கிணை யிலையே. (௯௦)



வான்புனற் கிர மாநதிக் கரையில்
மருவுசித் தீசுரர் குடபாற்
சீர்புனை குலிசத் தருவின்மூ லத்திற்
றிகழ்வயி ரேரிய மயமா
யேர்புனை குறியை யருச்சனை புரிந்தா
ரியாவரு மவ்வயி னிறைஞ்சிற்
சார்புறும் பிரம ரக்ஷசு முதலாச்
சாரல கைகளகன் றிடுமே. (௯௧)

இன்னதோ ரிலிங்கத் தினிற்குட திசையி
லோர்பெறு குந்தமூ லத்திற்
பன்னரும் பிரபே சுரனெனு நாமம்
பகர்ந்திடு சயம்புவைக் காந்தி
மின்னமர் கோமே தகத்தினாற் பூசை
விதித்தன னவர்தமைப் பணிவோர்
முன்னரும் பிதிர்க ளியாவருந் தேவ
முக்கிய மடைவர்க ளன்றே. (௯௨)

நீர்வளர் கந்த மாநதிக் கரையில்
நிகழ்கிரண் டேசர்தங் குடபா
லோர்வளர் மகிமை வில்வமூ லத்தி
லிசைகப தீசனை யினிய
சீர்வளர் பூசை யியற்றின னந்தத்
திப்பிய மூர்த்தியைப் பணிவோர்
பேர்வளர் சருவ காமிய மெய்திப்
பிரிவிலா வீட்டினைப் பெறுவார். (௯௩)

துங்கபத் திரமா நதிக்கரை தன்னிற்
றுலங்கிய தோர்விருப் பாக்கர்
தங்கிய குடபாற் சயம்புமூ லத்திற்
றருகிர ணேசுர னெனும்பேர்

பொங்கிய சிவனைப் பூசனை புரிந்தாற்
 பொலிவுறு மவர்தமைத் தொழுதாற்
றங்குல மகவி லார்களு மினிய
 சந்ததி யெய்தியே தழைப்பார். (கூச)

இனையன மகிமை விசேடநற் றலங்க
 ளெய்தியே கதிரவ னிறைஞ்சி
நனையவி ழிதழிச் சடைமுடிப் பெருமா
 னல்லருள் பெற்றொளி ராழி
தனையமைத் திடுபொற் கொடிஞ்சியந் தேர்மேற்
 றயங்கவீற் றிருந் தன னமர
ரனைவரும் புகழக் கிரகநா யகனென்
 றம்புலி முதலுடு வகைக்கும். (கூரு)

மேடமே முதலா வருமிரா சிகட்கு
 மேம்படு மதிபதி யாகி
நீடக லிடங்கண் முழுவதும் பரந்து
 நெருங்கிருட் பிழம்பினைப் பருகி
தோடணி கமலச் செங்கைமங் கையர்க
 டுலங்கிரு மருங்கினு மிருக்க
வாடக வரையைத் தினம்வலஞ் செயமே
 லாயினு னவிர்சுடர்க் கதிரோன். (கூசு)

பரவிய பிரம கைவருத் தத்திற்
 பகர்ந்தபூ ருவகண்ட மதனில்
விரவிய பாரி சாதமா வனத்தில்
 மேவுக ஜேசர்மான் மியத்தில்
திரமுறு பஞ்ச தசாத்தியா யத்தைச்
 செப்பின மின்னுமத் தலந்தான்
வரமருள் திருவா டானையா முறைமை
 வகுத்தது மென்றனன் சூதன். (கூஎ)

**மூன்றாவது சூரிய பூசை சருக்கம் முற்றும்.**

ஆகத் திருவிருத்தம் (உகசு)

நான்காவது

## வாருணி சாபமடைந்த சருக்கம்.

தனையிறை தனையறி சவுநக முநியே
 தலைமைகொள் வெயில்விரி தரணி யநாளி
னினைவுறு பூசனை புரிதரு தலமே
 நிறைவுறு மறநெறி மிகவள ரிடமா
மனையென வருளிய வில்வ வனேசர்க்
 கணிய ஈசானிய திசையினி லடர்சீர்
புனைதிரு மலமுற வவணனி திகழும்
 பொருதிரை யெறிபுன லுவளக முளதால். (க)

அத்தட நிறையமு திற்படி வோர்க
 ளட்டம சித்திகள் பெற்றிடு வார்க
ணித்திய தற்பரர் தக்கண திக்கி
 னிட்டை செய் மார்க்கண் டயனகழ் பட்டம்
வைத்திடும் விற்கடை பஞ்சத சத்தில்
 வட்டம தாய்வடி வுற்றிடு மதுவே
யுத்தம மெய்த்தவ ருக்கல தெய்தா
 தொப்பறு மப்புன லிற்படி வோர்க்கே. (உ)

அடுத்திடர் செயுமவ மிருத்தகன் றிடுமா
 லானரு ளுறுமங் கலகர மாகுங்
கடுத்திகழ் மிடற்றரன் வடக்கினோ ரெல்லைக்
 கண்ணிசை தண்ணமர் புண்ணிய தடமாந்
தொடக்கறு துருவா சமுநிசொல் சாபஞ்
 சுற்றிய வாருணி தொல்வினை யெல்லாம்
விடுத்திட வந்தமா வருணன கழ்ந்த
 விசிகா மெறியறல் பெருகிய தடமே. (ங)

மங்கையொர் பங்கின னங்கி திசைக்கண்
மன்னிய பாணக் கடையரை யதனிற்
செங்கை யிலங்கிய குண்டிகை தங்குஞ்
செந்தமிழ் தந்திடு கும்பச முநிவன்
கங்கை யெனும்படி கண்டிடு தீர்த்தங்
காசினி மீததி பாவ மகற்று
மிங்கிவ கைப்படி சூத னுரைப்ப
வெழில்பெறு சவுநக முநிவின வுவனுல். (௪)

வேறு

சீத நற்புன லிறைவ னல்கிய செம்மல் வாருணி தன்னையே
மாத வத்துரு வாசமா முநி வன்க றுத்துரை சாபமங்
கேத னைத்தையும் விரிவ தாக வியம்பு வாயென வீறிலாச்
சோதி சிற்பர ஞான முற்றிடு சூத மாமுநி யோதுவான். (௫)

முன்ன மந்தர கற்ப நாளினில் மொழியு மாதி யுகத்தினில்
நன்ன லந்தரு புட்ப பத்திர நதிவ ளந்தரு ஞாங்கரே
மன்னு சித்திகள் பெற்றி டுந்துரு வாச மாமுநி மோகியாய்த்
துன்னு மைம்புல நெறியை வென்றிக ரூடரு மாறும டக்கியே. ()

மாப ரப்பிர மத்திலே மனதைச்செ லுத்தியவ் வழியில்வாய்த்
தீப முற்றதெ னப்பெ ருந்தவ சித்தி யெய்திய காலையிற்
சாப முற்றிடு செங்கை வாருணி தமனி யத்தட விரதமேன்
மீப திக்கிணை யாக வேபடை வெள்ள மோடட னேகினன். ()

விண்ண வர்க்கும லர்க்க ணாயிர மேவு வாசவ னுக்குமே
நண்ணு தற்கரி தாகி வானக நாடு வெள்ளி விலங்கலிற்
புண்ணி யப்பொரு ளாய நான்மறை புகலு மற்புத சிற்பரன்
வண்ண வார்குழன் மங்கைபங் கற மணியணிக்கணில் வைகியே. (௮)



எரியெ னத்திகழ் குஞ்சி வெள்ளெயி றிலகு பூதக ணங்கள்சே
ரரிய யன்முநி வோரு ருத்திர ரட்ட பாலவ சுக்கடோர்
புரிந ரம்பிசை நார தாதிகிம் புருடர் விஞ்சைய ரேனையோ
ரிருமருங்கினு மடிபணிந்தினி தேத்த வண்ணலி ருந்தனன். ()

எந்தை யின்னண மேவு காலையி லேரு லாவிய வாருணி
சிந்தை யின்புற வந்து சிற்பர தேவ னைத்தரி சித்துமா
விந்தை மாலறி யாத தாளையி கத்து தித்துவ ணங்கியே
தந்தை தன்பதி செல்ல வேயொளிர் தார வீரம கன்றனன். ()

அல்ல றீர்சிவ யோக ஞானிய ரமர்க டம்பல நீங்கினன்
மல்ல னீணெறி நள்ளி னிற்றுரு வாச மாமுநி வைகிய
தொல்லை யாச்சிர மங்கண் முன்றனி தோன்ற வந்தவ னந்தனை
யெல்லை யற்றத வத்தி னரிட மென்றி றைஞ்சலி லாமலே. (௧௧)

புவனி காவல்செய் பால னல்கிய புதல்வனென்று மதத்தினற்
றவப தாதிக ளோடு மோர்பக றங்கி னுயர் தன்மனஞ்
சிவமெ னுந்துரு வாச மாமுநி சேனை யோடுறும் வாருணி
யவம தித்திடு மதமு ணர்ந்துள மழலெ னச்சின முற்றனன். ()

வெஞ்சி னத்தொடு மேவி யேகரு வஞ்ச மஞ்செய வேனுமென்
றெஞ்சு சாப முரைத்த னனுட லிபமு மாநந மசமு மாய்
விஞ்சுகோல மடைந்தி டக்கட வாயெனப்புகழ் மேன்மைசேர்
தஞ்ச மாதவன் சாப மோதிய தன்மை வாருணி யெண்ணியே. (௧௨)

வேறு

இருடிக ளுக்குள் மகிமை படைத்த
எழின்முநி பக்க லினில்வந்தே
பெருகு விருப்பி னடிபணி வுற்றே
பிழைசெயு மெற்கிங் குரைசாப

மருவிய துக்கங் கடிவத னுக்கோர்
வகையினி திற்சொல் வாயென்றே
யுருகு மனத்தோ டுதக கருத்த
னுதவிய புத்ர னுரைசெய்தான் (கச)

உரைசெயு மங்க னுலையிடு பொன்போ
லுருகிய சிந்தை யுடையோராய்த்
தரையிட மெங்கும் பணிய விருந்த
தபசு புரிந்த துருவாசன்
கரைதரு மின்சொல் லருளின னந்தோ
கடிதி னடைந்த கனசாபப்
புரைய தகன்றே விடுவகை யன்பாய்ப்
புனலிறை வன்சேய்க் குரைசெய்வான். (கரு)

வேறு

பச்சிம மாதிர நாயக னைய
பாலன ளிடுத்திடு பாலக கேளாய்
மெச்சுத போதனர் தமையவ மான
மிகவுமி யற்றினை மின்னிகர் வாழ்வை
நிச்சய மெனவெணி நின்மத மதனா
னெறியற வேவரு சாப மடைந்தா
யச்சமி லாதிசை நம்முரை தப்பா
தாதலி னுவிவை யறுபவ மாமால். (கசு)

வேறு

அலகில் பன்னிரு வருட மசகச வுருவ மெய்தி யதன்பின
ரிலகு குறுமுநி யருளி னூன தினிய தாதையொ டெய்தியே
மலர்கள் விரிதரு பாரி சாத வனத்தி னுப்பண்வ திந்துவாழ்
கலமெ லாமரு ளாதி ரத்தின நாதர் சந்நிதி நண்ணுவாய்.(கஎ)



நண்ணி யேமிரு கண்டு புத்திர னவில வக்கர மைந்தையு
முண்ணி றைந்தவ ரங்க ணல்குப தேச முற்றுட னுதயவன்
புண்ணி யப்புனல் வாவி மூழ்கிய பொழுது சாபம கன்றிடு
மண்ண னண்ணிய வத்த லத்தினை யனைய தாகிய தலமரோ.()

புவனி மீதிலி னுள்வ ரந்தரு புணிய பூமியி னும்மிலை
நவம தாயினி மேல்வ ரும்பெரு நற்ற லத்தினு மில்லையாற்
றவவ னத்திறை தநய கேளுயர் சதும றைக்குல வருணரை
யவம திப்பொரு கானு மேசெய லாகு மோசெயி லேகுமோ()

ஆன வைந்துலோ கங்க ளிற்றனி யதிக மாவன நிதியமே
யூன மில்மிரு கத்து மேன்மைக ளூற்றதோர் பேறு பெற்றமே
நானி லத்துறு நதியின் மிக்கது நங்கை யாகிய கங்கையே
வான நாடரின் மகிமை யுற்றவு னம்பு சூழ்சடை நம்பனே. ()

கதிர்பொருந்தினர் தன்னில் மிக்கவன்கருதி லேதமில்பருதியே
புதிய நற்பற வைக்குண் மிக்கது பொருவி லாதுயர் கருடனே
சதிர தாமினி யயிர தம்மவை தமில்வி சேடநல் லமிழ்தமே
துதிகொ டபனரி லதிக மானவர் துங்க மேவிய வங்கியே. ()

பேசு மந்திர மதனில் மிக்கது பிரண வம்மென வுரைசெய்வார்
தேசி னேடு செபித்த மந்திரஞ் சிந்தை சேரெழுத் தைந்துமே
யாசி லாவிவை போல மக்களி லதிகர் மறைபயில் முதியரே
நேச வவரிலும் மேன்மை பெற்றவர் நிரும லந்தரு சரியையோர்.

பெற்றி மேவிய வவரின் மிக்கவர் பெருமை யாகிய கிரியையோ
ருற்ற வவரினு மேன்மை பெற்றவர் யோக நிட்டை விவேகரே
வெற்றி மேவிய வவரின் மிக்கவர் மேய விருப்பு வெறுப்பிலோ
ரிற்றி தொன்றினுக் கொன்று மிக்கன வென்ன வன்னவை
புன்னியே. (உ௩)

அகில மீதுள வறிவு ளோர்மறை யந்த ணுளரை நிந்தியார்
புகலு மவர்தமை நிந்தை செய்திடு புந்தி யோரிடம் வந்திடு
மிகலு றும்புக ரெத்த லத்தினி லேகி னும்யுக மாகினுஞ்
சகல மாம்பரி கார முஞ்செயுந் தரும மாலவை யொருவுமோ.

வேறு

ஆயதி னாலே தலமுயர் தீர்த்த மருடரு சிவமூர்த்தி
தூயவி சேடமு மோரிட மதனிற் றெருகுமவண் மறையோகி
யேயவ நுக்கிர கத்தினி லெய்தி யிரவிசெய் தடமூழ்கி
நேயம தாகிய லோபமி லாதுநி ரம்பிய தானமுமே. (௨௫)

மாழைக ளிரசத முதலிய பொருளும் வகைவகை யாநல்கி
யேழையொர் பாகன் றாளிணை மீதினி லன்பொடு பூசித்தா
னாழைய டைந்திடு சாபம கன்றே யுனதுரு வெய்துநிச
மாழியை யாளு மிராச குமார வதுகா றுந்தானே. (௨௬)

பூருவ ஞான நினக்குற வேயருள் புரிகுவ னெனமேன்மைத்
தூருவ வாசனி வாறுள வெல்லாஞ் சொல்லிய வக்கணமே
வாருணி வாரண வுருவ மடைந்தான் வருமவ் வுருவுடனே
காருறு கானுயர் வரைபா ரிடமெங் கணுமே சுற்றினனால். ()

இன்னண நிகழுங் காலையி லமுதத் திறைபால் வருமொற்றர்
துன்னினர் வாருணி சாபமடைந்திடு தொன்மையுரைத்திடலு
மன்னவ னெஞ்சம ழுங்கியி ரங்கின னல்லுற் றேமிகவு
மின்ன லுழந்திடு தன்மக வின்பா லெய்தின னெதிர்மேவி. ()

கண்டனன் வாருணி துருவைச் சிரசுங் காரா னையினுடலுங்
கொண்டுறு பலமுறு சாபத் துயரங் கூர்தரு பசிதீரத்
தண்டழைகொய்துகொடுத்தேயவனைத்தன்னுலகிற்கொடுபோய்
மண்டலை வாருதி மன்னருள் செய்வான் வந்தகொ டுஞ்சாபம்.

எவ்வண மகலு மெனவே யிடருற் றிசைபச் சிமதிசைசேர்
திவ்விய வுலகத் தமர்தரு காலை செய்த தவப்பலனால்
வெவ்வினை யகலுங் காலவி சேட மேவிய தாலவணேழ்
பவ்வமு நீரை யுண்டிடு மலையப் பைந்தமிழ் முனிவந்தான். (௩௦)



செந்தமிழ் முனிவன் வரவெதிர் காணூஉத் திசையிசைப் பால
னெனுஞ்
சுந்தரவருண னெழுந்தெதிர்சென்றேதொழுதர்ச் சனைமுதலா
வந்தனை பலவு மியற்றிமெய்ம் முனிவரின் மகிமை படைத்தமறை
யந்தண னுக்கறு சுவையொடு மினியந லடிசி லளித்தனனே.

அடிசி லயின்றபி னகமகிழ் வாய்மல ராசன மேயகுறு
வடிவுள முனிமுன மெய்திய வருணன் மகவுக் குறுசாபக்
*கடிவையினுருவம்பெறமுனிசொல்லிய காரணமெவையும்வகைப்
படியுரை செய்தா னவ்வுரை முழுதும் பழமறை முனியெணியே.

அறவிறைபயமகலுவையெனவோதி யகத்தியனெண்ணிநெடும்
பொறையவ ளகமுள வுளக மெவையும் புணிய தலங்களையு
நிறைதவ வாச்சிர மங்களை யுங்கதி நெறிசெய் மகத்துவமே
யுறைபுனல் வருதுறை களையும னத்திலி யோசனை புரிகாலை ()

மாதவர் வழிபடு புண்ணிய பலனருள் வைகைத் திருநதியை
மேதகு தெய்வத யோகத் தாலுனி வில்வ வனஞ்செறியு
மேதமி லாத தலத்தை மனத்தினி லெணிமகிழ் வுற்றனனென்
றூதர வாய்வளர் சூதனு ரைப்பா னருடரு முற்கதையே. ()

வாருணி சாபமடைந்த சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் ௨௫௦.

ஐந்தாவது

## வாருணி சாபவிமோசனச் சருக்கம்

மாமதி யேபெறு சவுநக முனியே வருபவ நாசமுறப்
பூமதி குறுமுனி புகறரு மவைபுக லுவன்முறை பிறழாமற்
றூமத மறுசத் துவமொடு கேட்டி †தசும்பினில் வருமுனிவன்
கோமக னாகிய வருணனை யினிதுகு றித்திவை கூறினனால். ()

* கடிவை=யானை. † தசும்பு=குடம்.

மாதிர வுழைவளர் பாலனை னப்புகழ் வளர்மு தறிவுடையாய்
தீதில்வ ரம்பெறு புனலிறை வாநின் சிறுவர்க் குயர்முநிவ
ஞேதிய சாபம கன்றிட வெளிதினி னுரைசெய் வனகேளாய்
மேதினி மிசைகா விரியி னவாசியின் மீனவ *னேணிதனில்.

†மனவலை யெறியறல் பெருகிய வைகையின் வடபா லடலேசெய்
சினவிடை கடவிய கானே சற்கரி திசையிரு யோசனைசூ
ழினமலர் வில்வவ னத்தினி லாதியி ரத்தின நாயகர்தாங்
தினமகிழ் வாய்வளர் வாரத் தலமே திவ்விய மாமிடமே. (௩)

அரந்தைபு ரிந்திடு மாபா வங்கள கற்றியிவ் வகிலமெலா
நிரந்தர மானவு யிர்த்தொகை யெல்லா நிகரறு முத்திபெற
வரந்தரு நாதன் வந்திடு மத்தல மகிமைசொ லுந்தரமோ
கரந்துள ரிந்திடு பஞ்சம பாதகக் கட்டுக ளற்றிடுமே. (௪)

வாருண நாயக வத்தல மகிமை வழுத்திய கதையமுதந்
தாரணை யாகவ ருந்தவ ருந்தத் தத்தஞ் செவியுறவே
பூரண மோடுதெ விட்டுவ தில்லை பொருவறு சீர்திகழு
மாரண முரைசெயி ரத்தின நாதன மர்ந்திடு தானத்தில். (௫)

கரியுரு வம்பெறு சிறுவனு நீயுங் கடிதினி லெய்தியவண்
அரியகழ் வாவியின் மூழ்கப் பன்னுவை யதின்மூழ்
[கியவுடனே
தரிகய வுருவமு மொருவமுன் னுருவந் தனையடை
[வாய்நிசமே
புரியது வன்றே முதலா யசகச புரமென வருநாமம். (௬)

அண்ண றனக்கு மஜகஜ நாயக னுகுந் திருநாமம்
நண்ணும் வேலையில் மார்க்கண் டேயனை நயனங் களிகூர
வுண்ணிறை காதன்மி கத்தரி சித்துப சாரமுடன் றெழுதப்
புண்ணிய னருளான் மெய்ப்பொரு ளாகிய பொருவி
லெழுத்தைந்தும். (௭)

* ஏணி = காடு. † மனவு = சங்கு.



கற்றுட னின்சேய் நியமம் பெறவே கருணை நிதியாக
வுற்றிடு தக்ஷண மூர்த்திமு னணியே யொருமு விருலக்க
நற்றய வோடுசெ பஞ்செய வேபவ நாசமு றும்வேலை
கொற்றவ னின்சுதன் முன்னா னெய்திக் கோதில்வ ரந்தருவான்.

அரனருள் பெற்றே நின்றிரு நாமத் தாலொரு தடமகழ்வித்
தரனொடு தெய்வத யோகத் தாலே யுயர்வர மேபெறுவாய்
திரமுறு மிவ்வுரை சத்திய மேசத் தியமைய மில்லையென
வரன்முறை யிப்படி குறுமுநி செப்பினன் *வனமன்
மதித்திடவே. (௯)

என்றிவை சவுநக னுக்குயர் சூத னியம்பின னறலிறைவன்
வன்றிறல் மைந்தனு டன்றிகழ் கற்பக வனமதி லினிதெய்தித்
துன்றிய மலயத் தென்றமிழ் முநிவன் சொல்லிய படிவழுவா
தொன்றுபு ரத்நே சுரர்சந் நிதியி னுதயவ னறல்மூழ்கி. (௰)

புரைசேர் சாபத் துயர மகற்றிப் பூருவ வுருவெய்தித்
தரையோர் வானவர் பணிரத் நேசுரர் சந்நிதி யினினண்ணித்
திரைநீர் விழியின சொரியவ ணங்கித் தரிசித் தேகமலப்
பரைவாழ் கூவிள மூலத் தின்முனி பாலினி தினில்வந்தான்.

வந்துவ ணங்கி யெழுந்து துதித்தே மலர்விழி நீரருவி
சிந்தவு ளங்கனி வுறவறன் மன்னன் சேயன் பரவுதலும்
புந்தி மகிழ்ந்தே மார்க்கண் டயமுநி பூவை யிடப்பாகச்
சுந்தர ரத்நே சுரர்மகி மைச்செயல் தெரியச் சொல்லுற்றான்.

வேறு

நித்தியமா யொன்றாகி யநந்த மாகி
நிட்களமாய் நிராமயமாய் நிகழ்நாதி
முத்தநிரு மலமாகி ஞாநா நந்த
முழுமுதலா யகண்டபூ ரணமா யென்றுஞ்

* வனமன் — வனம் + மன் — வருணன்.

சத்தியமாய் விசுவமுமாய் விசுவா தீத
    தற்பரமா யருள்வடிவாஞ் சயம்பு வாகிப்
பத்திசெய்மெய் யடியவரை யெளிவந் தாளும்
    பராபரமிவ் வருட்குறியின் பான்மை யன்றே. ()

அருவமா யுருவமாய் ரூபா ரூப
    மாகுநவ வடிவாகி யப்பா லாகிக்
கருதுமன வாக்கினுக்கு மெட்டா தாகிக்
    காரியகா ரணங்கடந்த காக்ஷி யாகி
மருவுபசு பாசஞா னத்தாற் காணு
    மறைமுடிவா யைந்தொழிறன் வயத்தாற் செய்து
தருகரியா விகாரமின்றி யொன்றாய் நிற்குஞ்
    சயம்புவா மிவ்விலிங்கத் தன்மை யென்றான். (கச)

நிமலநிரு விஷயநிர்த் தொந்த பாவ
    நிருவிகற்ப பக்வசுத்த பத்தர் நெஞ்சக்
கமலமல ரணைவாசத் துரியா தீதக்
    கைவல்ய முத்திகா ரணவஞ் ஞானத்
திமிரதிந கரபரம பரமா நந்த
    சின்மயசா க்ஷாத்கார சிவசித் தாந்த
அமரகுரு பரவடவா னீழல் மேய
    அற்புதனிவ் வருட்குறியா மைய னன்றே. (கரு)

சகசமல சகிதகே வலவான் மாவை
    தநுகரண புவனபோ கத்திற் றாக்கி
நிகழ்சகலத் தினிற்சனன மரண வூசல்
    நேராகச் சுழல்வித்து நெடுநா ளன்பிற்
புகறருசத் திநிபாத நல்கிச் சன்மப்
    புணரிகடக் கும்புணையாய்ப் போத மாகித்
திகழுமெழுத் தைந்துதவிச் சுத்த மாக்குந்
    தேசிகனிவ் வருள்வடிவத் தெய்வ மென்றான். (கசு)



மயல்புரிமா யாதநுவை நிசமென் றெண்ணி
    வரும்விடயப் புசிப்புவா தனையாற் பன்னாட்
செயமனது தெவிட்டாம லுழலான் மாவாஞ்
    செம்பிலுறு காளிதங்க டரும் வண்ண
மியல்பரிச வேதியென வாசா னாகி
    யெழுந்தருளிப் பரிசித்தும் நினைத்தும் பார்த்துந்
தயவினிரு மலமாக்கி யடிக்கீழ் வைக்குந்
    தற்பரனன் றேவிந்தச் சயம்பு வென்றான். (களு)

வேறு

நிலநீ ரனல்கால் நெடுவிசும்பு
    நிகழுஞ் சுடர்க ளியமானன்
குலவோ ரெட்டு வடிவாகிக்
    குறியுங் குணமு மிலதாகிப்
பலவா முயிர்கட் குயிராகிப்
    பற்றொன் றிலதாய்ப் பரம்பொருளா
யிலகு வில்வ மூலத்தி
    லிருக்கு மிலிங்க மெனமொழிந்தான். (கஅ)

இன்ன வகையேச மனைவென்ற
    விருடி கூற *எதிர்நிற்கு
மன்னன் றநய னுளந்தெளிந்து
    மலர்த்தா ளிணையி லட்டாங்கஞ்
சொன்ன முறையிற் பணிந்தெழுந்து
    துதித்துக் கண்ணீர் சொரிதரநின்
றென்னை யடிமை கொண்டருள்வா
    யென்றே பலகா லிரந்தனனால். (ககூ)

---

* "எறிநீர்க்கு" என்றும் பாடம்.

கருணை வடிவா மெய்ஞ்ஞானக்
கடலே சன்மக் சடல்கடக்க
வருளுங் கலமே யிருவினையொப்
'பாக யான்செய் தவங்களெல்லாந்
தரும வுருக்கொண் டிங்குறுசற்
குருவே யென்னைத் தடுத்தாண்டு
தெருளும் பரம வுபதேசஞ்
செய்வா யென்று னதற்கிசைந்தான். (உ0)

மீட்டுங் கதிரோன் புனன்மூழ்கி
வெண்ணீ றணிந்து கண்மணிகள்
பூட்டி யுடலிற் சகத்திரமும்
புநித முனிவன் றுள்பணியக்
காட்டும் பொருளா கமப்படியே
கருதுங் கிரியை முறைபியற்றி
வாட்ட மறவே வலத்திருத்தி
வைத்தான் முடியிற் *சிவவத்தம். (உக)

ஒன்றும் பரம சிவனுருவு
முண்மைப் பரைதன் றிருவடிவு
நன்று மான்மா வுண்மையும்பின்
னல்குந் திரோதா யியுமலமு
மென்றே யோது மைந்தெழுத்தி
னியல்பைச் சிவமே முதலாக
வன்றே தெளிந்து மாணுக்க
னறியச் செவியிற் புகன்றனே. (உஉ)

* சிவவக்கம் என்றும் பாடம்.



உன்னற் கரிய மெய்ஞ்ஞான
வுபதே சத்தால் வாருணிமன்
றன்னை யறிந்தான் றலைவனையுந்
தானே யறிந்தான் சற்குருவின்
பொன்னங் கமலப் பதம்பணிந்து
புத்தி யெனக்கென் னெனமேன்மை
மன்னு மூல விலிங்கத்தை
வணங்கி வடபாற் குருமுன் போய். (உங)

அரிய வியம நியமமா
சனமே பிராணா யாமமரு
டெரியும் பிரத்யா காரந்தா
ரணையே தியான சமாதியென
வுரிமை யோக மட்டாங்கத்
துடனந் தெழுத்து முருவேறப்
பரிவா யாறு லக்ஷமுருப்
பகர்வாய் பரமன் வெளிப்படுமே. (உச)

வள்ளல் முநித்தே சிகனுரைத்த
வண்ண மூல விலிங்கத்தை
உள்ள முருகப் பணிந்தேத்தி
யுயர்தக்ஷணமூர்த் தியின்முன் போய்
வெள்ளஞ் சொரியக் கண்ணருவி
விரும்பும் புளக முடல்முழுதுங்
கொள்ள வணங்கி யட்டாங்கங்
கூடச் செபித்தா னெழுத்தைந்தும். (உரு)

ஐந்து விடய வழியடைத்திட்
டரிய கரண மூன்றடக்கிச்
சிந்தை யதுசந் தானமுறச்
சிவயோ கத்தி னிலைநிறுத்தி

வந்த விருமூன் றிலக்கமுமே
வழுவா வண்ண முருவேற
வெந்தை ரத்ந நாயகரா
மெம்மா னிரங்கித் திருவுள்ளம். (உசு)

கதியா வெள்ளி வரைநடந்த
காட்சி போல விடைமீதில்
மதிவா னதியும் பொதிசடையு
மணிக்குண் டலஞ்சேர் குழைக்காதுந்
துதிசேர் திடுமுச் சுடர்விழியுந்
துலங்குங் கறைக்கண் டமுநெடுமால்
விதிசே கரஞ்சேர் மாலையுடன்
வெண்ணூ லிலங்கு மணிமார்பும். (உஎ)

மறிமான் பரசி னுடனபய
வாத மிலங்கு மலர்க்காமும்
பொறிசேர் வேங்கை யதளுடையும்
புயங்க வீரக் கழல்வீக்கும்
குறிசேர் கமலத் திருவடியுங்
கோதை யிடப்பா கமும்விளங்க
நெறிசேர் பூத கணநாதர்
நெடுமா லயன்வா னவர்முதலோர். (உஅ)

வேறு

எண்ணறுவிஞ் சையர்கருட ரியக்கரளக் கர்கள்சூழ
விசையின் மேலாம்
பண்ணமையாழ் தும்புருநா ரதர்பாடத் துந்துமிகள்
பஞ்ச வாத்யம்
விண்ணினதி ரொலமுழங்க வுருத்திரகன் னியர்நடிப்ப
விமலச் சோதி
பண்ணவ்கரு [illegible]ஙிதியா மற்புதன்வா ருணிமுன்ன
[illegible]ந்தா னன்றே. (உகூ)



கோடிசூ ரியரொளிபோ லெழுந்தருளி வந்ததிருக்
கோலங் கண்டா
னடினன் சிரத்தின்மிசை கைகொட்டி நெடுமாலு
மறியாப் பாதஞ்
சூடினு னிலத்தினிற்றண் டெனப்பணிந்து கண்ணருவி
சொரிய நின்று
பாடினு னுடல்புளகம் பரப்பினன் பரவசமாய்ப்
பணிந்தான் *பல்கால். (ங0)

மெய்யடியர் பாசபந்த சங்கார விமோசனஞ்செய்
விமல னன்னே
யனையவன் முகநோக்கிச் சாபவா ருதியி†லல்லல்
வருதல் நீங்கி
யுய்யும்வகை யருட்கரையே றினையென்னச் சுருதிபல
வோது கின்ற
செய்யதிரு வாய்மலர்ந்த வமுதமொழி கேட்டுள்ளந்
தெளிந்து நின்றே. (ஙக)

வேறு

அரிய ஞான மெய்தி நின்ற வன்ப னன வாருணி
பரிவி னோடு மீள வும்ப ணிந்தெ ழுந்து கைகுவித்
தரிய வேத வாக மங்க ளுண்மைசேர் புராணமுந்
தெரியு மேன்மை கொண்டு நின்று திருமுனே துதித்தனன். (ஙஉ)

மைய லேசெய் சனன மோடு மா[illegible]மச லாமென
வெய்ய யோனி தொறுழ லைந்து வினையி னுன்மெ லிந்துடல்
தொய்ய வெண்ணில் கால நீடு துன்ப வாரி மூழ்கினே
னைய வுய்ய வென்னை யாள்வை யாதி ரத்ந நாதனே. (ஙங)

* 'பண்பால்' என்னும்பாடம்.
† 'அவம் வருதல்' என்னும்பாடம்.

காள வல்லி ருட்க ணூடு கண்ணி லாது கட்டுநீஇ
மீளொ ணாத ஆண வத்தில் மேவு மெற்கி ரங்கியே
தாள தாம ரைக்க ணன்பு தந்தெ னைப்பொ ருட்படுத்
தாள வந்த தென்ன வைய வாதி ரத்ந நாதனே. (௩௪)

வஞ்ச கஞ்செய் பெண்ணி னாசை மண்ணி னாசை பொன்னின்மேல்
விஞ்சு மாசை யாலு ழன்று வீணில் யானி தெனதென
நெஞ்சி லன்பி லாது பற்று நீடு மெற்கி ரங்கியே
யஞ்ச லென்ன வாள வந்த வாதி ரத்ந நாதனே. (௩௫)

பந்த வேழை யேணி யற்று பாவ வாரி யிற்குளே
முந்த மூழ்கு நாயி னேனை முடிவில் கும்பி வீழ்த்திட
எந்த வேளை யென்று கால னெய்தி யென்னை யீர்த்திடு
மந்த வேளை வந்து ரக்ஷி யாதி ரத்ந நாதனே. (௩௬)

தந்தி ரத்து ரைத்த வாறு தான டக்க வாறலைத்
தைந்து ரைத்த வேடர் ஞான வம்ப கத்தை வௌவவே
வெந்து றக்க மாண கூவல் வீழுமெற் கிரங்குவா
யந்த ரத்தி லந்த ரித்த வாதி ரத்ந நாதனே. (௩௭)

இந்து சிந்து கொன்றை சூடு மீச பாச நாசனே
நந்தி நம்ப விண்டு போத னாத வேத கீதனே
பந்தி லங்கு கொங்கை மாது பாக யோக வாகனே
யந்தி வண்ண வென்னை யாளு மாதி ரத்ந நாதனே. (௩௮)

எனவ ழுத்தி நளிந பாத விணையின் மீதி றைஞ்சினா
னனந டைப்பெண் மேவு பாக ராதி ரத்ந நாதனார்
மனம கிழ்ந்து வாரு ணிக்கு வாழ்வும் வீடு நல்கியே
யினிதி லிங்க மீதி லெய்த வின்ப முற்ற மைந்தனே. (௩௯)

தாதை யோடு கூட வீச னுக்கு தீசி யாசையி
லோது தண்பு னற்ற டாக மொன்று தொட்டு நாமமு
மேத மற்ற வருண தீர்த்த மெனவு ரைத்த தன்கரை
மீதி லிங்க மப்பெ யர்வி ளங்க வேய மைத்தனன். (௪௦)



அகம கிழ்ந்து மேன்மை யாக வைந்து விக்கி ரகமுமே
திகழ வேய மைத்து மிக்க சித்தி யாவு மெய்தியே
புகழ்பொ ருந்து திங்கள் மூன்று போற்றி யங்கி ருந்தனன்
றுகளி லன்று தொட்டு வருணன் றொட்ட வாவி தன்னையே.

தழைத்த சாப மோச னத்த டாக மென்று சாற்றுவார்
மழைக்கு நாதன் வாவி மூழ்கில் வருண பாச பயமிலை
யிழைத்த பாவ நாச மாகி யெவரு மின்ப மெய்துவா
ருழைக்க ரத்தி ரத்ந நாத ருண்மை மான்மி யம்மெலாம். ()

செல்வ மார்க்கண் டயன றன்மன் சேய னுக்கு ரைத்துழி
வில்வ பத்தி ரத்தி னுண்மை விதியி னாலி யம்புவான்
கல்வி லேந்து ரத்ந நாய கற்கி யற்று மார்ச்சனை
நல்வ ரங்க டனைய ளிக்கு நவையில் வில்வ மொன்றினால். (௪௩)

ஈச னுக்க ருச்ச னையி யற்று வோர்கள் கோடியாம்
பேசு நற்கு லங்களோடு பிஞ்ஞ கன்ற னுலகிலே
வாச முற்றி ருப்பர் சுற்றி வலமு மாகி வில்வமோங்
காசின் மூல மதனில் வைகி யக்க ரங்க ளைந்தையும். (௪௪)

துதிசெ பம்பு ரிந்து தேக சுத்தி யோடு கூவிளம்
வதித ளத்தி னன்மெய் மூல மறுவை யுச்ச ரித்திடும்
விதியி னாலி யற்று வோர்வி ருப்ப னைத்து மெய்துவா
ரதிக மாமோர் பத்தி ரத்த ரும்ப லன்னி தாமரோ. (௪௫)

அனேக பத்தி ரத்தி னால ருச்ச னையி யற்றுவார்
மனோர தப்ப லத்தினை வகுத்து ரைக்க வல்லரோ
வனோசொல் பாநு சோம வார வத்தி னத்தி யற்றிடில்
வினைய வப்ப லத்தி னெல்லை விடையு ரைப்ப தியாவரே. (௪௬)

ஊத லாற்செய் வார்தினம ருச்ச னைய தன்றியுங்
கோதி லாத பருவ மிந்து குலவு மென்று கூடுநாள்
மாத சங்க்ர மங்கள் கதிரை வௌவு மரவி னாள்விதி
பாத ஜன்ம நாளில் வில்வ பத்தி ரங்கள் சாத்தினால். (௪௭)

நவையில் கோடி நற்ப லன்க ணல்கி ஞான முந்தரு
மவைய லாத புண்ணிய கால மன்னை *தன்னை வியுநா
ளிவையில் வில்வ வர்ச்ச னையி யற்றி னோர்பி திர்க்கணீள்
குவைகொள் கும்பி நணினு முத்தி கூடு வார்க ணீடியே. (சஅ)

பரமர் சென்னி மீது வில்வ பத்தி ரார்ச்ச னைசெய்வோர்
மரபி னோடு நரக மின்றி வானில் வாழ்வ ரத்தரு
விரவு மூல மதனில் வைகி மெய்ப்பி திர்ச்சி ராத்தமுந்
திரம தான பிண்ட முஞ்சி றப்பி னோடு நல்கினால். (சகூ)

அன்ன மொன்றி னுக்கு வானி லமரவ ருட மாயிர
முன்னு தற்க ரும்ப ரன்ற னுலகி லேபி திர்க்குழா
மன்னு வார்க ளெவரு மீசன் மகிழ்செய் பூசை செய்திடில்
பன்னு வில்வ மேவி சேட மெனினு மெப்ப தியினும். (ருய)

இத்த லத்தி லர்ச்ச னையி யற்றல்மா விசேடமா
மெத்த லங்க டனினு மித்த லஞ்சொல் மேன்மை யெய்துமென்
றுத்த மங்கொள் வில்வ மேன்மை யுண்மை மார்க்கண் டயமுனி
வைத்த வன்பி னோத வருண மைந்த னந்த முறைமையாய். (ருக)

தளிர்சி றந்த வில்வ முன்பு தான டைந்து தற்பரார்க்
கொளிசி றந்த தீப மாக வோங்கு மணிக ணல்கியே
யளிசி றந்த தாதை யோடு தன்னு லோக மெய்தினான்
களிசி றந்த மார்க்கண் டர்செய் காதைநீதி யோதுவாம். (ருஉ)

வாருணிசாப மோசனச் சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம்—(ஙoஉ)

---

* தன் + ஐ = பிதா.

ஆறுவது

## மார்க்கண்டன் பூசைச் சருக்கம்

வேத வியாதன் றிருவருள் பெற்றே வினைநீங்குஞ்
சூதனை நோக்கிச் சவுநக முனிவன் றுதிசெய்தே
போதக னாகிமெய் யுபநிட தத்தின் பொருடேரு
மாதவ மார்க்கண் டயமுனி பூசைசெய் வரலாறும். (க)

அருடரு மத்தல மகிமைக ளெல்லா மறையென்னச்
சுருதியி னுட்பொரு டெரிதரு சூதன் சொல்லுற்றான்
தருமமெய் நெறிசேர் மார்க்கண் டயமுனி தவமெல்லாம்
பெருகு விருப்பாற் கேட்பவர் பாவப் பிணி நீங்கும். (உ)

பூணார் செல்வமும் வாணாள் மரபும் பொலிவெய்துங்
கோணா கணிவோ னருளுண் டாகுங் குலவுஞ்சீர்
சேணார் மார்க்கண் டயனா கியமா சிவயோகி
மாணார் விப்பிரர் தங்களின் மேன்மை வதிகின்றான். (ங)

கடவூ ரினிலே யாங்கவ னுக்காக் கறைநாகப்
படவா பரணன் நமனைப் பாதப் பதுமத்தா
லடலே செய்தன னித்திய னாகமெய் யருடந்தா
னிடர்தீர் மார்க்கண் டயமுனி வரனிரு டிகளோடும். (ச)

இணங்கிய கவுதம னாதிய ருடனே யினிதெய்தி
வணங்கிய தெய்வத் தலந்தொறு நண்ணி வரும்போதி
லணங்குறு பாகனு வந்திடு நற்றல மாயோய்வுத்
தணந்திடு சீர்கொள் கஜேசுரர் தானந் தனிலுற்றான். (ரு)

உருவா யருவா யுருவரு வாயோன் றுபுமாயக்
கருவா யுலக முதித்திடு தற்கொரு காரணமாய்
மருவார் கற்பக வனமத் தியிலே வளர்கின்ற
திருவார் தெய்வ வருட்குறி தன்னைத் தெரிசித்தான். (சு)

ஆர்வம் பெருக வணங்கி யெழுந்தன னன்பின்கண்
ணீர்வந் திழிதர வங்கை குவித்தே நிறைநேயச்
சீர்வந் திடவுடல் புளக மரும்பத் தெரிசித்தே
பார்வந் தனைபுரி முநிவர னருளின் பரிசெய்தி. (எ)

அற்புத ஞதி யிரத்தின ஞத னவாசிக்க
ணற்புனல் பெருகுங் கூபந் தன்றிரு நாமத்தாற்
பொற்புட னகழ்வித் ததன்மேல் கரையிற் புவிபோற்ற
விற்பொலி மார்க்கண் டயலிங் கத்தை விருப்பாக. (அ)

ஆவா கனமுஞ் செய்தான் விதியா லர்ச்சித்தே
மூவா முதலை வணங்கின னத்தட முழுநீரிற்
ரூவா தெழுகங் கையுமரு வாலே தாபித்தே
யோவா ததனிற் றிரிகா லங்களு முடன் மூழ்கி. (கூ)

முழுதுணர் நிருமல கவுதம ஞகிய முநிவோர்கள்
விழுமிய பொருடெரி மாதவர் சூழா மெய்யன்பா
லொழிவரு மக்கா மைந்தும் பிரணவ முடனுக
வழுவறு நித்திய செபமு மியற்றினன் மதிவல்லோன். (க0)

நித்திய நிட்கள நின்மல நிர்க்குண நிர்த்தொந்த
முத்திசெ யஜகஜ நாதன் சந்நிதி முன்வைகிச்
சித்திசெய் செந்தீங் கனியு மளித்தபி டேகித்துப்
பத்திபொ லிந்திட *மாலூ ரத்தாற் பலபோதால். (கக)

பரிசுத் தம்பெற வர்ச்சனை செய்தே பகர்செந்நெ
லரிசிப் பானிற வல்சிப் போனக முதவிச்சேர்
வரிசைப் படிசோ டசவுப சார வகைநல்கி
துரிசிற் றன்னுப வாசஞ் செய்தான் றெடாரற்றோன். (கஉ)

மாலூரம்=வில்வம்.



வேறு

திரிதின மிந்த வகையுப வாசஞ்
செய்திறை திருவடி மலர்மேற்
கருதிய பூசை யாகமப் படிமார்க்
கண்டய முநிபுரி தனுமே
பருதிபல் கோடி யொருங்கெழுந் தன்ன
பான்மைபோற் றனிப்பரஞ் சோதி
சுருதியுட் பொருளா முமையொரு பாகந்
துலங்கவான் பிறைமுடி தோன்ற. (கங)

கருணையே சொரியு நயனமோர் மூன்றுங்
கவின்முக மலர்தரு நகையு
மருணமும் பாசு மபயமும் வரத
மணிபெற விளங்குநாற் கரமும்
வருண வெம்புலியின் சருமநல் லுடையு
மறைச்சிலம் பாற்றுமெல் லடியுந்
தருணவெள் விடைமேல் மாணிக்க வரைபோற்
றயங்கொளி தழைப்பமுன் னின்றுன். (கச)

மாலவன் பிரமன் காணுதற் கரிய
மறைப்பொருள் முன்வெளிப் படலுங்
காலனைக் காய்ந்த முநிவரன் காணூஉக்
கரைந்துயி ருள்ளமுங் கனிய
ஞாலமேற் பணிந்து கைபுடைத் தாடி
நயனநீர் சொரிதரப் புளக
மேலவே யரும்ப வில்வ*காந் தாரத்
திறைவனைத் துதிசெய லுற்றுன். (கரு)

* காந்தாரம்=அரண்யம்: காடு.

பன்னமுங் காயுங் கந்தமுங் காலும்
பசிக்குண வருந்தியே பன்னாட்
டன்னிக ருடலம் புற்றுமாய் மரமாய்த்
தவம்பல கோடிசெய் வோர்க்கு
மின்னமுங் காணற் கரியைநீ யடியேற்
கெளிமையா யெய்திவந் தாண்டாய்
பொன்னவிர் சடையாய் வில்வ மூலத்திற்
புநிதனே நின்னடி சரணம். (௧௬)

முழுதுணர் முனிவோர் வானவர் குலிச
மூலவெம் படைக்கரன் வேத
னிழுதுசேர் கீர வீரையிற் றுயில்வோ
னெவரையு மநித்திய ராக்கித்
தொழுதுள முருகா வென்னைநித் தியனுந்
தொண்டனென் றுண்டனை யையா
வழுதிநா டிலங்கு வில்வ மூலத்தில்
வள்ளலே நின்னடி சரணம். (௧௭)

ஆருமோர் குடங்கை நீர்தழை யிடுவார்க்
கழிவில்வீ டளித்தனை போற்றி
தாருகா வனத்தில் முனிவர்பன் னியர்க
டருபலி யேற்றனை போற்றி
போருலா மூவர் புரம்பொடி யாகப்
புன்னகை புரிந்தனை போற்றி
சீருலாந் தெய்வ வில்வமூ லத்திற்
றேவர்க டேவனே போற்றி. (௧௮)

காட்சியில் நினைப்பிற் கேள்வியி லின்பக்
கனியெனக் காயினை போற்றி
வாட்சின வேற்கட் காளிமுன் றுணை
வாதினில் நடித்தனை போற்றி



தாட்சிவந் திடமுன் பரவைபாற் றூது
தனிநடந் தருளினை போற்றி
யாட்சியா மகிமை வில்வகாந் தாரத் தாதிரத்
தேசனே போற்றி. (௧௯)

இன்னணந் துதித்துப் பன்முறை மலர்த்தா
ளிறைஞ்சிய முனிவனை நோக்கிப்
பொன்னவிர் கடுக்கை வேணிய னினது
பூசனை யுவந்தன மனத்தி
லுன்னிய வரநீ கேட்குதி யென்ன
வுறுகுறை யொன்றிலே னென்று
நின்னடித் துணையை யென்மன நீங்கா
நேசநீ யருளுதி யென்றான். (௨௦)

மறைமுனி யுரைத்த வாசகங் கேளா
மணிமுடி துளக்கியெம் பெருமா
னறைதரு வாளு மளித்தன முன்மே
லன்பினாற் குருவுப தேச
முறைமையா யுரைப்போங் கேட்டிநம் மடியார்
முக்கிய மறிகிலார் மமதை
நிறைதரு செருக்கா லவமதித் தவரை
நிக்கிர கம்புரி குவமால். (௨௧)

வேறு

வழிபடு மூன்றனை யவமா னஞ்செயு மதனாலே
விழியழல் பொழியும் வெய்ய பகட்டின் மீதேறிக்
கழிதரு தூதர்க ளுடனே யெய்திய காலன்றா
னழுதல றிடவே நமதடி யான்முன் னடல்செய்தோம். (௨௨)

வெம்புசெய் தடியவ ரைக்கொலை செய்திடும் வாதாபி
தம்பியெ னுங்கொடு வினைவில் வலனிவர் தமைமுன்னாட்
கும்பச முனிவனை யேவிப் பொடியாய்க் கொலைசெய்தோம்
நம்புமெய் யடியவ ரிடர்தீர்த் திடுசெயல் நமதென்றார். (௨௩)

வேறு

நறுமலர் நந்தன வனமு மியற்றுத ணுண்மலர் கொய்தேபூ
விறுகிய விண்டை தொடுக்குத லாலய மெங்கணு மழகாக
மறுவறு மலகிடன் மெழுகுத னமது மகத்துவ மார்காதை
யுறுதி தரும்படி கேட்குதல் சரியைக் குடையவர் தொழிலாமே. ()

தண்புனல் வாவி படிந்தே வெண்பொடி சட்டக மிசைபூசி
நண்பொடு சுத்திக ளைந்து மியற்றியே நம்மை யகத்துள்ளே
யெண்பெறு பூசை புறத்துஞ் செய்தே யெரியினை விதிமுறையே
பண்பினி யற்றுவ தெல்லாங் கிரியையர் பயிறரு செயலாமே.(௨௫)

விசையுறு மைம்புல னாற்கர ணந்தனி மேவிய முக்குணமு
நசையி னடக்கி யிடைபிங் கலையற நடுவுட் டொளைவழியே
யிசைதரு வாயு விடுத்தா தாரத் தெமதொளி யுருவுடனே
யசைவற வொன்றிய நிலைமையர் யோகத் தநுபவ முடையோரே.()

பலபல வாகம நெறிக ளறிந்தே பதியசு பாசத்தி
னிலைமை யறிந்தே பவமா ணப்பிணி நில்லா தகறாவே
குலவிய தற்போ தங்கெட வருணெறி கூடுசி வாநுபவத்
திலகு மனோலய மெய்திய மேலோ ரின்பமெய்ஞ் ஞானத்தோர். ()

பாசத் திமிர மகற்றிய ஞானப் பருதி யெனுங்குரவன்
வாசப் பதுமத் தடியிலி றைஞ்சிவ ழுத்திய வர்க்கேமெய்ந்
நேசத் துடனுட லாவியு மற்றுள நிதியும ளித்தறிவா
லாசற் றிடுமுப தேசம் பெற்றவ ரவரெம தடியவரே. (௨௮)



திருவடை யாளங் கண்டிடு முடனே சென்றவ ரடிமீதி
லுருகும னத்தொடு வந்தனை செய்தவ ருவகைபொ ருந்திடவே
மருமல ரர்ச்சனை செய்தே யறுசுவை வர்க்கத் துடனன்னந்
தருபவ ரவர்தா மெமதடி யவரிற் றகைமைபெறும் பெரியோர்.(௨௯)

குரவ னிலிங்க மடியவர் தம்மேற் கோதறு பத்தியினாற்
பரவிய வந்தனை செய்தே பூசனை பண்ணிய தூயோர்கள்
வரன்முறை சொல்லிய விவர்களையேயவ மானஞ்செய்தோரை
யிருநில மீதினி னாசஞ் செய்வோ மிதுநிச் சயமாமால். (௩௰)

வேறு.

வெண்ணீ றக்கமெ ழுத்தைந் திவைதமை மெய்யென்றே
யுண்ணே யம்மிகு வாரப் பத்தரு டன்பகையே
பண்ணு நிற்போர் தம்மையு மதமே பணுவோமெங்
கண்ணீ ரினில்வரும் வில்வமு மக்கமுங் காணுங்கால். (௩௧)

நந்திரு விழிநீர் விந்துவி லங்கவை நண்ணுதலா
லந்தரு மத்தரு வொன்றுக் கொன்றதி கமுமில்லை
யெந்திரு வடிவுக் கேசம மாகவி ருக்குஞ்சீர்
தந்திடு மக்கம் பூண்டிட வில்வார்ச் சனைசெய்ய. (௩௨)

மெய்ப்பல னெய்தும் வில்வப் போதும் வில்வக் கட்டையினா
லொப்பறு சாந்து மெமக்கினி தாமீ துண்மைமுன்னாட்
டுப்பித முந்திரு விண்டுவி னுடனே துதைவில்வத்
தப்பெரு மூலத் தினில்வா சஞ்செய் வதனாலே. (௩௩)

எவ்வுல கங்களு மேத்தக் கற்பினி லிசைபெற்றாள்
செவ்விகொள் செய்யாள் கேசவ னுலகத் திதியுற்று
ளவ்வகை நிற்கே வில்வ விசேட மிசைத்திட்டோம்
அவ்விய மற்றிடு முண்மைய தாம்பவ மணுகாதே. (௩௪)

இந்தத் தருவின் மகத்துவ மிருசெவி யிற்கொண்டோர்
பந்தத் தொடர்பிலர் வில்வக் கோட்டிற் படுசந்த
மைந்தர்க் காதர வாமால் மார்க்கண் டயகேணுஞ்
சொந்தப் பத்தர்க ளொருவற் கும்மிது சொலவில்லை. (௩௫)

பத்தியின் மிக்கவ னுதலி னின்மேற் பரிவாயிவ்
வுத்தர மியாவு முரைத்தன மாலென் றுதவிப்போய்
முத்தணி லிங்கத் தெய்திய பின்னர் முதல்வன்சொல்
சுத்த மகத்துவ மெல்லா முன்னித் துதிசெய்தான். (௩௬)

வேறு

கூவிளந் தளத்தி னாலுங் கோங்கலர் மலரி னாலுந்
தேவர்கள் தேவைப் பூசை செய்துமா முனிவ ரோடு
மேவல்செய் பவர்கள் சூழ விருந்தன னந்த வில்வச்
சேவைசெய் பவர்க்கு மிக்க தினந்திரி காலந் தோறும். (௩௭)

மறையவர் வதையே யாகு மானபாத கங்க ணீங்கு
மறைதரு வில்வ மூலத் தடியினில் மிருத்தெ டுத்துப்
பிறைநுதன் மீதி லிட்டாற் பிதாமக னெழுத்து வேறாய்க்
குறைபெற விருந்தா லுந்தான் கோதிலா வெழுத்தா மன்றே.

உடற்பிணி குட்ட ரோக முடன்வரு குமர கண்டன்
விடற்கரு நோய்க ளெல்லா மேவிடா தகலு மன்றிச்
சுடர்த்தொடி வந்தி யானாள் சோமவா ரத்தில் வில்வத்
திடத்துறு மிருத்து வில்வ பலத்தள வெடுத்து வைத்தே. (௩௯)

ஒருதிங்கட் பரிணா மந்தா னுதகம்விட் டேக ரைத்துக்
கருதியுட் கொண்டாற் றெய்வக் கான்முளை பயப்பா ளன்பால்
வருமுயர் மதலை யீசன் மலரடிக் கன்ப னாகி
யிருநில முழுது மேத்த விசைபெற வாழ்வ னன்றே. (௪௰)



வேனிலாம் பருவந் தன்னில் விரைபுன றசும்பிற் கொண்டே
கானிலா வியமா வில்வங் கதித்திடு மூலந் தன்னில்
மேனிலா வபிடே கஞ்செய் வித்தகர் தசும்பொன் றுக்குத்
தானுலா வுவரோர் கோடி சார்சிவ லோகந் தன்னில். (௪௧)

உயர்ந்தவன் றென்பு லத்தோ ருங்கதி பெறுவா ரீசன்
நயந்திடு மிடத்திற் கங்கி நாயகன் றிசையி லோங்குங்
கயந்திரி மலைய மேவுங் கடமுநி தீர்த்தத் திற்கு
வியன்கொடென் கரையில் வைகும் விளங்ககத் தியவி லிங்கம்.

விரும்புலிங் கத்தின் முன்னோர் வில்வமுண் டதன்பால் வைகி
யரும்பர னடியார் மூன்று லந்தணர்க் கன்ன மீந்து
வரும்பிதா வன்னை வீந்த மந்தினந் தன்னி லங்கண்
டரும்பிண்டப் பிரதா னங்கள் தருப்பண முறையினாலே. (௪௩)

இழைத்தவர் பிதிர்க்கள் யாரும் பிறையுரு வாவர் கொன்றைத்
தழைச்சடைப் பரனைப் பாரி சாதமா வில்வந் தன்னை
வழுத்தியோர் வலம்வந் தோர்கள் வையகம் வலமாய்வந்தோர்
விழைத்திடு பலனை யெய்தி விரும்பிய தடைவ ரன்றே. (௪௪)

சினைவிரி வில்வந் தன்னைச் சேய்மையிற் றரிசித் தோர்க்கு
வினைகொள்பா தகங்க ணீங்கும் வில்வத்தின் சருகு தன்னைத்
தனைநிக ரான வோமத் தணலிலிட் டந்த நீற்றைப்
புனைபவர் மநுமூ லத்தைப் புந்தியி னினைந்து கொண்டே. ()

முடிவிலா முத்தி சேர்வார் முயன்றிடு மந்த நீற்றைப்
படியினிற் சுரமுற்றோர்மேற் பரிவுடன் றரிக்கி னீங்குங்
கடிகமழ் வில்வ மாலைக் கண்ணுத லிறைக்கு மல்குந்
துடியிடை யுமைக்குஞ் சாத்திற் சொலுங்கண நாத னாவான்.

துணர்விரி வில்வநீழற் றுளங்கிய தானஞ் செய்தா
லணுவள வெனினு மேரு வனையவாங் கனக தானம்
பணினர்தம் பலத்தைச் சேர்வர் பகர்ந்தவக் கரங்க ளைந்துந்
துணிவுற வோரு ருத்தான் துகளறச் செபித்த பேர்க்கே. ()

உருக்கோடி செபித்தார் மேன்மை யுற்றிடுந் தரிசித் தோர்கள்
திருக்கோட்டும் வில்வ மூலச் சிறப்பினை வழுத்த வென்று
லருட்கொடா துயர்ந்த சேட னாயினு மரிதன் னீழல்
இருப்பர்கள் கணப்போ தேனு மிரதிநா யகனைப் போலே. ()

திவ்விய வடிவ மெய்திச் சிவபதந் தன்னிற் சேர்வ
ரவ்வியல் பேதென் றுன்முன் னனத்துவ சனனென் றோர்கோன்
வவ்விய சுணங்க ரூபம் வதிந்துசஞ் சரித்து வில்வச்
செவ்விகொ ணிழலில் வந்து தீர்ந்தனன் முக்தி சேர்ந்தான்.()

அன்னிய மாய தேகத் தவர்கதி பெறுவ தெல்லா
மென்னினிச் சொல்வ தென்றிவ் வியல்பெலாஞ் சூதனோதப்
பன்னரு முவகை கூர்ந்து பரவியா தரவு பொங்கத்
தன்னிக ரிலாத மேன்மைச் சவுநக முநிவி னவும். (௫0)

**ஆறுவது மார்க்கண்டன் பூசைச் சருக்கம் முற்றும்.**

ஆகத் திருவிருத்தம்—௩௫௨.

ஏழாவது

## அன்னத்துவசன் பேறுபெற்ற சருக்கம்.

தொல்லையாம் புராணந் தேருஞ் சூதமா முநியே யோங்குஞ்
செல்லணி மாட நீடு திராவிட தேய மன்னன்
அல்லல்சேர் சுவான மெய்யை யடைந்தது மதுபின் னீங்கு
மெல்லையு மினிதாய்ச் சொல்வா யென்னலுஞ் சூதன் சொல்வான்.()

திராவிட தேய வேந்தன் செய்திடு சரிதந் தன்னைப்
புராணநன் முறைமை யாகப் புகலுவன் கேட்போர்க் கெல்லாம்
பராபர னருளாற் பாவம் பாறுமா ணவமு நீங்கும்
சராசர வுயிர்கட் கின்பந் தரும்பொன்னிக் குரிசி தன்னில். (௨)



மல்லலஞ் சிறப்புஞ் சீரும் வாய்ந்தவுச் சீன மென்னுந்
தொல்லையம் பதியி னன்காய்ச் சொல்லிய வருணத் தார்க
ளெல்லையில் லார்கள் வாழ்வ ரெழில்வள மிமைய மீன்ற
வல்லியி னுடனே போசேச் சுரனங்கண் மருவு மாதோ. (௩)

சிறந்தவப் பதியின் வாழுந் திராவிட வேந்த னீதி
பிறந்ததோ ரிடமா யார்க்கும் பேரருள் புரிந்து காத்தே
யறந்தரு செல்வ மோங்கி யவனியைப் புரக்கு நாளின்
மறந்தரு தசைமேல் வைத்த வாஞ்சையால் வனத்திற் சென்றான்.

வேறு

ஐங்கதிகொள் வாசிமிசை யண்ணல்செலும் வேலை
வெங்கதைவில் வாள்குலிச வெண்மழு வெழுக்கள்
அங்கையுறு பாலமுயர் தோமரமுள் ளாழி
சங்கையறு கைப்படைத ரித்தவர்கள் சூழ. (௫)

காலநெறி யஞ்சுகடு வேகமுடை யோராய்
கோலவடி யிற்கழல்கு தைப்படவி றுக்கி
வாலெயி றிலங்குமுழை வாய்ஞமலி கைக்கொண்
டாலநிகர் கோபவடல் வீரர்பலர் சூழ. (௬)

சென்றன னுலம்பொருத திண்புயவின் மன்னன்
வன்றிறல்கொள் தானைநிரை வாளுழவர் தம்மைத்
துன்றணிவ குத்தனன டந்தனர் தொடர்ந்தார்
கன்றிவரு மாவினிரை கானிடைக லைத்தார். (௭)

வாம்புலி படுக்கவொளி வைத்தருகு நிற்பார்
தேம்புசரி வேகமொடு சென்றெதிர் பிடிப்பா
ராம்புதிய மானின மடுக்கவலை வைப்பார்
றோம்பரிசி னேனமுற நூறுவர் தொடுத்தே. (௮)

குத்துவர்கள் வாளெதிர் குனுக்கிலகு வாலே
தத்துவர்வ ராகநிரை தானலறி வீழ
மொத்துவர் தசைக்குறுதி மூளைநிண மோட
வித்திற மடற்படைஞ ரெங்கணு மிசைந்தே. (கூ)

கட்டுவர்வ லைக்குள்வரு கானிரலை தன்னை
வெட்டுவர் வரிப்புலியை வீரமுடன் வாய
தட்டுவர் பிணித்தெறி சரம்பல விடுத்தே
கிட்டுவர் மறம்பயில் முட்கேழல் பொருவீரர். (க0)

மாவழங்கு கானினிடை மள்ளர் திசைதோறு
மேவியங்க ணாடவர்வி ளைக்கவில் வணக்கி
காவல்புரி மன்னன்மிரு கங்கள்வதை செய்தே
யேவலுழ னோரறவி வன்றமிய னானான். (கக)

வேறு

அந்நிலைக் கதிரோ னுச்சி யணுகிய வேலை தன்னி
னின்னல்சேர் தாக சோக மெய்தியே பசியால் வாடி
மன்னவன் றமிய னாகி மாவினை யுகைத்து நுண்ணூல்
பன்னரு முனிவ ரெல்லாம் பயில்வயி ரவக்கான் சென்றான். (கஉ)

சென்றவன் சுமந்து வென்னு மிருடியாச் சிரமத் தேகி
யன்றருண் முனியும் பன்னி யவளுமே யட்டு வைத்தே
நன்றரு ளுச்சிப் போதி னானகா ரியமாய்ச் சென்றார்
வென்றிவே லிறைவ னங்கண் விரைவினிற் புக்கான் மன்னோ. (கங)

ஒருவரு மிலாது பார்த்தா னுடற்றிய பசியி னாலே
யருமடை தனித்த தங்க ணயின்றன னந்த வேலை
யிருடியாஞ் சுமந்து வந்தே யிராசனைப் பார்த்து நின்று
திருகுவெஞ் சினங்கள் மூள சிலவுரை புகல லுற்றான். (கச)



அஞ்சகே தனனீ யார்க்கு மடாதகா ரியஞ்செய் தாயா
லெஞ்சலி லீசன் பூசை யியற்றுநி வேத னந்தான்
றஞ்சமாய்ப் புரிய வில்லை சற்றுநீ பொறுத்தா யானால்
வஞ்சமி லெமதுத் தார வாய்மையாற் புசிக்க லாமே. (கரு)

அயினியி தலது வேறே யருங்குளச் செந்நெ லாதி
வயினுறும் வல்சி யில்லை வாய்ப்பநீ மாந்துஞ் சேடம்
பயினிவே தனத்துக் காகா பாண்டத்தி னனத்தைக் கீழா
மெயினாய் தின்றாற் பாண்டத் தினையுமே யெறிய வேண்டும். (கசு)

எனுமுரை யிருடி கூற யிருநில வேந்தன் சொல்வான்
மனுமுறை யரச னாணை வசத்தினில் வைகி மேன்மை
துனுமுயர் முனியே வேந்தர் தோன்றிடா தென்செய் தானுஞ்
சின மகல் மறையோ ரந்தத் தீமையைப் பொறுத்தல் வேண்டும். ()

பசியினா லன்றோ யானுன் பன்னசா லையினிற் புக்கு
மிசையினை யயின்றே னந்த மிச்சிலைச் சுவான சேட
நசையுறு சுவையின் பான மென்னவு நவின்றா யென்றே
யிசைமன னிந்தை சொல்ல யிருடிவெஞ் சினத்த னாகி. (கஅ)

ஞமலியா குவைநீ யென்றே நவின்றுசா பத்தை நல்கித்
தமதுயர் பன்னி யோடுந் தருந்துறை யாடப் போந்தா
னிமமதிக் கவிகை வேந்த னிருடிசா பத்தி னாலே
கமமுறு வெய்ய ஞாளிக் கடியமெய் யடைந்தா னன்றே. (ககூ)

செம்மைமா முனிக்குச் செய்த தீமையாற் சாப மெய்தி
யும்மையி னறிவு நீங்கி யோங்குதே யங்கள் கானம்
வெம்மைசே ரிடங்க டோறும் வெய்யசா பத்தால் வாடி
யிம்மையி னயுத மட்டு மிடருழந் தலைந்த தம்மா. (உ0)

வெம்பசிப் பிணியாற் சால மெய்யெலா முலர்ந்து பார்த்தோர்க்
கும்பயந் தந்து நிந்தை கூறவே யருவ ருப்பார்
யிம்பரிற் றிரிந்து தள்ளு மிடத்தினி லிடங்கர் வாயிற்
கம்பிதத் தடனே சிக்குங் கலவடை கழுத்திற் றாங்க. (உக)

துன்பமீ தூர வெங்குஞ் சுற்றியே திரியு நாளி
லின்புறு முன்னா ளன்பா லியற்றுபுண் ணியத்தி னாலே
மன்பெரு வைகைக் கீழ்பா லழல்வீரன் மறைக டேர்வே
தன்பணிந் தேத்துஞ் சோமேச் சரத்தலந் தன்னில் வந்தே. (௨௨)

அவ்வூரில் நடகன் றெய்வ வாடானைப் பதிக்கு வந்தா
னவ்வூன ஞமலி யன்னோன் வரும்வழி தொடர்ந்து வந்தே
தெவ்வூர்மூன் றட்ட தேவன் செயலினா லயத்துட் சென்று
வெவ்வூதை வெயிலான் வாடி மெய்வருந் தியத னாலே. (௨௩)

கடைப்படு ஞாளி நீழல் காதலித் தோடி வில்வத்
திடைப்படு நிழலிற் றுஞ்சி யிருந்துயில் விழித்த போதின்
முடைப்படு சுவான ரூப மோசன மாகி மேன்மை
யுடைப்பெருங் காமர் போற்ற வும்பர்தம் வடிவங் கொண்டான். ()

வடிவுள வேந்தன் வில்வ மகத்துவ முணர்ந்தந் நீழ
லடியினிற் சயம்பு வாகி யநாதியா மிலிங்க முன்னாட்
கடிகொண்மா மலரி னண்பன் கமலமன் சேயன் வேண்டப்
படிமகிழ் வரங்க ணல்கும் பான்மையு முணர்ந்து நின்றே. (௨௫)

அனலிடு மெழுகு போல வகங்குழைந் துருகி யாற்றின்
புனலெனக் கண்ணீர் வாரப் புளகமெய் போர்ப்ப மீண்ட
பனககங் கணத்தி னானைப் பன்முறை வலமாய் வந்தே
யினமலர்ப் பாத மீதி லிறைஞ்சிநின் றேத்து கின்றான். (௨௬)

வெய்யவாய் ஞாளி யாகி வினைவலி யநேக காலம்
வையக முழுதுஞ் சுற்றி வாடிய தமிய னேற்கென்
னையநீ மருந்து மாகி யன்னையும் பிதாவு மாகித்
தெய்வமு மாகி யிங்ஙன் சிறந்துவீற் றிருந்தா யந்தோ. (௨௭)

வரையினிற் கானிற் செய்ய வார்தழல் மீதிற் றேங்குந்
திரையினிற் பன்னா ணின்று செயலறுந் தவஞ்செய் தோர்க்கும்
நரைவிடை யுடையா யுன்ற னல்லருள் கிடைத்தி டாதியான்
றரையிலெத் தவஞ்செய் தேனுன் தாளிணை பணிதற் கென்றான். ()



அறிவின்றிக் கடைப்பட் டுன்பா லடைந்திடு நாயி னேனை
நெறியினா லுயர்த்தி யென்று நின்னடிக் கன்ப னாக்கு
மறிபுனை கரனை யின்ப வாரியே யென்றே யன்பாய்க்
குறிகுண மிலானை யேத்திக் குறைபடா வின்பங் கொண்டான்.

கொண்டவன் போரா நந்தக் குதுகுதுப் பெய்தி மீண்டான்
றொண்டர்க ணெருங்க வானோர் தொழத்தலை யெய்தும் வாயி
லண்டின னண்டர் சூழ வந்தரத் திழிந்த பானு
மண்டலம் போலச் சோதி மணியணி விமான மெய்த. (௩௦)

கூறினன் றுதிகள் வில்வக் குளிர்நிழற் குழகன் றன்னைத்
தேறினன் பிறவித் துன்பந் தீர்ந்தனன் வலமாய் வந்தே
யேறினன் விமானம் வேந்த னெழுந்தன சங்க நாதம்
வீறின சின்ன வோசை விம்மிய திசைக ளெல்லாம். (௩௧)

வேறு

கைவண் டாற்றத் திதலைபடர் களபப் புளகக் கனதனத்தால்
தொய்வண் டிழைநூ லிடையொசியத் தொடுத்த தாம மதுவருந்தி
மைவண் டினஞ்சூழ் குழலுழ வான மடவார் கரஞ்சேப்ப
வெய்வண் டனைய விழிசுழல இருபாற் கவரி பணிமாற. (௩௨)

மின்னிற் பொலியுஞ் சிற்றிடைவெண் ணகைச்செவ் வாய்மைக்
[கருங்கூந்தல்
பொன்னிற் றிகழுந் திருமேனி புனித மதுரக் கரும்பனைய
கன்னிக் குமரிப் பருவமின்னார் கையி லடப்பை காளாஞ்சி
வன்னத் தோகை மயில்விசிறி மணிக்காம் பசைத்துப் புடைசூழ.

வேறு

ஓவியர்க்கு மெழுத வொண்ணா வனப்பு வாய்ந்தே
வும்பருண்ணு மமுதமோ ருருவ மாம்போற்
பாவையர்கை யாமேந்தித் தனத்திற் சாய்த்தே
பயிலுமா டகமுழக்கிப் பாணி யோசைக்

கோவையித ழசையாது தந்தபந்தி
குறுநகைதோன் றுதுகுண மாகத் தந்தி
நாவிலிருந் தியன்றனவோ வென்ன வின்ப
நலமாகச் செவிக்கிசையின் னமுத மூற்ற. (௩௪)

வேறு

வார்க்கு ளடங்கா தெழுந்தியானை
மருப்பைக் குடத்தைச் செயித்துவிம்மி
யீர்க்கு மிடையிற் புகுதாம
விணைந்த புளக முலையசையப்
பார்க்குஞ் சிறிய விடையொசியப்
பாத சால மிகவோலிட்
டார்க்கு மடவார் கரநீட்டி
யசைபூங் கொடிபோ னடமாட. (௩௫)

கரிய வறன்மென் மலர்க்கூந்தற்
காவி விழிச்செங் குமுதவித
ழரிய பசிய கழைதோள்மின்
னனையார் காந்த ளங்கையினீர்
சொரிய வழகு சாம்பராணித்
தூப நிரைகள் மிக்கவொளி
விரிகற் பூர வாலத்தி
விளங்க வேந்திப் புடைசூழ. (௩௬)

ஐந்து முழவும் விண்ணதிர
அணிவெண் கவிகைத் துவசநிரை
வந்து புடையெங் கணுநெருங்க
வானோர் மலர்மா ரிகள்தூற்றப்



புந்தி மகிழ்வேத் திரமேந்திப்
புகல்வந் தியர்கள் புகழ்கூற
இந்து வதன முடிவேந்த
னிசைபொன் னுலகத் தினைச்சார்ந்தான். (௩௭)

அன்னத் துவசன் வரவறிந்தே
யமரர் கோமா னெதிர்கொள்ள
மன்னிக் கலந்தாங் களவளாய்
மகிழ்ந்து முகமன் பலகூறி
மின்னிற் பொலியு மரியணையின்
மீதி லிருத்திப் பூசித்தான்
தன்னிச் சையினிந் திரபோக
சவுக்ய மருந்தி யினிதிருந்தான். (௩அ)

வேறு

இந்திரன் வாழ்நா ளெல்லை யெண்ணிலாப் போகந் துய்த்தே
யந்தரத் தமரர் போற்ற வரசனந் தத்தில் வால
சந்திர மவுலி யெம்மான் றையலோர் பாக மேவ
சுந்தரத் திருவோ லக்கந் தூலங்குமவ் வுலகிற் சார்ந்தான். ()

மெய்யறி வின்றி வந்து வில்வத்தி னிழல்கான் முற்றன்
துய்யவோர் கணந்தான் றுஞ்சி யுறுதுயில் விழித்து நின்ற
வையக வேந்தன் பெற்ற வரமிது வானு லந்தச்
செய்யபூந் தருவுக் கொப்புச் செப்புவ ரெவரே யம்மா. (௪0)

இணரணி வில்வ மீச னிடத்தினுற் பத்தி யாலே
பணரணி வில்வ மென்றும் பரனென்றும் பேத மின்றி
யுணர்வுறி னொப்ப தாகு முறுசினை மலர்சேர் வில்வம்
புணர்வுறு மேன்மை தன்னைப் புகலலற் புதம தாமே. (௪௧)

செப்புமிப் பதியின் மேன்மை தீர்த்தத்தின் மேன்மைக் கியாவு
மொப்பிலை சேட னாலு முரைப்பதற் கடங்கா தோங்கு
மிப்பெரு வில்வ நீழ லினிலொரு கணப்போ துற்ற
வப்பவ ஞாளி முத்தி யடைந்தது கண்ட தாலும். (௪௨)

ஆதியில் வில்வ மேன்மை யரனரு ளியதி னாலும்
மூதறி வுடையோ ரெந்த முயற்சியும் புரிந்து வந்தே
தீதிலா வில்வந் தன்னைத் தரிசனஞ் செய்ய வென்றே
வோதுகான் கண்டந் தீவி னுறைந்துமே சிந்தை செய்தால். ()

சகலபா வங்க ணீங்குஞ் சந்தேக மெண்ண லாகா
புகலும்புண் ணியகா லத்திற் போற்றியே வலம்வந் தோர்க்குத்
துகளறு மடியோன் றுக்குத் துரங்கநன் மகப்பே றெய்து
மகமகிழ் புகர்வா ரத்தி லலங்கலும் விரையுஞ் சாத்தி. (௪௪)

அருச்சனை புரிந்த பேர்க ளகத்தினிற் றிருமின் சேர்வாள்
விரித்திடும் புகழ்சேர் செல்வ மேன்மைநித் தியகல் யாணந்
தரித்துவாழ்ந் திடுவ ரீசன் சாற்றும்வாக் கியமீ துண்மை
தெரித்திடிற் சத்தி யஞ்சத் தியஞ்செழு மலர்வில் வத்தை. ()

மதியொன்று சேவை செய்தால் வரும்பூத வேதா ளங்க
ளிதமில்சா கினிபி ரேத மிடாகினி யணுகா தேகுங்
கதிதரு சுகங்க ளிட்ட காமிய மெல்லா மெய்துஞ்
சதிசெயும் விபரீ தங்க டந்தசொப் பனமு நீங்கும். (௪௬)

கனிசெறி வில்வ மாம கத்துவ மெல்லா மோர்ந்தே
பனிமதி தவழுங் கோட்டுப் பருப்பத முனிவ னெய்திச்
சினைகொள்கூ விளத்தின் மூலத் திற்சிவப் ரதிட்டை செய்து
யினியநற் பூசை நாளு மியற்றியங் கிருந்தான் மன்னோ. (௪௭)

**அன்னத்துவசன் பேறுபெற்ற சருக்கம் முற்றும்.**

**ஆகத் திருவிருத்தம் ௱௬௧.**

எட்டாவது

## அகத்திய பூசைச் சருக்கம்

பத்தரிற் பெரியோ னாகிப் பரம்பொருட் டிறமா ராய்ந்து
தத்துவ ஞான முற்ற தமிழ்முனி திருவா டானை
யத்தனைப் பூசை செய்தே யருள்பெறு முறைகூ றென்றே
வித்தக முனிவன் கேட்க மெய்யுணர் சூதன் சொல்வான். (௧)

பதுமமார் கற்பந் தன்னிற் பைந்தமிழ் முனிதீர்த் தங்கள்
கதுமென வாட வேண்டி காதலி னெழுந்தான் வால
விதுவுற ழிமைய வெற்பு மேவுகே தாரஞ் சேது
முதுமலை யாளமட்டு முயற்சியாற் செல்ல வெண்ணி. (௨)

இரைவர நதிசூழ் காசித் திருநகர் ப்ரயாகை கேயை
வரமருள் செயுங்கு மார வனம்பா னுறைகா கோலங்
கரியுரி புனைவோ னீல கண்டமே வடவா ரண்யங்
குரவணி குழலாள் பாகன் குலவிய திருக்கா ளத்தி. (௩)

இருவரும் வாதிற் காண வெரியுரு வான வெற்பு
சுருதிநா யகிதன் கொங்கைச் சுவடுடை யொருவன் பேரூ
ரிருநில முழுதுங் காண வெருவைவந் திறைஞ்சுங் குன்றஞ்
சிரசினா னடந்த வம்மை திருநடங் கண்ட கானம். (௪)

அரக்கர்த மேன்மை யாலே யயன்புவி யாக்கு மந்நா
ளூரத்துட னின்ற வோங்க லுரகமும் புலியும் போற்றச்
சிரத்தணி மகிழ்ந்து காணத் திருநடம் புரிந்தோன் மன்றங்
கரைத்திடு மூழி காலக் கடலிடை மிதக்கு மவ்வூர். (௫)

வலிகெழு சடாயு போற்ற வரந்தரு கின்ற வேளூர்
பலிகொளும் பரனா ருண்ணப் பாலனை வதைத்த சீரூர்
நலிவரப் பிறந்தோர் மீண்டும் பிறந்திடா நகர மாறன்
மெலிவுறும் பிரம கத்தி வேதனை தவிர்த்த மூதூர். (௬)

கங்கையும் படியுந் தெய்வக் காவிரி சூழ்கு டந்தை
மங்கைபங் குறைவோன் வீம வளமறை வணங்கு கானஞ்
செங்கண்வெள் விடையின் பாகன் றிருப்புன வாயி லாதி
யெங்கணு யகன்வாழ் தெய்வத் தலமெலா மிறைஞ்சி யேத்தி.

பிரமர முரன்று செந்தேன் பிலிற்றவண் டிசைகள் பாடு
மருமலர்ப் பாரி சாத வனஞ்செறி வளம்பெற் றோங்கித்
தெரிசனம் புரிந்தோர்க் கட்ட சித்தியு மழிவி லாத
அரியநல் வீடு நல்கு மஜகஜ புரத்திற் சார்ந்தான். (அ)

முந்தைமா தவத்தா லிந்த முதுபதி யடைந்தோ மென்னச்
சிந்தையி லார்வம் பொங்கத் திகழுடற் புளகம் போர்ப்ப
வந்தனை புரிந்தா னங்கண் மார்க்கண்ட முனிவன் காணூஉ
எந்தையீங் குற்று யென்றே யெதிர்கொளா முகமன் பேசி. ()

ஆதர வாக வங்க ணளவளாய்த் தமிழ்தேர் தெய்வ
மாதவர்க் கொடுபோய் பன்ன சாலையின் வைத்தே அன்பா
யேதமி லதிதி பூஜை யியற்றியாங் கிருந்த பின்னர்
வேதமார்க் கண்ட ரோடும் விமலனைப் போற்ற வுன்னி. (௧0)

மனவலை யெறிந்து செல்லு மணிமுத்தா நதியின் மூழ்கித்
தினகரன் றீர்த்த மாடித் தேவர்க டேவைப் போற்றித்
தனிமிரு கண்டு சேயன் றன்னையன் பாக வேத்தி
வினியவித் தலத்தின் மேன்மை யியம்பென வவனுஞ் சொல்வான்.()

வேறு

இடர கற்றி நன்மை நல்கு மிவ்வி லிங்க மாதியிற்
சுடர வன்ப ணிந்து போற்றுஞ் சோதி யாகு மவனுறுங்
கடிகொள் வில்வ தாருவைக் கருத்தி லெண்ணிற் கண்டிடிற்
படியு ளோர்க ளழிவி லாத பரம முத்தி யெய்துவார். (௧௨)



ஆழி வேந்த னீன்ற மைந்த னருந்த வன்ச பித்ததாற்
சூழி யானை மேனியுந் துருவையின்மு கமுமாய்ப்
பாழி டங்கள் கானெ லாம்ப டர்ந்த லைந்திவ் வேலைவா
யூழின் வந்த சாப நீங்கி யுய்ந்து பேறு பெற்றனன். (௧௩)

அஞ்ச கேத னத்தி ஞானை ரண்ணல் சாப வேதுவால்
வெஞ்சு வான மாய லைந்து வில்வ நீழ லெய்தியே
வஞ்ச மான சாப நீங்கி வான வேந்த ஞயினு
னெஞ்சு மற்றை யோர்கள் பெற்ற தென்ன வென்றி யம்புவேன். ()

எம்ம னோர்க டவமி யற்றி யித்த லத்தி னெல்லைவா
யம்ம வென்சொல் கேன் வரங்க ளவர்கள் பெற்ற தளவிலை
யும்மை யெத்த வஞ்செய் தாய்கொ லுலக னைத்து மீன்றதோ
ரம்மை பங்க னருள்ப டைத்தி யாத லாலென் றோதினன். (௧௫)

வேறு

சொல்லியமேன்மைகள்கடமுநிசெவியிற்சுவையுணர்வெய்தியபின்
புல்லிய வுவகை பொருந்தின னவனி பொலிந்திடு சுகமுறவே
மெல்லியல் பங்கினு னழலவம் பலிலே விமலத் தடமொன்றங்
கல்விசெ றிந்திடு பதுமா காரம தாக வகழ்ந்தனனே. (௧௬)

அகழ்தட மீதிற் றீர்த்தங்க ளையா வாகன மறுவாலே
துகளற வேசெய் ததிலாங் கவன்முன் றோய்ந்தபின் னெல்லோரு
மிகபர வின்புற மூழ்கின ராதி இரத்நே சுரர்முன்பத்
திகழ்முநி யெய்திவ ணங்கிப் பாவித் திருவருள் பெற்றுடனே.(௧௭)

தோட்டிடும் வாவி சுவேதைச் சேது துலங்குமி டந்தனிலே
நாட்டிய விந்திரி முகமாய்த் தைமதி நலமிக வளர்பக்க
வாட்டமில் சத்தமி நாடனி லேவிதி மரபாற் சிவலிங்கங்
கோட்டமி லாமல மைத்தா தரவாய்க் குளிர்பூ சனைசெய்தான். ()

அருமறை முநிவன் றன்பெயர் சாத்தி யகத்திய லிங்கமென
யொருபெய ரிருநில மேத்தச் செய்தங் கொருதர மர்ச்சித்தே
கருணைசெ யஜகஜ நாதன் றன்னைமுக் காலமு மலர்தூவிப்
பொருவறு மண்பொடு விதிவழு வாமற் பூசனை முறைசெய்தான். ()

வேறு

அரியயனுக் கரியானை யடியவருக் கெளியானை
யணிசேர் வில்வப்
பெரியநிழல் வீற்றிருந்த பிறைமவுலிப் பெருமானைப்
பிசகா வன்பிற்
றெரியுமுறை யருச்சித்தே தேவர்கடே வன்கருணை
செயவே நேசம்
புரியவரு நிருவிகற்ப சமாதிசா தித்திருந்தான்
பொதிய நாதன். (௨0)

குறுமுநிபூ சைக்குவந்து வெள்விடைமேல் மாணிக்கக்
குன்று போன்று
மறுவறுவெண் பிறைச்சடையும் வயங்கிய முச் சுடர்விழியு
மந்த காசச்
சிறுநகையு மணிமகரத் திருக்குழையுங் கருமிடறுந்
திகழ்நாற் றோளு
முறுபுலியி னதளுடையு முமையொருபா கமுமிலங்க
வும்பர் போற்ற. (௨௧)

பாங்கர்வரு குறட்பூதப் படைசூழ வெழுந்தருளும்
பான்மை கண்டே
தேங்கமழு மலையமுநி திருநயனங் களிகூரத்
தரிசித் தேதண்
பூங்கமலச் சரணமிசை முடிபுனைந்து பணிந்தெழுந்து
புளக மேனி
தாங்கமலர்க் கைமுகிழ்த்தா டினன்பாடித் துதிகள்பல
சாத்தித் தானே. (௨௨)



வேறு

உருவா முடலா யுயிரா யுணர்வா
யுலகா யலவா மொருவா சரண
மருவாய் மலரா யுமையா ளுடனே
மகிழ்வா யுலகந் தருவாய் சரணங்
கருவே ரறவே யடியார் பவமார்
களைவே தனையே களைவாய் சரண
மருவா யுருவா யுபயமு மாகு
மஜகஜ நாதா சரணஞ் சரணம். (௨௩)

சினவிடை முடிமிசை நடமிடு சரணு
திரிபுர தகன விசையனே சரணஞ்
சநகனை முதலிய வவர்கதி பெறவே
தவகுரு வடிவுறு தலைவா சரணந்
தனதடி யவனென வெனதிரு வினையின்
றளையற வருள்செய்வி தரண சரண
மனநடை யுமையன் பாபிம ணாளா
வஜகஜ நாதா சரணஞ் சரணம். (௨௪)

பரசே கரனே சரணஞ் சரணம்
பனிமா மதிவே ணியனே சரண
முரைசேர் மறையுட் பொருளே சரண
முரகா பரணு சரணஞ் சரணம்
விரைசே ரிதழித் தொடையாய் சரணம்
வில்வவ னத்துறை விமலா சரண
மரசே கரசே கரனே சரண
மஜகஜ நாதா சரணஞ் சரணம். (௨௫)

தாதகி நதிபுனை சடையாய் சரணந்
தமருக கரசங் கரனே சரணஞ்
சூதன தனவுமை பாகா சரணந்
துதிசுந் தரர்விடு தூதா சரணம்
வேதப தஞ்சொலு நீதா சரணம்
விழைவா ருளமே வியவா சரண
மாதபன் வந்தித பாதா சரண
மஜகஜ நாதா சரணஞ் சரணம். (உசு)

வேறு

இன்பத யாநிதி சரணமெ னத்தொழு
மிருடி மனத்தெண் ணு
மன்பெரு வரமினி துதவிய ருட்குறி
வடிவா யினன்முனிவ
னன்பெனும் வலையினி லெளிதில கப்படு
மையனை யினிதேத்திப்
பொன்பயி லடிதொழு தேவிடை கொண்டருள்
புரிதரு முமையானை. (உஎ)

கணபதி சேயுமை தம்மைவ ணங்கிக்
கனிவுற் றேமறைதே
ருணர்வுள மார்க்கண் டயனுமி டங்கரி
லுற்பவ முநிவரனு
மிணர்விரி பதரி காச்சிர மத்தினி
லெய்தின ரெவரேனு
மணமலி கமலத் திருமகள்
வளரிம் மாதல மதில்வந்தால். (உஅ)



இம்முநி வரருக் கிணைகதி பெறுவா
ரெவ்வுயி ரும்பரிவாய்
மும்மல மற்றுயர் பேரின் பந்தரு
முத்தியி னிற்செலவே
பொம்மல்வ ரந்தரு மகலிட மீதிற்
புரிகுழ லுமைபாகச்
செம்மலி ருக்குமி டங்களி லிவ்விட
மேதிவ் விகமாமே. (உகூ)

வேதமு மாகம சாரமு மெண்ணெண்
மெய்க்கலை யுந்தெளிவா
யோதிய வருணச் சிரமத் தரும
வொழுக்கமு றைப்படியே
நீதிந டத்திய மநுபதி முன்னம்
நேசத் துடனெய்தித்
தீதற வஜகஜ நாதனை வந்தனை
செய்துவ ரம்பெற்றான். (௩0)

எண்டிரு வுங்குடி கொண்டும னத்தினி
லிட்டமெ லாமுதவ
மண்டல மெண்டிசை யானள வுந்தன்
வசனப் படிசெய்ய
வண்டர் வியந்திடு மாந்தா தாவெனு
மரையனு மங்கெய்தித்
துண்டம திச்சடை ரத்நே சனைமுன்
றொழுதுவ ரம்பெற்றான். (௩க)

ஈறில்வ ரம்பெறு வாலா சுரன்முத
லெண்ணறு தானவரை
மாறில்வ ளைந்தொரு தநுவால் வென்றுயர்
வாசவன் வாழ்வுறவே

பேறுத ருந்திறல் சேர்முசு குந்தன்
பெருகிய காதலின்வந்
தாறணி செஞ்சடை யஜகஜ நாத
னடிதொழு தின்புற்ருன். (௩௨)

அரசியன் முறைமைவ ளர்ந்திடு முக்கிய
வரையர்க ளிற்பெரியோன்
சரிதமு ரைத்தன னெனவுய ரிமையவர்
சபைபுக ழும்முரவோ
னிரவிதன் மருமக னுகும ரிச்சந்
திரனன் னிலையேபோய்ப்
புரகா னஜகஜ நாதன் பூசைபு
ரிந்துவ ரம்பெற்ருன். (௩௩)

எண்ணே ழாகிய தேயத் தவருக்
கிறையாய் முறையாலே
தண்ணேர் கவிகையி னிழலினு யிர்க்கொகை
தங்கட் கனைபோலே
யுண்ணே யம்பெறு மன்னதி வீரனு
வந்தங் கனமெய்திப்
பண்ணேர் மொழியுமை பங்கன் ருளைப்
பரவிக் கதிபெற்ருன். (௩௪)

ஒல்லைத ருங்கண மரையா கினுமல
தொருகண மாகினுமிவ்
வெல்லையில் வாசம் பண்ணினர் கைவரு
மிணையறு முத்தியெனச்
சொல்லிய விவ்வுரை சத்திய மாகுந்
துருவைத் திங்களிலே
யல்லை யகற்றிய மதிவளர் பூரணை
யதினே யவனுளும். (௩௫)



கூடிய நாடனில் வெய்யோன் மறுவைக்
கூறி யவன்வாவி
யாடினர் தேகாந் தத்தினி லேபிதி
ராயின வவருடனே
தேடிய தற்பர னல்லுல கத்திற்
சேருவர் பாறல்மதி
நாடிய பூரணை யுடனே முறமு
நண்ணிய நாடனிலே. (௩௬)

கதிரவ னுச்சிசெல் காலையி லான்பால்
கலமு மதிற்பாதி
யதிரச மாகிய தேனுஞ் சரியா
யாடா னையிலீசன்
மதிமுடி யாட்டினர் கோடிகு லத்தொடு
வளர்சிவ லோகத்திற்
பதிவர் விருச்சிக மதியிற் பானுப்
பனிமதி வாரத்தில். (௩௭)

மற்றைய புண்ணிய நாளினி லாகினு
மார்க்கண் டயதீர்த்தம்
டற்றைத் தவிர்செயு மன்னிய தீர்த்தப்
பாணியி னிற்படியா
வற்றைப் பொழுதினி லேபிதிர் தர்ப்பண
மன்பி னியற்றினபேர்
கற்றைச் சடைமுடி யெமதிறை யுருவங்
காதலி னடைவார்கள். (௩௮)

வேறு

துலைமாமதி யினிலேவரு சுதினந்தனில் மலையக்
கலைமாமுனி வரன்வாவியிற் கதிர்தோன்றுமுன் னுடி
நிலைசேர்பிதிர் மறுவேசொலி நெறிசேர்கரை யினிலே
தலையாகிய பிண்டப்பிர தானம்மது செய்தால். (௩௯)

அரன்மேவிய உலகத்தினை யடைவார்குட மதியில்
வரமார்சிவ நிசியிற்றுதி வளரக்கர மைந்து
முறைசெய்துயர் தீர்த்தங்களி லுடன்மூழ்கிய பின்னர்ப்
பரிவாகிய பஞ்சாமிர்த பகர்கௌவிய முடனே. (௪0)

சுவையாகிய கனியுங்குளிர் சுத்தோதக முதலா
மிவையாகம முறையாலுமை யீசன்முடி மீதே
நவைதீரபி டேகஞ்செய்து நறுமாமலர் சூட்டி
யிவையாகிய செந்நெல்லன மிசையுங்கறி வகையும். (௪௧)

அளியாகநி வேதித்துய ரானின்னறு நெய்யா
லொளியாகிய தீபத்துட னுபசாரமு முதவிக்
கிளிபோன்மொழி மடவார்பல கீதத்துட னடநம்
மிளிர்தோகைய தெனவேசெய மெய்ப்பூசனை செய்வோர். ()

முத்திச்செறி வித்தாகுவர் மொழியும்மிது நிசமே
தைத்திங்களின் மாகத்திசைத் தடமூழ்கிமெய் யன்பர்
துய்த்தின்புற வகைநல்கிய தூயோர்சிவ துல்லி
யத்தின்புறு வார்கண்முறை யவர்வாதையு மகலும். (௪௩)

மறமல்கிய வாடானையில் மடமொன்று மியற்றிக்
கறையுண்கள னடியாரவர் கட்கன்னம ளித்தா
லறைகின்றதோ ரன்னப்பய னதனுக்கயு தம்வா
னிறைவன்பத மெய்திப்பினி ரின்பக் கதி பெறுவார். (௪௪)

தீர்த்தங்களி லொருவாவகைத் தினமும்படி வோர்கள்
பார்த்தன்சிலை யடிபட்டிடு பரனாகுவ ரன்பு
கூர்த்தங்கிசை நந்தாவனம் வைத்தேகுல மாத்தே
னார்த்துண்டிடு மலரோரெமை யாள்வோனடிக் கணிந்தால். ()

நாதன்றிரு வடிவெய்துவர் நலமேவிய மாசி
மாதந்தனி லேபூரணை வளர்நண்பகல் வேளைப்
பேதந்தரு பெரியோர்க்கொரு பிடியன்னம ளித்தா
லேதந்தபு கதியெய்துவ ரிதுநிச்சய மாமால். (௪௬)



அருளித்தல வெலைசெப்பிடி னந்தெல்லையி னளவாந்
தெருளுற்றதில் வாழும்பல சீவத்தொகை யெல்லாங்
கருணைக்கடன் மலைபெற்றிடு காமக்கொடி படருந்
தருவைப்புணர் தருநித்திய சாயுச்சிய மெய்தும். (௪௭)

வேறு

வாசமா மாவி னெய்யால் மதிமுடி ரத்நே சர்க்குத்
தேசுலாந் தீப மொன்று திருமுன மியற்று மேலோர்
பாசமாம் பிறவித் துன்பம் பாறவே யழிவி லாது
மாசிலாத் தானம் வீற வதிகுவ ரென்று மாதோ. (௪௮)

வேறு

கருங்கய னுட்டக் கடைசியர் குரவைக்
கம்பலைக் கெழுந்திடும் வாளை
நெருங்கிய பெண்ணைக் கனியினை யுதிர்க்கு
நிறைவளர்ப் பண்ணைசூழ் கிராம
மருங்கினி லசைத்த புலியதண் மீது
வாளராப் புனைந்தரத் நேசர்க்
கிருங்கரு ணையினு னளித்தவர்க் கன்றே
னேணியாங் கவரது காணி. (௪௯)

வனத்தினை வனைந்த மவுலிரத் நேசர்
மகிழ்வுறு திருப்பணி செய்ய
மனத்திடை நினைவோர் பொருள்நனி கொடுப்போர்
வாங்கிய தியற்றுவோ ருவகை
செனித்திடக் கண்டங் குபசரித் திடுவோர்
செவியினிற் கேட்டுள மகிழ்வோர்
தனிப்பெருஞ் சோதி யகண்டபூ ரணமாஞ்
சாயுச்சிய முத்தியை யடைவார். (௫0)

காம்பன மென்றேண் மயிலிய லுமையாள்
காந்தரி ரத்நநா யகர்க்கே
தேம்படு கமல வாவிசூழ் நாடு
திகழுமோ ரூர்தி லொருசே
யாம்பரி வரபூ தானம தியற்று
மறிவுளோ ரமரருக் கரிதாய்க்
கூம்பலஞ் செங்கை யடியவர் வாழ்வு
கொளுஞ்சிவ புரிக்குநா யகரே. (ருக)

அஞ்சன வேற்க ணுமையொரு பாக
ராதிரத் நேசருக் கினிய
மஞ்சனக் குடங்கள் வெஞ்சன வறையின்
வழங்கிய வுடைகலந் தீப
மெஞ்சலி லாத வாடையா பரண
மிசைந்திடுஞ் சத்ரசா மரைகள்
கஞ்சநற் றூர மாசையாற் புரிவோர்
கண்கண்மூன் றுடையவ ராவார். (ருஉ)

அம்பலத் தாடு மெந்தையா டானை
யையனுக் கைந்துமா டுதற்கே
கொம்பினிற் *களத புதம்பொதி சுரபி
கொடுப்பவர் தெங்குநீள் கதலி
வம்புலாஞ் சூத மாதுளை பூகம்
வருக்கநற் கனிநிறை தருக்க
ளிம்பரிற் கந்த நந்தன வனங்க
ளியற்றுவோ ரிறையுருப் பெறுவார். (ருங)

* களதபுதம்=வெள்ளி.



வேறு

தும்புருநா ரதர்கான விசைபருகுங் குழைக்காதர்
துதியா டானை
யெம்பெருமான் றிருமுன்னர்ச் சுத்தநிர்த்தஞ் செயச்சந்த
மிசையப் பாட
வம்புருவச் சிலைவிழியம் பணியுநவ பாத்திரமா
மடிமை சேர்ப்ப
ரும்பர்களு மறிவரிய நம்பர்பதி யாசுரிமை
யுறுவ ரன்றே. (ருச)

எங்குமா யகண்டபரி பூரணமாய் நிறைந்தபொரு
ளிசையு மேன்மை
தங்கியவித் தலத்திலருட் குறியாகிப் போகமோட்
சங்க ணல்கி
மங்கலமா யுயிர்க்கெல்லா மருள்சுரக்கு மீதறிதி
மகிமை சேரு
மிங்கிதமா கியகாம தேநுபூ சனைபுரிந்த
வியல்புஞ் சொல்வாம். (ருரு)

அகத்திய பூசைச் சருக்க முற்றும்.

ஆகத் திருவிருத்தம்—சருச.

ஒன்பதாவது

## காமதேநு சாபமடைந்த சருக்கம்.

படிமுத லுலகெலாம் பணிய வல்வினைத்
தொடாறு சூதனைத் துதித்து நற்றவ
முடிவருஞ் சவுநக முனிவி னுவுவான்
கடிவளர் கோமுத்தீ சுரத்தின் காதையே. (க)

தொகைபெறச் சொற்றனை யைய தொன்மையாந்
தகைமைசேர் தேநுவெத் தன்மை யேதுவாற்
சிகைமலை வல்லியைச் சிறந்த பூசையு
வகையுறப் புரிந்துநல் வரங்கள் பெற்றதே. (௨)

என்னலுஞ் சூதமா முனிபி யம்புவான்
முன்னொரு காலையின் முதல்யு கத்தினில்
யின்னமில் தேவகா ரியத்தின் பெற்றியால்
மின்னுவா னுலகங்க ளவைக்கு மேலதாம். (௩)

சத்திய லோகத்திற் சாப மேந்திய
கைத்தல வேந்தனுங் கடவுட் டேவருஞ்
சித்திசேர் முனிவருஞ் சென்று கூடினு
ருத்தம தேநுவவ் வுழையிற் சென்றதே. (௪)

சென்றவ ரனைவருந் தேறல் பெய்திடு
மன்றலங் கமலமேல் வைகும் வேதியன்
பொன்றிக ழடியினிற் பணிந்து போற்றியே
யன்றுதங் கருமங்க ளனைத்து மோதினர். (௫)

உந்தியங் கமலமீ துற்ப வித்திடும்
அந்தண னுலகினி லமரர் தம்மொடு
வந்தவா னிருமதி வைகுங் காலையிற்
செந்தழ லோம்புவ சிட்ட மாமுனி. (௬)

கடுகிமுன் வந்திடுங் காம தேநுவுந்
தடைபட வின்னுந்தா மதித்த தென்னெனக்
கொடுவினை யகற்றிய கோதின் மாமுனி
வடுவறு மறிவினன் மனத்தி னெண்ணியே. (௭)

பாமக ணாயகன் பதியில் வைகிய
கோமனத் தெணிவந்து கூடு தற்குமுன்
வாமமா மகஞ்செய மதிக்குங் காரியக்
தாமத மாயின தெனத்த போதிதி. (௮)



தேநுவே கிருதுக்குச் சிறக்கு மங்கம
தானநீ யணைந்திடா நிமித்தத் தாலினி
யூனமில் மகங்களுக் குதவி செய்திடாக்
கானுறு துருவையின் காய மாகவே. (௯)

நண்ணுவா யென்றிவை நவிற்றி யேயருட்
டண்ணன்மா தவமுனி சாப நல்கியே
வண்ணவாச் சிரமத்தில் வைகும் வேலையிற்
பண்ணிசை மகதியாழ் பயிலு நாரதன். (௧௦)

கடவுண்மா நதிமுதற் காதற் றீர்த்தங்கள்
படிவதற் கெய்திய பதவை நள்ளினற்
றிடமன வசிட்டனுச் சிரமத் தேகவே
முடிவிலா வருந்தவ முனிவன் கண்டனன். (௧௧)

கண்டன னாசனங் கற்பித் தேமகிழ்
கொண்டன னதிதிபூ சனைகொ டுத்தனன்
முண்டகத் தவன்றரு முனிய ருந்தியே
தண்டளிர்த் தருப்பையா சனத்தில் மேவினன். (௧௨)

புனிதவா சனத்தினிற் பொருந்து மாமறை
முனிவரன் கமலமா முகத்தை நோக்கியே
நனிசினத் தான்முன நடாத்து காரிய
மினையதென் றருந்ததிக் கிறைவன் செப்பவே. (௧௩)

மேயவன் வசிட்டனை வியந்து கூறியே
தூயனே நிந்தையாய்ச் சொல்லு மாற்றநின்
வாயினாற் செப்புதன் மாயன் றற்புத
மாயகற் றவத்தினோர்க் கடுக்கு மோவிது. (௧௪)

காமியந் தருதிறற் காம தேநுவோ
சேமவான் றுதிக்கத்தெய் வீக மெய்தியும்
பூமகிழ் புண்ணியப் பொருள தாகியு
வாமமார் வேதத்தின் வடிவ மாகியும். (௧௫)

நிற்குமத் தேநுவை நீச பித்தது
மற்கொளுந் தடம்புய வாச வன்முதல்
விற்குல வியவரி விண்ணின் மேவிய
நற்கட வுளர்க்கெலா நவைபு ரிந்தனை. (௧௬)

செம்மலர் மேவியே சிருட்டி செய்பவன்
மும்மையு முணர்ந்தமான் முதலி னோர்க்கெல்லாம்
சம்மதி யில்லவாந் தன்மை யாகவே
யம்மனீ சபித்தனை யகார ணத்தினால். (௧௭)

ஆதலாற் றேடம்வந் தடுத்த துன்றனைத்
தீதருள் பாதகந் தீர வேண்டியே
மாதவ மிட்டிகள் வள்ளல் பூசனை
யேதமில் விதிமுறை யியற்ற வேண்டுமால். (௧௮)

வேண்டிய தானம்பூ மீதி லேபுகழ்
பூண்டிடு புண்ணிய பூமி தன்னிலே
பாண்டிய தேயத்திற் பனக மாநதி
யாண்டெழி றந்திடு மதற்க வாசியில். (௧௯)

வேரல்வெண் ணித்திலம் வேழ வெண்மருப்
பாரநீள் காரகி லசோக நாகமுஞ்
சேரிரு மருங்கினுந் திரைகொ ழித்திட
வாரியிற் செலும் வைகை நதி வடாது பால். (௨௦)

அடல்விடைக் காளையார்க் கங்கி திக்கினிற்
றொடரிரு யோசனை சொல்லு மெல்லையுண்
மடல்விரி கமலமின் வதன மாய்த்தழைத்
திடுபுனல் வாயுவி னிருதி திக்கிலே. (௨௧)

கிளருமி யோசனை யொன்றிற் கேடிலா
தளவறு மிசைகொளா டானை நாதனார்
வளருவ ரவருக்கீ சான மாதிரத்
திளமதி நுதலுமைக் கிந்த்ர திக்கினில். (௨௨)



அம்புய மலர்த்துவோ னகழ்ந்த வாவியுண்
டும்பரும் படிவரவ் வுதக மூழ்கிடி
லிம்பரிற் காரண மின்றிச் செய்திடு
வெம்பவ மகற்றியே வீட்டி லெய்தலாம். (௨௩)

திவவியா ழேந்திய தெய்வ மாமுநி
தவவசிட் டனுக்கிவை சாற்றிப் பின்னருங்
கவலுநெஞ் சுடனயர் காம தேநுவுக்
கவமுறு சாபமு மகல வெண்ணியே. (௨௪)

அரனடிக் கன்புள னாகி மேன்மைசேர்
திரனுணர் வுற்றவ சிட்டன் வேள்வியில்
வருவதற் காகத்தா மதித்த தென்றன்றே
புருவையாய்ச் சபித்தனன் புண்ய தேநுவை. (௨௫)

என்செய்வே மிதற்கென வெண்ணி யேமணி
மின்செயு நெடுமுடி வேதன் வைகிய
மன்செழும் புவனத்தில் வதிந்து போதகன்
றன்செழு வடிவினைத் தழைப்பக் கண்டனன். (௨௬)

மாடக மகதியாழ் மாத வன்மல
ரேடகத் தண்ணலை யிறைஞ்சி யேத்தியே
நாடகங் குழைந்துமுன் னடந்த தோதவே
ஆடக வுலகரு மயனுங் கேட்டபின். (௨௭)

கம்பித மாகியே கலங்கி வானவ
ரம்பரத் தினிற்பவ மான தேநுவால்
நம்புல குய்வதா மென நவின்றனர்
வெம்புறு தேநுவே தியனைப் பார்க்கவே. (௨௮)

ஆட்டுரு வெய்திவந் தணையுந் தேநுவைப்
பாட்டளி மூசிய பதும னோக்கியூழ்
கூட்டிய சாபநீங் குவதற் கெண்ணுவான்
நீட்டிய தேவகா ரியத்தி னேதுவால். (௨௯)

இவ்வுழை யெய்திய வின்பத் தேநுவுக்
கவ்விய சாபம்வந் தடுத்த தென்னென
வெவ்வமி லாவகை யெண்ணி நான்முகன்
றிவ்விய தேநுவை நோக்கிச் செப்புவான். (௫௦)

எழுவகை முநிவரி லேற்ற மாகியே
வழுவின்முக் காலத்தின் வரவெ லாமறிந்
தொழிவறு தருமநூ லுணர்ந்து நீர்பெறு
விழுமிய வசிட்டன்முன் விளம்பு சாபத்தை. (௫௧)

அகற்றுவ தரிதநு பவிக்க வேண்டுமா
லிகப்பெரு மர்தவ னேது வின்றியே
சகித்திடா வகையுனைச் சபிக்குந் தன்மையால்
விகற்பமா யவனுக்கு மேவுந் தோடமே. (௫௨)

அந்தண னிவைசொலி யானி னுக்கினி
வந்திடு சாபத்தை மாற்ற வேண்டியே
நந்திய விடஞ்சொல்வா னவம ணித்திரள்
சிந்திய பொன்னியின் றென்பு லத்திலே. (௫௩)

புண்ணிய தலமுமொன் றுளது போதினிற்
றண்ணறுப் பில்குமந் தார மாவனத்
தண்ணல்பாற் போந்துநா மர்ச்சித் தோமுன
மெண்ணிலா முநிவர ரிறைஞ்சு மவ்விடம். (௫௪)

மாதிவா கான்றொழு வரும நாதியாய்ச்
சோதியாய்ச் சூக்கும வுருவந் தோற்றியே
யாதிரத் நேசுர னவாசித் திக்கினில்
மோதுதெண் டிரையெறி மணிமுத் தாநதி. (௫௫)

பற்பல வாற்றினிற் பாவ நாசமென்
றற்புத நாமமொன் றதுவ ணிந்திடும்
பொற்புறு புநித நீர் பொலியு மந்நதிக்
கிற்புறு முத்தாத் திருக்கு மீசற்கே. (௫௬)



இலங்குபா ரத்துவா சேச னென்னவே
துலங்கிய பெயருமொன் றுளது தொன்மையாந்
தலங்க ளோர் மூன்றுமே தான்று தித்திடப்
பலன்தரு மவர்தமைப் பணிந்து போற்றினுல். (௫௭)

வேதியர் வதைமுதல் வினைக டாந்திடு
மாதலால் விரைவினி லங்க ணெய்தியே
நாதனைப் பூசைசெய் யென்று நாண்மலர்ப்
போதனிவ் வகையெலாம் புகன்றிட் டானரோ. (௫௮)

சிந்துவின் பஃறலைச் சினவ கிக்குமேற்
கந்தர வுருக்கொடு கண்டு யின்றவ
னுந்தியம் போதின னுரையுட் கொண்டுடன்
வந்ததத் தலத்திடை வளருந் தேநுவே. (௫௯)

**காமதேநு சாபமடைந்த சருக்கம் முற்றும்.**

**ஆகத் திருவிருத்தம்—௪௯௫.**

பத்தாவது

## காமதேநு சாபவிமோசனச் சருக்கம்.

சகசமலர்த் தொடர்பறுத்த சவுநகமா முநிகேட்கத்
தயவு கூர்ந்து
சுகுணமொரு வடிவெடுத்த சூதமா முநிவுரைப்பான்
றொழுவோர்க் கெல்லா
மிகபாகல் கியவாதி ரத்நேச னிருக்குமந்த
விடத்தி னுமம்
பகரினுயர் பதுமபுர மென்றுகு மூவுலகும்
பணிந்து போற்ற. (௧)

கருணைசெயு மவ்விலிங்கங் காலவனு தியமுனிவோர்
கசிந்து வந்தே
மருமலர்தூய்ப் பூசைமுறை வழுவாது புரியவருள்
வழங்கு நாதன்
பொருவருமப் புண்ணியத்திற் புண்ணியமா கியதேனு
போந்து வாச
முருகுயிர்க்கு முண்டகத்தோன் மொழிந்தபடி சாபமோ
சனம தாக. (௨)

வேண்டிமணி முத்தாற்றின் விரைப்புனலி னன்புமீக்
கூரத் தோய்ந்து
சேண்டிகழும் வில்வமூ லத்திறைக்குத் தன்பாலாற்
றினமு மாட்டி
நீண்டிடுதா லத்தாலே குச்சுப்புற் சாத்திவிதி
நெறிவ ழாம
லாண்டினிய பூசைசெய்தே யகங்குழைந்து நூறுவல
மன்பாய் வந்தே. (௩)

ஆலயத்தை வாலாற்றூர்த் தண்ணறனைப் பூசைநித்த
மன்பாற் செய்ய
வேலைவிட முண்டபிரான் வெள்ளிவெற்பை நிகரான
விடைமேற் றோன்றிக்
காலையலர் வனசமுகக் கவுரியிடப் பாலிருக்கக்
கற்றை வேணி
மாலையிளம் பிறைதயங்க மலரயன்வெண் டலைமாலை
மார்பிற் றாங்க. (௪)

தவளசங்கக் குழையிலங்கத் தருணவரு ணம்பாசு
தளிர்க்கை தாங்கித்
திவளொளிவெண் ணீறிலங்கச் சினவுழுவை யுரியரையிற்
சிறக்க நீண்டு



துவளரவ கேயூரந் தோளின்மிசை நெளிந்தி லங்கத்
துங்க மேவு
கவளமத யானையதள் மணிவரைமென் முகில்போலக்
கவின்கொண் டோங்க. (௫)

கடம்பணிந்த திண்புயத்துக் கதிரிலைவே றுங்கியகாங்
கயனு மேர்கொள்
தடங்கைமத வாரணமுந் தமனியநாட் டிமையவருந்
தவமே லோரு
முடங்கெயிற்றுப் பாரிடமு முழங்குதிரைக் கடல்போல
மொய்த்து மேவ
வடங்கிடந்தோ னறியாத மலரடியெம் பெருமான்முன்
வந்து நின்றான். (௬)

கண்டவுடன் முகமலர்ந்து காமதே நுப்பணிந்து
கால கால
வண்டளவு தண்டளவ மாலைமலர்க் குழலுமையாள்
வாம பாகா
அண்டரெலாம் பணிந்தேத்து மாரணத்தி னுட்பொருளே
அநாதீ யென்று
விண்டதுதி மொழிந்திடலு மதற்கடுத்த கொடுஞ்சாப
வினையைத் தீர்த்தே. (௭)

இட்டிகளுக் குரித்தாய்நீ யிருக்குமிடத் தேகுவையென்
றிசைத்துப் பின்னுங்
கிட்டிவந்து சிவனதனைத் தைவரவா னவரெல்லாங்
கிளர்பூ மாரி
கொட்டினர்நா யகன்வாக்காற் கோமூத்தீச் சுரனெனும்பேர்
கூறி வாச
மட்டவிழுங் கமலமகள் வளருமிந்தத் தலத்தொருகால்
வந்த தூயோர். (௮)

பாதகமெ லாந்தீர்ந்தெம் பதத்தடைவார் நமதுமேற்
பாவின் மிக்க
காதலின்முக் காற்பாணக் கிடையினிலுன் பெயராலோர்
கயமுந் தொட்டுப்
போதணிகூ விளமொன்று பொற்பினுண்டாக் குவையென்று
புகன்று போத
நாதன்மறைந் திடத்தேநு நம்பனரு ளியபடிநாற்
குளம்பி னாலே. (௧௯)

சதுரமுற நான்மூலை தருதடமொன் றுண்டாக்கித்
தன்பா லாலே
பதினிறையப் பெருக்கிமந்தா கினிமுதலா மதிமநுவை
யாசி லாத
கதியுதவு கவுரிமநுக் களைமனத்தி னினைத்தாவா
கனமுஞ் செய்தே
மதிபெருகப் படிந்ததன்செய் கரையிலொரு மாலூரம்
வளர்த்த தம்மா. (௨௦)

சீரநிறை யத்தடத்திற் சித்திரைத்திங் களிலமுத
கிரணன் பாநு
சேருமுவாத் தினத்தினிலே தேநுவுக்கு வருசாபந்
தீர்ந்த தந்த
வாரமுதற் கோமுத்தீச் சுரமெனும்பேர் வாய்ந்ததுகோ
வாவி தன்னில்
நாரமுட னேயொருகா னனமியற் றினர்பாவ
நாச மாகி. (௨௧)

சம்பத்து நாடோறுந் தழைக்கவிக போகங்க
டனையுந் துய்த்தே
பிம்பர்க்கு ளனைவோரு மேத்தவே புத்திரரோ
டிருந்து தேகந்



கம்பித்தே நிலைதளருங் காலத்திற் கதியடைவார்
கதிர்கால் வீசி
வெம்பிச்செல் லயனமிரண் டைப்பசிசித் திரைத்திங்கள்
விடுக்க ளோடு. (௨௨)

சந்திரசூ ரியகிரண தைம்மதிமா கந்தனிலா
தரவு கூரச்
சுந்தரஞ்சேர் சீரகுண்டந் தோய்ந்தவர்க்குக் கொடும்பாவத்
தொடர்பு நீங்கும்
வந்தசிவ நிசித்தினத்தில் மகிழ்ந்துபடிந் தாற்கோடி
மடங்கு மேன்மை
நந்துபலத் தினையடைவர் சீரகுண்ட மகத்துவத்தை
நாடித் தானே. (௨௩)

பிரமவிரு டிகடேவ முனிவர்சந காதியராம்
பெரிய யோகி
சுரர்களுமத் தடத்தில்வந்து தோய்ந்துயர்ந்து தவஞான
சுகிர்தம் பெற்றே
வரமுதவு நியமமுடன் தநுர்மாத வாதியினில்
வந்தி ருந்தே
தருமநெறித் தலத்துபவா சம்புரிந்து நத்தபோ
சனமுஞ் செய்தே. (௨௪)

மாதாந்தத் தினிற்பலன்பெற் றவரவர்க ளிருக்கையிற்போய்
வதிந்தா ரிந்த
வேதாந்த முணர்ந்தவர்கள் விரும்பிவந்து படிந்துபலன்
மேவ லாலே
தீதார்ந்த வினையகற்றுஞ் செகத்தோர்க்குச் சொல்வதென்னோ
தேமார் வாசப்
போதார்ந்த திருமாது வளருமிந்தத் தலத்தினுக்குப்
போவோ மென்றே. (௨௫)

மூன்றடியங் கனநடந்தா லோரடிக்குப் பாவங்கள்
முழுது நீங்கு
மூன்றுமிரண் டாமடிக்குச் சொர்க்கபத வியையடைவா
ருயர்ந்த போகந்
தான்றருமூன் றுமடிக்குச் சாலோக மடைவரிது
சத்யஞ் சத்யம்
நான்றமுந்நூ லணிபுயத்து நாரதன்சொற் படிவசிட்ட
னண்ணி னானே. (௧௬)

சூரியபுட் கரணியிலே தோய்ந்துகரை யினிலிருந்து
சோதி முன்னர்ச்
சீரியவாண் டொன்றளவு புசிப்பின்றிக் கால்சருகு
தினமு மாந்தி
நேரியபா வங்களெல்லா நீங்குதற்கு மெய்ஞ்ஞான
நிறைந்து பத்தி
கூரினிய மனத்தினனாய்ப் பரம்பரனைப் பணிந்துதுதி
கூறி னானே. (௧௭)

ஆரணத்தின் வைதிகமந் திரத்தாலர்ச் சித்தேயாண்
டொன்று வைக
வாரணத்தி னுரிபோர்த்தோன் மகிழ்ந்துவரு டாந்தத்தில்
வருதேண் மாதப்
பூரணையில் வெளிப்படலும் வசிட்டமுநி யுளங்குளிரப்
புளகம் பூப்பக்
காரணனைத் தரிசித்தே கமலமல ரடிபணிந்து
கசிந்து நின்றே. (௧௮)

ஒளிவளருஞ் செங்கதிரோ னியற்றியநற் பூசைநித்ய
முவந்தாய் போற்றி
தெளிபுனலு மிளம்பிறையுஞ் செய்யசடை மீதணிந்த
தேவே போற்றி



யளிமுரலு மலர்க்கூந்த லன்பாயி பங்கிலுறை
யமலா போற்றி
நளினமலர்த் திருவளரு மாடானை யாதிரத்ந
நாதா போற்றி. (௧௯)

வேறு

பரந்தொளி விரிக்குஞ் செய்ய பானுபூ சிதனே போற்றி
நிரந்தர மாகி யெங்கு நிறைந்தகா ரணனே போற்றி
வரந்தரும் பாரி சாத வனத்துறை மருந்தே போற்றி
புரந்தரன் முதலோ ரேத்தும் புராந்தகா போற்றி போற்றி. (௨௦)

கந்தர விடத்தாய் போற்றி கருணையங் கடலே போற்றி
பந்தணி விரலன் பாயி பாகனே போற்றி போற்றி
செந்தழ லுருவா போற்றி சீர்திகழ் திருவா டானை
யந்தளிர் வில்வ மூலத் தண்ணலே போற்றி போற்றி. (௨௧)

நீரணி சடையாய் போற்றி நிறைந்தநீற் றழகா போற்றி
காரணி குழலன் பாயி கலந்தபங் கினனே போற்றி
யாரணப் பொருளே போற்றி யஜகஜ புரனே போற்றி
நாரணன் றேட நின்ற நம்பனே போற்றி போற்றி. (௨௨)

தனிமுதற் பொருளே போற்றி சங்கரா போற்றி மேருக்
குனிசிலைக் கரனே போற்றி கொன்றைவார் சடையாய் போற்றி
புனிதனே போற்றி வானோர் போற்றுமற் புதனே போற்றி
பனிமதி நுதலன் பாயி பாகனே போற்றி போற்றி. (௨௩)

வேறு

கோலமலர்க் குழல் போற்றி குனித்தசிலை நுதல்போற்றிக்
கூர்வே லஞ்சு
நீலவிழிக் கடைபோற்றி நிலவுமிழு நகைபோற்றி நிறைந்த செல்வஞ்
சாலவள ராடானை யன்பாயி யுமைதனவுத் தரியம் போற்றி
பாலகர்மூ வரைப்பயந்த *பண்டியுஞ்சிற் றிடையுமிரு
பதமும் போற்றி. (௨௪)

* பண்டி = வயிறு.

வேறு

எனத்துதி யியம்ப வீச னிருடியை நோக்கி யுன்றன்
மனத்துயர் விடுவா யுன்பால் வருபவந் தீர்ந்த தென்றே
அநுக்கிர கம்பு ரிந்தே யாவின்பின் போக வேவித்
தனிப்பெரு மகங்கள் செய்வா யென்றிவை சாற்றிப்
போந்தான். (௨௫)

வேள்விசெய் வசிட்டன் காம தேநுவு மேவுஞ் சாப
வூழ்வினை யகற்றித் தாங்க ளுறையுமாச் சிரமத் துற்றார்
தாழ்விலா டானை தன்னிற் றனஞ்சய னெய்தி வேண்டும்
வாழ்விசைப் பூசை செய்து வரம்பெறு காதை சொல்வாம். ()

**காமதேநு சாபமோசனச் சருக்க முற்றும்.**

ஆகத் திருவிருத்தம்—௫௧௧.

---

பதினோராவது

## தனஞ்சயன் பூசைச் சருக்கம்.

குருகுலத்திற் பாண்டுவெனுங் கோமான்றன் முன்னுதித்தோன்
கருமைநிற வறற்கூந்தற் காந்தாரி மணவாளன்
திருகியவெஞ் சினமுடைய சேய்நூறு பெற்றெடுத்தா
னருடரும பாண்டுமன்ன னறுமக வீன்றன னால். (௧)

குந்திதவப் பேறான குலவேந்த ரறுவரினு
முந்தினவன் பாநுமனு முயற்சியினா லுற்பவித்தோன்
கந்தமலர் வாகைபுனை கன்னனெனும் பெயர்விளங்க
வந்தவவ னூற்றுவர்க்கு மாறாநண் புளனானான். (௨)

பஞ்சவர்க்குப் பகையானன் சுதன்றுரியோ தனனென்போன்
விஞ்சுபுகழ் பாண்டுபெற்ற வேந்தர்களை வெல்வதற்கு
நெஞ்சினி லோர்கரவாக நேயமா யழைத்தவரை
வஞ்சமுறு சூதாட மன்னரவர் தோல்வடைந்தார். (௩)



தோற்றவர்கான் சென்றடையச் சொல்லுமவர் நடுவுதித்த
வேற்றரியா கியவிஜயன் யெந்தைபாற் பாசுபத
மாற்றலுறப் பெறுவதற்கே யம்புவிக்குள் மிக்காகக்
கூற்றுதைத்த சேவடியோன் கூடுமிடந் தேடினனால். (௪)

வேறு

சருவசரா சரங்கள் வியு மந்த
வமையத்தி னுமைதன்வுத் தரியம் வீசப்
பரமசிவ னெழுத்தொன்று செவியி லோதிப்
பரமாய்த்தன் னுருவளிக்கும் பதியு மேலாந்
திருவதனை பூசனைசெய் சயிலம் காளன்
சிந்துரம்போற் றியசயில மிகல்போர் செய்யு
மிருவர்நடு தழற்பிழம்பா யாதி யந்த
வெல்லைகா ணற்கரிதா யெழுந்த குன்றம். (௫)

வரையுதவு பசுங்கொடிமெய்ப் பூசை செய்ய
மாநதிப்ர வாகம்வர மனத்தி னஞ்சி
நிரைவளையின் றழும்புமுலைத் தழும்புந் தோன்ற
நேராகத் திருமேனி தனையணைத்தே
புரையறுபூ சனைமுடித்தே வரங்கள் பெற்ற
புண்யதலங் கழுகுபூ சனைசெய் குன்றந்
தரைசிருட்டி செயுநாளின் முளைத்தே மேன்மை
தாங்கு குன்றம் பழையபெருஞ் சயில மாதோ. (௬)

அரவுபுலி யெதிர்வணங்க முநிவர் போற்ற
வருட்கர்மக் கொடிகாண வமர ரேத்தப்
பரமசிவ னடங்குனிக்கு மன்றம் வேத
பாலனுக்குப் பரைஞானத் திருமு லைப்பா

றாநுகர்ந்து தமிழ்மாலை சாற்றுந் தானந்
தரைபடியு முக்குளஞ்சேர் வெண்காந் தாரம்
வரமிகுபூ சனைசெய்மறைச் சிறுவர்க் காக
வலியதிறற் காலனைமுன் னுதைத்த தானம். (எ)

தேவர்பணி சிவராச தானி மேன்மை
திகழ்பதரி காச்சிரமங் கமலை வந்து
மூவர்முதல் வனைப்புற்றில் முளைத்தெ ழுந்த
முக்கணனைப் பூசனைசெய் தானஞ் சேயை
யாவலுடன் கறியமுது செய்தோன் முன்வந்
தருள்செய்வயி ரவதான மம்மை முன்னாட்
காவிரியின் கரைவந்து தோகை மேனி
காட்டியருச் சனைபுரிந்த கடவுட் டானம். (அ)

உலகின்று னரவுருவ நீங்கப் பூசை
யுஞற்றுதல மீராறு சரத்தி லோர்நா
ளிலகுசுர நதிதன்பாற் றோட நீங்க
வெய்தியே படிதீர்த்த மிசைந்த தான
மலகிலா நந்திபூ சனைபு ரிந்த
வைந்துநதித் தலமறையா ரணியஞ் சீதை
நலநுகரி ராமனிரா வணனைக் கென்ற
நவைதீர்த்துக் கருணைபுரி நாதன் றானம். (கூ)

சுத்தவிராட் புருடனுயர் துவாத சாந்தஞ்
சுந்தரன்மே வியதானந் திகிரி யீன்ற
முத்தனுறை தலஞ்சித்ர சபையின் றான
முதலாய மூர்த்திதலந் தீர்த்த மேன்மை

* சரம்=வற்சரம், வருடம்.



வைத்தவிட மெங்கணும்போய்த் தரிசித் தேத்து
மகிமையினால் வானவர்க ளவர்க்கெய் தாது
பத்தர்தொழ வருள்சுரந்த கருணை மேனிப்
பரமனுறை யாடானைப் பதியில் வந்தான். (கய)

வேறு

கோமுத்தீச்சுரமென் றெண்ணிக் கொண்டல்வாகனத்தோன்சேயன்
நாமுற்றீ றில்லா வாழ்வு நன்மையும் பெறலா மென்றே
காமுற்றங் கெய்தி வெய்யோன் கயமுதற் கீர குண்டத்
தேமுற்றே படிந்து மெய்யன் பிடைவிடா மனத்த னாகி. (கக)

வேறு

வெற்றிதரு பாசுபத விரதமநுட் டித்திருந்தே
முற்றியிட வரியதவ முதிர்வேனிற் பருவத்தி
லுற்றிடுபஞ் சாக்கினிநள் ளுறைதசரு கிலைபுசித்து
மற்றுடன்மா தேவனுக்கு வளர்நிருதி திக்கினிலே. (கஉ)

ஆங்கரைப்பா ணக்கிடையி னறநெறிசே ரிடத்திருந்தே
யோங்கியநற் றவங்கள்முடித் துபசார முறையாகப்
பாங்கின்வரு முக்காலம் படிந்துபுனல் வனத்தினுள
தேங்கிளரு மலர்தூவித் திரிகரண சுத்தியுடன்.

தண்ணமர்கூ விளமூலச் சயம்புவையர்ச் சனைபுரிய
அண்ணறிரு வுளமகிழ்ந்தே யரையிலங்கு புலியதளும்
பெண்ணமர்பா கமுங்கண்ணர் பிரமர்தலை மாலைபுனை
வண்ணமார் பமுமிலங்க மால்விடைமே லெதிர்கண்டான். (கச)

பல்லூழி நெடுங்காலம் பயிறவத்தான் பயின்வடிவம்
எல்லூருங் கதிர்கோடி யெழுந்ததென வெதிர்காணச்
சொல்லூரு மறைப்பொருளாற் றுதிகள்பல செயலுற்றான்
கல்லூர்பொன் முடிமிலைந்த காண்டீபத் தார்வேந்தன். (கரு)

மலரானே யருச்சித்த மதனுந்த காபோற்றி
கலினானே யெறிந்தவற்குக் கதியருளு வாய்போற்றி
கொலையாழி மாயனுக்குக் கொடுத்தபர னேபோற்றி
யலர்மாது வளர்திருவா டானையர னேபோற்றி. (கசு)

வெள்ளிமலை தாங்கினவன் விழவடியூன் றினைபோற்றி
தள்ளுகழ லடிவைத்தோன் றனக்கருளு வாய்போற்றி
யொள்ளியசீர் மாறனடிக் குதவிபுரிந் தனைபோற்றி
யள்ளன்மலர்த் திருவுறையா டானையர னேபோற்றி. (கஎ)

சேயைவதைத் தவன்றனக்குச் சேவடிதந் தாய்போற்றி
தூயமகம் புரிந்ததக்கன் சுடர்முடிகொய் தாய்போற்றி
நேயமுறு முப்புரத்தோர் நீறெழச்செய் தாய்போற்றி
ஆயுமறை வளர்திருவா டானையர னேபோற்றி. (கஅ)

வேறு.

அந்த முற்றவ ரத்திகொ ளத்தனே
யந்த முற்றவ ரத்திகொ ளத்தனே
வந்த வந்த வருக்கு மறவனே
வந்த வந்த வருக்கு மறவனே. (ககூ)

மாவ னத்திசை மானங்கை நம்பனே
மாவ னத்திசை மானங்கை நம்பனே
யேவ னத்திக ழுங்கண்ணி பாகனே
யேவனத்திக ழுங்கண்ணி பாகனே. (உ0)

என்ன வேத்தி யிணையடி மேற்பணிந்
துன்னு நாகமு யர்த்தவ னேமுதன்
மன்னு கின்ற மருவலர் மாறுட
லின்ன தீர்படை நல்குதி யென்றனன். (உக)



வேறு

சாலமன முருகியிவை தான்வேண்டச் சசிவேணி
யேனுமுதற் படையாகி பெண்ணுரைத் துகளாக்குஞ்
சீலமுறு பாசுபதாத் திரமநுவின் வடிவாகி
ஞாலமகிழ் பாசுபதாத் திரமதனை நல்கினான். (உஉ)

பணியாரைச் சயம்புரியும் பாசுபதாத் திரம்பெற்ற
மணிமார்ப னன்பருக்கு வரமருளு நாயகனைக்
கணியாரு மலர்க்கொன்றைக் கண்ணிபுனை [illegible]ணியனைத்
தணியாத காதலினாற் [illegible] துரைபயான். (உங)

அண்டர்பணி தற்பரனை யண்டகோ டிக்கரசே
எண்டிசையும் புகழ்[illegible] மித்தலந்திவ் வியமேன்மை
கொண்டிபா தகமக[illegible] கோதறுமென் பெய[illegible]
மண்டலமெ லாம்வண[illegible]கமலமா முனிவர்[illegible] (உச)

கும்பமதிக் கொடுநகத்[illegible] [illegible]
லும்பர்தொழப் பற்குனன்[illegible] [illegible]வெனவே
நம்புமறை யோர்மகுடா கமப்படியே நடப்பிக்க
விம்பரினு திரையாயி லியம்விழவி லேதொழுவோர். (உரு)

போகமளப் பிலவருந்திப் புவிபுரந்து கதிபெறவே
சோகமிலிவ் வகைவேண்டுந் தொடரேன மறியாநின்
கோகனகத் துணையடியிற் குறையாத பத்தியெனக்
காகவருள் வாயென்ன வவ்வரமெ லாமளித்தான். (உசு)

அருள்புரிந்தற் புதனிலிங்கத் தமரவருச் சுனன்காண்வாழ்
தருமன்முத லோரான சகோதரர்பாற் சென்றுய்ந்தான்
கருணைவிஜ யேசுரனைக் காதலித்தோர் வலம்வந்தோர்
திருவளர்பூப் பிரதக்க ணஞ்செய்த பலனடைந்தே. (உஎ)

Q23: 77091

சிவலோகத் திருப்பார்கள் சிறந்திரண்டு மூன்றுதரம்
நவமாக வலம்வந்தோர் நாடியமுத் தியையடைவார்
தவமாமிப் புராணம்வே தாந்தசித்தாந் தத்தெளிவாம்
பவநீக்கு மீங்கிதனை படிப்பவர்கேட் பவர்க்கெல்லாம். (உஅ)

பாவமில்லை பவமில்லை பழங்கணில்லை பரிவில்லை
யாவலில்லை மலமாயை யருங்கன்மத் தொடர்பில்லை
மேவியசித் திகளுண்டு மெய்ஞ்ஞான முண்டெமையாள்
தேவனரு ளுண்டழியாச் செல்வமுத்தி யுண்டாமால். (உகூ)

வேறு

செவியினுக் கமுத மாகச் சிறந்தவிப் புராணந் தன்னை
நவிமழுப் பிநாக மேந்து நாயகன் றிருமுன் மேலாம்
புவிபுகழ் பெரியோர் முன்னும் பூசனை முறையிற் செய்தே
யவியமில் மனத்த ராகி யன்பொடு விரத மாக. (௩0)

படிப்பவர் கேட்போ ரர்த்தம் பகர்ந்துளோ ரெழுதி வைப்போர்
கடிப்புது மலர்க டூவிக் கைகுவிப் போர்க ளின்னோர்
மிடித்துய ரகல வேண்டும் வெறுக்கைவெண் டுகில்க ணல்கி
யடித்துணை பணிவோ ரெல்லா மளகேச னென்ன வாழ்வார். ()

சந்ததி பெறுவார் செய்ய தாமரைத் திருவைச் சேர்வார்
சுந்தர வுலக மெல்லாம் துலங்குவெண் குடைநீ ழற்கீ
ழிந்திர திருவி னோங்கி யிருந்தர சியற்று வார்கள்
வந்திடும் வாணு ளீடி மாரவேள் வனப்புச் சேர்வார். (௩உ)

பரிமேத மிராச சூயம் பவுண்டரீ கம்வி சேட
மரியவாஞ் சோதிட் டோம மக்கினி யோம மேன்மை
தெரிவரு வாச பேயஞ் சீர்தரு மகங்க ளெல்லாம்
பெரியவா தரவாற் செய்த பயனெலாம் பெற்று வாழ்வார். ()



பஞ்சகி ரிச்சி ரங்கள் பலஞ்செயும் பலத்தைச் சேர்வார்
பஞ்சமா மதிபா வங்கள் மாபாத கங்க ளாதி
யஞ்சிடு முப்பா வங்க ளகற்றுவா ரல்லல் செய்தே
யெஞ்சிய நோயும் பேயு மேகவின் புறுவ ரன்றே. (௩ச)

நறவுகொப் புளிக்குஞ் செய்ய நாண்மலர்க் குரவ ணுகி
யறனுறு மைந்தொ ழிற்கு மாதியாந் தொழின டாத்தித்
திறனுறு மும்ம லங்க டேய்ந்துபூ ரணமெய்ஞ் ஞான
மிறைவன தடியில் வாழு மீறிலா முத்தி சேர்வார். (௩ரு)

ஐந்தழ லுப்ப ணின்றே யளப்பரு தவஞ்செய் தோர்க்கும்
எந்தையா டானை மேன்மை யிருசெவி மடுத்தற் கெய்தா
துந்தமா தவமென் சொல்கே னுள்ளவா றுணர்ந்தீ ரென்று
சுந்தர சவுந கற்குச் சூதமா முநிவன் சொன்னன். (௩சா)

வாழ்த்து.

வேத நீதி விளங்குக மேதினி
மாத மும்மழை பெய்து வளம்பெற
நாதன் மெய்யடி யார்க ணலம்பெறத்
தீதில் வேந்தன்செங் கோன்மைசி றக்கவே. (௩எ)

வாழ்க வானினம் வானவ ரந்தணர்
வாழ்க சைவம் வளர்ந்த சிவாகமம்
வாழ்க மாதவர் மாமுநி வோரெலாம்
வாழ்க வில்வ வனத்துறை வார்களே. (௩அ)

தநஞ்சயன் பூசைச் சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம்—ருருஎ.

## திருவாடானைப்புராணம் முற்றிற்று.

திருவாடானை நாதர் திருவடி துணை.

உ

சிவமயம்

# திரு ஆடானைத் தலபுராணம்

பிரமகைவர்த்த மகாபுராணத்தின் உத்தரபாகம்
க்ஷேத்திரகாண்டத்தில் ஸ்ரீபாரிஜாதவன
கஜேஸ்வர மாகாத்மியம்.

## 50-ஆவது அத்தியாயம் முதல்.

*பனைக்கர மிலட்டுக மணைத்தபடி பார*
*முனைத்தட மருப்பொருகை முன்றிகழ நின்றே*
*தனைப்பணி யறத்தினர் தமக்குள விருப்பி*
*னினைத்தது முடித்தவன் மலர்ப்பத நினைப்பாம்.*

திருச்சிற்றம்பலம்

*பிரமன் முதலிய தேவர்கள் எந்த யானைமுகக் கடவுளை எந்தக் காரியத்தின் ஆரம்பத்திலும் நமஸ்கரித்துக் கொண்டு செய்யவேண்டியவைகளைச் செய்து முடித்தவர்க ளானார்களோ அந்த யானைமுகக் கடவுளை யானும் நமஸ்கரிக்கின்றேன்.*

சௌநகர் சூதமகாமுனிவரை நோக்கி, "வியாச சீடரும் மகா பாக்கியவானும் எல்லாம் அறிந்தவரும் கருணாநிதியு மான சூதமகாமுனிவரே! சர்வ பாவங்களையும் நாசம் செய்கிற

வைகளாயும் இதிஹாசத்தோடு கூடியவைகளாயும் தங்களாலே சொல்லப்பட்டனவுமான புராணங்கள் முற்றிலும் கேட்கப்பட்டன. கேட்பதினாலேயே பாபங்களை நாசஞ்செய்யக்கூடியதான சூரியபகவானாற் பூஜிக்கப்பட்ட ஆதிரத்நேஸ்வரரது மாகாத்மியம் முன் எங்களுக்குச் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. அதுவன்றியும் திருவாடானை க்ஷேத்திரத்தில் வில்வபத்திரார்ச்சனையின் விசேஷம் சொல்லப்பட்டது. அதை விஸ்தாரமாகக் கேட்க விருப்பமுள்ளவர்களாக விருக்கிறோம். தாங்கள் சொல்லுவனவற்றைக் கேட்பதிற் போதுமென்கிற திருப்தி உண்டாகிறதேயில்லை. ஆகையால் எல்லாம் அறிந்த தங்களை மிகவும் கேட்டுக் கொள்ளுகிறோம். பக்தர்களனைவருக்கும் ஞானத்தை அளிப்பவரும் நல்ல அநுஷ்டானமுள்ளவரும் பிரபுவுமான தாங்கள் முநிவர்களாற் சேவிக்கப்பட்ட அந்தப் பாரிஜாத வனம் எங்கிருக்கின்றதென்பதையும் அதன் பெருமைகள் எல்லாவற்றையும் விரிவாக எங்களுக்குச் சொல்லியருளல் வேண்டும்" என்று பிரார்த்திக்கச் சூதமுநிவர் சொல்லத் தொடங்கினார் :

## 50. சூரியன் பூஜித்தது.

"புண்ணியவானாகவும், எல்லாம் அறிந்தவராகவும், மகாத்மாவாகவும், உலக க்ஷேமத்தின் பொருட்டுச் சரீரமெடுத்தவராகவுமுள்ள சௌநகரே! உம்முடைய கேள்வியானது எல்லா உலகங்களையும் பரிசுத்தம் செய்வதாயிருக்கிறது. இப்பொழுது அந்த மங்களகரமான பாரிஜாதவனத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். மிகவும் பெரிதாகிய இந்த ஜம்புத் தீபத்தில் ஏராளமான பாரிஜாதவனங்களும் ஸ்வயம்பு லிங்கங்களும் இருக்கின்றன. அவற்றுள்ளும், காவேரி,



வைகை, தாம்பிரவருணி, பாலாறு, ஸ்கந்தநதி, கௌதமி, கங்கை, நருமதையாகிய நதிகளின் கரைகளில் ஏராளமான பாரிஜாதவனங்களிருக்கின்றன. நீர் வினவிய இடமானது புண்ணியத்தைத் தருவதாயுள்ள பாண்டிய தேசத்திற் காளீஸ்வரர் சந்நிதிக்குத் தென்கிழக்கில், இரண்டு யோசனை தூரத்திற் பரிசுத்தமான தீர்த்தத்தையுடைய மணிமுத்த நதிக் கரையில் இருக்கின்றது. அந்நதியின் வடகரையில், தரிசனத்தினாலேயே எல்லாப் பிராணிகளுக்கும் இம்மை மறுமைப் பயன்களை அளிப்பதாயும், மங்களகரமாயும் சூரியனாற் பூஜிக்கப்பட்டதாயும், இந்திர நீலமயமாக விளங்குகிறதாயும், ஆதிரத்நேஸ்வரரென்று மூவுலகத்திலும் பிரசித்தமானதாயுமுள்ள, லிங்கமானது இருக்கின்றது. அந்தப் பாரிஜாதவனமானது அமிருதத் துளியிலிருந் துண்டாயது. அங்கு வசிக்கும் பிராணிகள் ஒன்றுக் கொன்று விரோதமின்றி வாழ்கின்றன. எலி, பூனை, நாகம் இவைகளும், பசுவும், புலியும், மனிதரும், இவை போன்ற மற்றுமுள்ள பிராணிகள் பலவும், ஒன்றுக்கொன்று மிகவும் அன்புள்ளவைகளாகவே இருக்கின்றன. அந்தப் பாரிஜாதவனமானது கிருதயுகத்தில் மிகப் பெரியதாகவும் பெரியோர்கள் நிறையப் பெற்றும் மிருகங்களும் பறவைகளும் நிறைந்ததாகவும் தினந்தோறும் முநிவர்களாலே பூஜிக்கப்பட்டதாயுமிருந்தது; அது திரேதயுகத்தில் வன்னிவனமாகவும், துவாபரயுகத்திற் குருவிந்தவனமாகவும், கலியுகத்தில் வில்வவனமாகவும் உலகத்தாராலே பூஜிக்கப்பட்டது. அந்த க்ஷேத்திர விருக்ஷ தரிசனத்தினாலேயே பிரமஹத்தி முதலிய பாபங்கள் நசிக்கின்றன.

ஆதி பிரம கற்பத்திலே பிரமதேவர் அதிதியின் புத்திரனாகிய சூரியபகவானுக்கு ஒரு சக்கிரமுள்ள ரதத்தையும் ஒரு குதிரையையுங் கொடுத்து, ஜோதி சக்கிரத்திற் சஞ்சரிக்

கும்படி ஆஞ்ஞாபித்த பிரகாரம், சூரியபகவான் குதிரையை ரதத்திற் பூட்டி, மேரு பர்வதத்தின் சிகரத்திலிருந்து செலுத்த எத்தனித்ததில், அவ்விரதம் ஒரு சிறிதும் செல்லவில்லை. அப்பொழுது புத்திமானான சூரியபகவான், மனக்கவலை அடைந்து, ரதத்தின் சமீபத்தி லிருந்துகொண்டு காரியசித்தியின் பொருட்டு, சிரேஷ்டமான மந்திரத்தினாலே பிரமதேவரைத் தியானம்செய்தார். பிரமதேவர் பிரத்தியக்ஷமாகி, "எவர்கள் பரமசிவனைப் பூஜை செய்யாமல் அறிவின்மையால் தங்கள் காரியத்தைத் தொடங்குகிறார்களோ அவர்கள் காரியசித்தி அடைகிறதில்லை. இந்த விஷயம் முதலிலேயே உமக்குச் சொல்லப்படவில்லை. உம்முடைய பிதாமூலமாகப் பஞ்சாக்ஷர மந்திரத்தை அறிந்து, பரிசுத்தமாகிய ஜம்பூத்தீபத்திற், கர்மபூமியிற் புண்ணிய நதிக்கரைகளில், உத்தமஸ்தலங்களில், நவரத்நமயமான லிங்கங்களைப் பூஜைசெய்வாயாக. இரதத்திற்குத் தடை உண்டாகாது. எதுவரை கால சக்கிரமானது சுழலுகிறதோ அதுவரை ஒரு புரவியையும் ஒரு சக்கிரத்தையுமுடைய ரதம் சஞ்சரிக்கும். நவக்கிரகங்களுக் கெல்லாம் தலைவனாகச் சஞ்சரிக்கவும் போகிறாய்; நிச்சயம்." என்று சொல்லிப் பிரமதேவர் மறைந்தார். கதிரவனும் நான்முகன் அநுக்கிரகித்தபடிப் புண்ணிய க்ஷேத்திரங்களுக்குள் மிகவும் பரிசுத்தமான பாண்டிய தேசத்திற் காளீசுரருக்குத் தென்கிழக்கில், இரண்டு யோஜனை தூரத்தில், மணிமுத்தா நதிக்கரையில் பாரிஜாத வனத்தில், உரோமசர், மார்க்கண்டேயர், முதலிய ரிஷிகளைப் பார்த்தும், பாரிஜாத விருக்ஷத்துக்குக் கீழ்பாகமாகவும், ஒரு பாணக்கிடை தூரத்தில், தனது பெயரால் முன் தீர்த்தம் உண்டு பண்ணியும், அந்தத் தீர்த்தத்துக்கு நிருதி திசையில் உள்ள மிகச்சிறந்த மணிமயமான லிங்கத்தையும், மிகக்கருணை டொருந்தினவளாயும், சர்வலக்ஷணங்களும் அமையப் பெற்ற



வளாயும், சிநேகவல்லி என்கிற பெயருள்ளவளாயுமுள்ள மகாதேவியையும் சைவாகம விதிப்பிரகாரம் தன்னுலுண்டாக்கப் பட்ட தீர்த்தத்தினால் அபிஷேகஞ் செய்து பூஜித்தும், பரமசிவனது திருவருளைப் பெற்று விக்னேசுரர் முதலானவர்களைச் சைவாகம விதிப்படி, மந்திர மறிந்தவர்களுடன் பிரதிஷ்டை செய்தும், தான் விரும்பிய வரங்களை அடைந்தான். இதனால் அந்த க்ஷேத்திரமானது ஆதி ரத்னேசுவரம் என்ற பெயரை உடையதாயிற்று. சூரிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் சோமாஸ்கந்தருடையவும் சூரியனுடையவும் அநுக்கிரகத்தினாலே சகல காரியங்களும் சித்தியாகின்றன. இந்த க்ஷேத்திரத்தின் மகிமை வேறெந்த க்ஷேத்திரத்துக்கும் கிடையாது. இந்த ஸ்தலமானது தவசிரேஷ்டர்களால் துதிக்கப் பெற்றது. இந்த ஸ்தலத்தின் பெயரை உச்சரித்தால் ஜோதிஷ்டோமயாகம் செய்த பலன் கிடைக்கின்றது. இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தவர்கள் சூரிய லோகத்தை அடைகிறார்கள். சூரியனுடைய மந்திரத்தை ஜெபித்துக் கொண்டு இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்யவேண்டும். அவ்விதம் ஸ்நானஞ் செய்பவர்களுடைய பிதுருக்களெல்லாம் அநாதியான பரம்பொருளை அடைகிறார்கள். இவ்விதமாகவே சூரிய பகவான் புண்ணிய நதிக்கரைகளிற் சிவலிங்க பூஜை செய்த மற்ற ஸ்தலங்களையுஞ் சொல்லுகிறேன்:

தாமிரவருணி நதிக்கரையில், அர்ச்சுன விருக்ஷம் அடையாளமுள்ள உத்தமமான ஒரு ஸ்தல மிருக்கின்றது. காவேரியின் வடகரையில் கோடீசுரருக்கு மேல் பாகத்தில் ஆம்பிரேசரென்று பிரசித்தி பெற்ற இலிங்கமானது இருக்கின்றது. அதன் மேற்கே ஒரு யோசனை தூரத்துக்கு மத்தியில் ஜோதீஸ்வரரென்று பெயருள்ள லிங்கமானது இருக்கின்றது. கிருதமாலா நதிக்கரையில், ஆலாசிய க்ஷேத்திரத்துக்குக் கிழக்கில், பார்வதியுடன் அந்தரங்கேசுவர

ரென்று பெயருள்ள பிரவாளலிங்கம் குளமூலத்தி லிருக்கின்றது. அந்த லிங்கத்தை உதயகாலத்தில் தரிசிப்பவன் முக்தனுகின்றான். அந்த லிங்கத்து ஈசானதிக்கு வடக்குக் கோணத்தில் புத்ரதீப விருக்ஷத்தடியில் முக்தேசுவரரென்னும் இலிங்கமூர்த்தி வீற்றிருக்கின்றார். அவரைத் தரிசித்த அளவிற் குஷ்டம் முதலிய பிணிகள் நிவர்த்தியாகும். அந்த மூர்த்திக்குத் தென்பக்கத்திற் கஜதீர்த்தமென்றொரு தீர்த்த மிருக்கின்றது, காவேரியின் மேல் கரையிற் ஸ்ரீபாண்டு ஸ்தானத்துக்கு வடக்கே இலந்தை விருக்ஷத்தடியிற் பதரீஶ்வர ரென்கிற லிங்கமிருக்கிறது. அந்த விருக்ஷ தரிசன மாத்திரத்திலேயே யோகஞான முண்டாகும். யோக ஞானத்தை விரும்புவோர் அந்த விருக்ஷத்தை அவசியம் தரிசிக்கவேண்டும். அதனால் முக்தியையும் அடையலாம். ஐயமில்லை. மிகப்புனிதமான பாலாற்றங்கரையில் சக்தீசுரருக்கு மேற்கில் வன்னி விருக்ஷத்தடியில் வைடூரிய மயமான லிங்கமிருக்கிறது. அதைத் தரிசித்த மாத்திரத்தில் பிரமஹத்தி முதலான பாவங்கள் விலகுகின்றன. இவ் விலிங்கத்துக்கு மேற்கில் குருவிந்த விருக்ஷத்தி னடியில் கோமேதலிங்கம் இருக்கின்றது. அதைத் தரிசிப்பவர்களின் பிதுருக்கள் சுவர்க்கத்தை அடைவார்கள். ஸ்கந்த நதிக்கரையில் கரண்டேசுரருக்கு மேற்கில் வில்வமரத்தடியிற் கபத்தீசுர ரென்கிற லிங்க மிருக்கின்றது. இந்த லிங்கத்தைப் பூஜித்தாற் சர்வ ஐசுவரியங்களும் உண்டாகும். துங்கபத்திர நதிக்கரை யில் விருபாக்ஷருக்கு மேற்கில் நாவல் விருக்ஷத்தடியில் கிரணேசுரர் வீற்றிருக்கின்றார். அவரைத் தரிசித்தாற் புத்திர னில்லாதவர்கள் புத்திரனை அடைவார்கள். இவ்விதம் புண்ணிய நதிக்கரைகளிற் சூரிய பகவானவர் சிவலிங்கங் களைப் பூஜை செய்து, பரமசிவனது திருவருளைப் பெற்று, ஜோதி சக்கிரத்தில் இரதத்தைச் செலுத்திச் சஞ்சரிக்கலானார்.



சந்திரன் முதலான எல்லாக் கிரகங்களும் நக்ஷத்திரங்களும் மேடமுதலான ராசிகளும் சூரியனுக்குட்பட்டே சஞ்சரிக் கின்றன.

---

## 51. வாருணி சாபமடைந்தது.

(வருண புதல்வன் வாருணி)

சூத முனிவர் சொல்லுகிறார். சௌனகரே! கேளும். சர்வ பாவங்களையும் போக்கக் கூடியதாயும் க்ஷேத்திரங்களுள் மேலானதாயு முள்ள ஸ்தானத்திற் சூரியனாலே பூஜிக்கப்பட்ட ஆதி ரத்நேசுரருக்கு ஈசான திக்கில் சூரியன் உண்டாக்கிய தீர்த்தமொன் றிருக்கிறது. அதில் ஸ்நானஞ் செய்தால் சர்வ சித்திகளு முண்டாகும். மூல மூர்த்திக்குத் தெற்கில் ஐம்பது பாணக்கிடை தூரத்தில் மார்க்கண்டேயரால் உண்டுபண்ணப் பட்ட வட்டமானதொரு தீர்த்த மிருக்கின்றது. இதனைப் பிரமவாதிகளான முனிவர்கள், சர்வ ரோகங்களையும் போக் கடிப்பதும் சிவப்ரீதிகரமா யுள்ளதும் மங்களகர முள்ளதுமான மார்க்கண்டேய தீர்த்தமென்று சொல்லுகிறார்கள். மூலவ ருக்கு வடக்குத் திக்கில் ஒரு குரோச தூரத்தில் துருவாசரது சாபத்தை அடைந்த வருணபுத்திரனின் சாப நிவிருத்திக் காக வருணனால் உண்டுபண்ணப்பட்ட தீர்த்தமிருக்கின்றது. மூலஸ்தானத்துக்குத் தென்கிழக்கில், இரண்டு பாணக்கிடை தூரத்தில், மஹா பாதகங்களையும் நிவர்த்திக்கக் கூடிய அகஸ்திய தீர்த்த மிருக்கின்றது.

இவ்வாறு சொல்லக் கேட்ட சௌனகர், "வருண புத்திரனை யார் சபித்தார்கள்? சாபம் பெறும்படியான கோபம் வரும்படி அவன் செய்த பிழை யாது? எவ்விதம் இத்தலத்திற் சாபவிமோசனம் ஆயிற்று? எல்லாவற்றையும் சொல்லியருளல் வேண்டும்" என்று சூத முனிவரைப்

பிரார்த்திக்கச் சூத முனிவர் சொல்கிறார்: சௌநகரே! கேளீர்: முன்னாளில் ரதந்தர கற்பம் நடக்குங்கால், கிருத யுகத்திற் புஷ்பபத்திரை என்ற நதிக்கரையில் தபசுக்கு இருப்பிடனாகிய துருவாசர் என்ற முனிவர் பரம்பொருளிடத்திற் செலுத்தப்பட்ட மனதுடையவராய் மிகவுங் கடூரமான தபசைச் செய்துகொண் டிருந்தார். அச்சமயம் வருணனது புதல்வன் தனது தூதர்களோடு கூட இரதத்தில் ஏறிக் கைலாச பருவதத்தை யடைந்து, சிவபிரானை வணங்கி, தனது உலகத்துக்குத் திரும்பிப் போகும்பொழுது, துருவாச முனிவரது ஆசிரமத்தை அடைந்து, மதத்துடன் கூடினவனாய், முனிவரை லக்ஷியம் செய்யாது போனான். அவனுடைய மதத்தை அறிந்து, முனிவர் அதை நிவர்த்திக்கும்பொருட்டுக் கடுஞ்சினங்கொண்டு, அவனுடையமுகம் ஆட்டின் முகமாகவும் மற்ற சரீரம் யானையின் உறுப்புப்போலாகவுஞ் சபித்தார். அம் முனிவரின் சாபத்துக்குப் பயந்தவனாய், வருண புத்திரன் முனிவரை யடைந்து, அவரது பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து, அவரைத் திருப்தியுறச் செய்து, பிறகு அவர் சந்தோஷமுள்ளவரானதை யறிந்து சாப நிவிருத்தியைப் பிரார்த்தித்தான். உருக்கின பொன்னுக்குச் சமானராயும், பிராமணராயும், உலகத்தினாலே பூஜிக்கப்பட்டவராயு மிருக்கிற துருவாச முனிவரும் கோபம் நீங்கினவராய்ப் பின் வருமாறு சாப நிவர்த்தியை யருளினார்: "வருண புதல்வனே! நீ பிராமணனை அவமதித்தபடியாற் சபிக்கப்பட்டாய், சாபத்தை அநுபவித்தே தீரவேண்டும். எனது வார்த்தை உண்மையற்றதாய் இராது. பன்னிரண்டு வருஷகாலம் என்னாற் கொடுக்கப்பட்ட சாபத்தின் பலனை அநுபவித்துப் பிறகு, அகஸ்தியருடைய மொழியினால் உனது பிதாவாகிய வருணனுடன், நீ பாரிஜாதவன மத்தியி லிருக்கிற ஆதிரத்நேச்வர ஸ்தலத்தையடைந்து, அவ்விடத்தில் மார்க்கண்டேய தப



சிரேஷ்டரிடமிருந்து பஞ்சாக்ஷர மந்திரோபதேசம் பெற்றுப் பிறகு சூரிய தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்தவுடன், யானை வடிவினின்று நிவர்த்தியடைவாய். அந்த க்ஷேத்திரத்துக்குச் சமானமும், அந்தத் தீர்த்தத்துக்குச் சமானமும் உலகில் வேறொன்று மில்லை; இருக்கப் போகிறது மில்லை; வருண புதல்வனே! ஒரு பொழுதும் பிராமணர்களை அவமதித்தலாகாது. பிராமணர்களை அவமதித்தால் மிகப் பாவம் உண்டாகும். செம்பு முதலான லோகங்களிற் சுவர்ணமும், நாற்கால் பிராணிகளிற் பசுவும், நதிகளிற் கங்கையும், தேவர்களில் மஹா விஷ்ணுவும், பிரகாசம் பொருந்திய வஸ்துக்களிற் சூரியனும், பக்ஷிகளிற் கருடனும், ரஸங்களில் அமிர்தமும், தகிக்கிற பதார்த்தங்களில் அக்கினியும், மந்திரங்களிற் பிரணவமும், ஜபங்களிற் பஞ்சாக்ஷர ஜபமும் போல, மனிதர்களிற் பிராமணர்கள் சிரேஷ்டர்கள். பிராமணர்களினும் ஞானிகள் பெரியவர்கள். ஞானிகளைக்காட்டினும் பிரம நிஷ்டர்கள் பெரியவர்கள். இவர்களைக்காட்டினும் மோக்ஷத்தை விரும்புகிறவர்கள் பெரியவர்கள். இவர்களினும் யோகத்திலிருப்பவர்கள் பெரியோர்கள். இவ்விதமே மேன்மேலும் அறிந்துகொள்வாயாக. இத்தகைய அறிவுள்ளவன் பிராமணர்களை அவமதிக்க மாட்டான். பிராமணனை அவமதித்ததினாலுண்டான பாவமானது யாண்டுந் தடைப்படுகிறதில்லை. அநேகவிதமான பிராயச்சித்தங்களாலும் ஒருபொழுதும் நிவர்த்தி அடைவது மில்லை. உலகத்தில் எல்லாச் சிவக்ஷேத்திரமும் சிவதீர்த்தமும் மேலானவைகளே. சிவதீர்த்தங்களிற் பிராமணர்களின் அநுமதிபெற்று ஸ்நானம் செய்து, சக்திக்கியன்றவாறு தானங்களைச் செய்து, பக்தியுடன் சிவபிரானை அர்ச்சித்துச் சாபத்தினின்றும் நிவர்த்தியடையப் போகின்றாய்" இவ்விதம் துருவாசமஹரிஷி சொல்லக் கேட்ட வருணனின் புதல்வன் அந்த க்ஷணத்திலேயே ஆட்டின்தலையையும் யானை

யின் உருவத்தையு மடைந்தான். அந்த வடிவத்துடனேயே உலகத்திற் சஞ்சரித்தான். வருணன் எல்லா விருத்தாந்தத்தையும் தூதர்கள் மூலமாகக் கேள்வியுற்று, மிக வருத்தமடைந்தவனாய்த் தனது புதல்வனின் சாபநிவர்த்தியைப் பற்றி நினைத்துக் கொண்டே, தன துலகத் திருந்தான். சில காலஞ் சென்றதும் நற்காலத்தின் பயனினாலும், வருணனுடைய புண்ணியவசத்தாலும் அகஸ்திய மகா முநிவர் வருணனுடைய லோகத்தை யடைந்தார். லோகபாலனாகிய வருணனும் முநிசிரேஷ்டராகிய அகஸ்திய முநிவரைப் பார்த்த அளவில், எழுந்து எதிர் கொண்டழைத்தும், அதிதி பூஜையை ஆறுவிதமான அமுதுகளினாலே செய்வித்தும், பிறகு அவரை உயர்ந்த ஆசனத்தி லமர்ந்திருக்கச் செய்து, அம்முநிவரை யடைந்து, தன் புதல்வன் யானைவடிவா யிருத்தலையும் அதன் காரணமான துருவாச முநிவரின் சாபம் முதலியவற்றையும் தெரிவித்துக்கொண்டான். அகஸ்திய முநிவரும் வருணன்சொன்ன விருத்தாந்தத்தைக் கேட்டு, “வருணனே! பயப்படவேண்டாம்” என்று சொல்லிவிட்டுப் பிறகும் ஆலோசித்தார். உலகங்களிலுள்ள புண்ணியதீர்த்தங்களையும், புண்ணிய க்ஷேத்திரங்களையும், புண்ணிய நதிகளையும், புண்ணிய ஆசிரமங்களையும் எண்ணினார். அவ்விதமே முநிவரது கூட்டங்களினாற் சேவிக்கப்பட்டதாயும் பரிசுத்தமானதாயுமிருக்கிற வேகவதி நதியையும் வகுளம் என்ற பெயருள்ள இடத்தையும் யோகமகிமையினால் நினைத்தார். அப்பால் உத்தம ஸ்தலமானது நினைவுக்கு வந்ததைப் பற்றிச் சந்தோஷமடைந்தார்.

## 52. வாருணி சாபநீங்கினது.

சூத முநிவர் சொல்கிறார்: மிகவும் புத்திசாலியான சௌநகரே! பாபங்களை நாசஞ் செய்கிறதான ஸ்தானம் அகஸ்தியராலே வருணனுக்குச் சொல்லப்பட்டதை விரித்துரைக்கின்றேன். கவனமாய்க் கேட்பீராக. அகஸ்தியர் சொன்னதாவது: லோகபாலனாகிய வருணனே! உனதுபுத்திரனுக்குத் துருவாச மஹரிஷியினாலேற்பட்ட சாபத்துக்கு நிவர்த்தியைச் சுலபமாகச் சொல்லுகிறேன். காவேரிநதிக் கரையின் தென்பக்கத்திற் பாண்டியராஜனது வேகவதி நதியினுடைய வடக்குக்கரையில் ஸ்ரீ காளீசுரருக்குத் தென்கிழக்கில், இரண்டு யோஜனை தூரத்தில், உத்தமமாயும், மிகப் பெரியதாயும் ஆதிரத்நேஸ்வரம் என்ற பெயரை உடையதாயும் உள்ள ஆதிரத்நேச ஸ்தானமும் வகுளாரண்ணியமும் இருக்கின்றன. ஆதிரத்நேஸ்வரமென்ற இந்த ஸ்தலமானது பரிசுத்தமானவைகளுக்குப் பரிசுத்தமானதாயும் எல்லாப் பிராணிகளுக்கும் முக்தியளிப்பதாயு மிருக்கின்றது. இதன் மகிமையையும் பரிசுத்தத்தையும் அடிக்கடி கேட்டும் தெவிட்டுவதில்லை. நீ இத் தலத்துக்கு யானைவடிவான உனது புத்திரனுடன் சீக்கிரமாகப் போய்ச் சகல பாபங்களையும் போக்குவதாயும் மங்களகரமாயு மிருக்கிற சூரியதீர்த்தத்தில், அவனை நீராடச் செய்து கரையை அடைந்தவுடன், அவன் யானையுருவம் நீங்கி, முன் போலத் தனதுருவத்தை அடைவான். இது நிச்சயம். அதுமுதல் இந்த க்ஷேத்திரத்துக்குக் குஞ்சரபுரமென்ற பெயரும் சிவலிங்கப் பெருமானுக்குக் கஜேசர் என்ற பெயரும் ஏற்படும். வருணனே! இச்சமயத்தில் மிருகண்டுவின் புத்திரனாகிய மார்க்கண்டேய முநிவரை யடுத்துப் பக்தியுடன் வணங்கி, அவரால் உனது புத்திரனுக்கு உபதேசம் செய்வித்துத், தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் நியமத்துட

னிருந்து, ஆறுலக்ஷந்தரம் பஞ்சாக்ஷர மந்திரத்தைச் செபிக்கச் செய்வையே யாகில் சாபநிவர்த்தி உண்டாகும். பரமசிவனும் பிரசந்நராய் உனது புத்திரனுக்கு வரத்தைக் கொடுப்பார். அதன் பிறகு சிவபிரானது உத்திரவைப் பெற்று, இந்த ஸ்தலத்திற் புண்ணியதீர்த்தத்தை யுண்டு பண்ணுவாயாக. இந்த ஸ்தலம் யோகமகிமையினாலே உனக்குச் சொல்லப்பட்டது. நான் சொன்னவை முற்றிலும் உண்மையே? சந்தேகிக்க வேண்டாம். சூதமுனிவர் பின்னுஞ் சொல்லுகிறார்: இவ்விதமாக அகஸ்திய முனிவரிடம் கேட்ட வருணன் தன் புத்திரனுடன் பாரிஜாதவனத்தை அடைந்து அகஸ்திய முனிவர் கூறியவாறே எல்லாவற்றையும் செய்தான். அந்த ஸ்தலத்தில் வருணனின் புதல்வனாகிய பிருகுவும் சாபத்தினின்றும் நீங்கிப் பழைய சரீரத்தைப் பெற்று மார்க்கண்டேய முனிவரிடம் சிறந்த பஞ்சாக்ஷர மந்திரத்தையும் மற்றுஞ் சிவபிரானுக்குத் திருப்தி உண்டுபண்ணுகிற பலவற்றையுந் தெரிந்து, அம்முனிவருத்திரவின்படி தக்ஷிணாமூர்த்தி சந்நிதியிற் பஞ்சாக்ஷரத்தை ஆறுலக்ஷந்தரம் ஜபித்தார். பிறகு சிவபிரான் பிருகுவின் முன் தோன்றினார். சந்திரனைச் சிரசிலுடையவராயும், முக்கண்ணராயும், பார்வதியுடன் கூடியவராயும், சம்சாரத்திலிருந்து விடுவிக்கிறவராயும் இருக்கிற சிவபெருமான் பிருகுவை நோக்கிப் பரம சந்தோஷத்துடன் சாபத்தினின்றும் விடுபட்டவனாகிறாய் என்று உரைத்தார். அமிர்தம்போன்ற அம்மொழியைக் கேட்டுப் பிருகு முனிவர் மிகவும் சந்தோஷமுள்ளவராய், வேத வாக்கியங்களாலும், புராண மத்தியிலுள்ள வாக்கியங்களாலும், சக்திக் கியன்றவாறு ஸ்தோத்திரம் செய்து, சிவபிரானது திருவடிகளில் விழுந்தார். பரமசிவனும் முனிவரை ஆலிங்கனஞ் செய்து வேண்டிய வரங்களை அளித்தார். முனிவர் சந்தோஷத்துடன் தமது பிதாவாகிய வருணனோடு கூடப் பரமசிவனுக்கு வட



திசையிற் பிராமண சாபத்தை நீக்குவதாயும், மிகப் பரிசுத்தமாயும், வாருணமென்ற பெயருள்ளதாயும், இருக்கிற மிகச் சிறந்த சக்கிர தீர்த்தத்தையும், அதற்கு மேல் திசையில் தமது பெயருள்ள லிங்கத்தையும், சைவாகம விதிப்படி பிரதிஷ்டை செய்து, சாப விமோசனம் அடைந்தவராகி, மகா பாக்கியவந்தராய்த் தமது தூதர்களோடு, மூன்று மாதகாலம் அவ்விடத்திலேயே சந்தோஷமாக வசித்துவந்தார். அது முதல் அத்தீர்த்தம் சாபத்தைப் போக்கக்கூடிய தாயிற்று. யாவராயினும் இந்தத் தீர்த்தத்தில் நீராடினமாத்திரத்திலே வருண புத்திரனைப்போல் சாபத்தினின்றும் விமோசனம் அடைவார்கள். இந்த க்ஷேத்திரத்தின் மகிமையை அதில் வசிக்கும் வருணபுத்திரன், மார்க்கண்டேயர் மூலமாகச் செவியுற்று, அவ்விடத்திற் சிவபிரானுக்கு வில்வ தளத்தினாலே அர்ச்சனை செய்தான். அந்த ஸ்தலத்தில் ஒரு வில்வ இதழினாற் சிவபிரானை யர்ச்சிப்பவன் தனது கோடி குலத்துடன் சிவலோகத்திற் பூஜிக்கப்படுகிறான். வில்வ விருக்ஷத்தை வலம் வந்து பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபஞ் செய்து வில்வ விதழ், வில்வ புஷ்பம் இவைகளைக்கொண்டு பரமசிவனை யர்ச்சிப்பவன் மன சுத்தியை யடைகிறான். சோமவாரங்களிலும் சூரிய வாரங்களிலும் செய்யும் பூஜையின் பலன் எண்ணத்தக்கதில்லை. ஆகையால் தினந்தோறும் வில்வ இதழினாற் பூஜை செய்தல் வேண்டும். பௌர்ணமையிலும், அமாவாசையிலும், சூரிய சந்திரர்களுடைய கிரஹண காலங்களிலும், வியதிபாத புண்ணிய காலத்திலும், சங்கராந்தி புண்ணியதினத்திலும், ஜன்மநக்ஷத்திரத்திலும், வில்வத்தினாற்செய்யும் அர்ச்சனை சிவஞானத்தை யளிக்கும். இன்னுமுள்ள புண்ணிய காலங்களிலும், தாய்தந்தையர்கள் இறந்த தினத்திலும், வில்வ இதழினாற் சிவபெருமானை அர்ச்சித்தால் அவ்வப் பிதிருக்கள் அந்த க்ஷணத்திலேயே நரகத்தினின்று விடுபடு

வார்கள். அர்ச்சித்தவனும் தன் வம்சத்தவர்களோடு அழிவற்ற பதத்தை யடைகிறான். இந்த வில்வ விருக்ஷத்தி னடியிற் பிதிருக்களுக்குப் பிண்டம் அளித்தாற், பிண்டவடிவான அன்னம் எவ்வளவு எண்ணிக்கை யுடையதோ, அவ்வளவு வருஷகாலம் பிதிருக்கள் சிவலோகத்தில் வசிப்பார்கள். இந்த ஸ்தலத்தில் வில்வ இதழினாற் செய்யும் அர்ச்சனை மிகவும் விசேஷம். உலகத்திலுள்ள ஸ்தலங்களிற் சிவபிரானை வில்வ இதழினால் அர்ச்சித்தல் மிகச் சிறந்தது. அவற்றுள்ளும் இந்த ஆதிரத்நேஸ்வரம் என்ற ஸ்தலத்திற் செய்யும் பூஜையானது அளவில்லாப் பயனை அளிக்கின்றது. உலகத்திலுள்ள க்ஷேத்திரங்க ளெல்லாவற்றுள்ளும் இந்தக் கஜபுரமென்கிற க்ஷேத்திரம் மிகச்சிறந்தது. இவ்விதமாக மார்க்கண்டேய முனிவரிடங் கேட்ட வருணனின் புதல்வன் அம்முறைப்படியே அந்த ஸ்தலத்திலேயே வில்வமரத்தை வணங்கிச் சிவபூஜையையும் செய்து, கதிரவனது காந்தியைக் காட்டிலும் ஒளிமிகுந்து கோடி சூரியருக்குச் சமானமாய் மிகப்பிரகாசம் பொருந்திய இரத்தினங்களைத் தீபத்துக்காகச் சந்நிதியிற் சமர்ப்பித்துச் சிவனடிகளிலும் சாத்தினான். அதன் பிறகு வருணனும் ஆதிரத்நேஸ்வரது சந்நிதியிற் புண்ணிய தீர்த்தத்தை உண்டாக்கிக் கங்கை முதலான நதிகளை அதில் ஆவாஹனம்செய்து நீராடினான். அப்புண்ணிய தீர்த்தத்தில் மூழ்கினவர்கள் மிகச்சிறப்புற்ற சிவலோகத்தை யடைகிறார்கள். ஆகையால் மகா ரவியில் இப்புண்ணிய தீர்த்தத்தில் எவ்விதத்திலாவது ஸ்நாநஞ் செய்யவேண்டும். வருணனின் புதல்வனும் தனது தந்தையுடன் தனதுலகத்தை அடைந்தான். பாவத்தை அகற்றுகிறதாயும், மிகச்சிறந்ததாயுமிருக்கிற, இந்த விருத்தாந்தத்தை அன்புடன் படிப்பவரும், எழுதுகிறவரும், காலையில் அன்புடன் கேட்பவரும், ஆதிரத்நேஸ்வரது முன்னிலையில் நித்திய முக்தராவார்கள். சிவ



லோகத்தை அடைந்து நித்திய முக்தராய்ச் சிவகணங்களாற் சூழப்பெற்று மிருப்பார்கள்.

## 53. மார்க்கண்டேயர் பூஜித்தது

சௌநகர் பின்னும் சூதமுனிவரை நோக்கி, வியாச மஹரிஷியின் சீடரே, புத்தியிற் சிறந்தவரே! சொற்சுவையுள்ளவர்களிற் சிறந்தவரே! மகாத்மாவாகவும் பக்திமானாகவு மிருக்கிற மார்க்கண்டேய முனிவரது சரித்திரத்தையும் இன்னும் ஸ்தலத்தின் மகிமையையும் திருவாய்மலர்ந்தருளல் வேண்டுமென்று பிரார்த்திக்கச் சூதமுனிவர் சொல்லுகிறார்: சௌநகரே! கேட்பவர்களின் பாவங்களை விலக்குவதும் ஆயுள் விருத்தியைச் செய்கிறதும் சிவபிரானுக் குகந்ததும் பரிசுத்தமானதும் மோக்ஷபலனை யளிக்கிறதுமான மார்க்கண்டேய முனிவரது சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேளும் என்று சொல்லுகிறார்:

சிவபக்தராயும், பிராமணோத்தமராயும், தலசிரேஷ்டராயு மிருக்கிற மார்க்கண்டேய ரென்பவர் திருக்கடவூரிற் பரமசிவனது திருச் சாந்நித்தியத்தினால், யமதர்மராஜனிடமிருந்து விடுதலை யடைந்து, அழிவற்ற தன்மை யடைந்தவுடன் பஞ்சாக்ஷர ஜபம் செய்யும் பொருட்டு, எல்லா முனிவர்களுடன், உத்தம புண்ணிய ஸ்தலங்களிற் சஞ்சரித்து வந்தார். சிவபிரானுக் குகந்ததாயும், உத்தமமாயு மிருக்கிற ஆதிரத்நேஸ்வர மென்கிற இப்புண்ணிய ஸ்தலத்தை முதலில் அடைந்து, கௌதமர் முதலான தபசிகளுடன், சந்தோஷமாக வசித்துவந்தார். கஜேசருக்குத் தென் பாகத்தில், ஓர் அழகான புண்ணிய தீர்த்தத்தை உண்டுபண்ணித் தமது பெயரினாலே விளங்கச் செய்தார். அந்தத் தீர்த்தத்துக்கு மேற்றிசையில் மார்க்கண்டேயம்

என்ற இலிங்கத்தை பிரதிஷ்டை செய்து, தன்னாலே சிருஷ்டிக்கப்பட்ட தீர்த்தத்திற் பஞ்சாக்ஷர மந்திரத்தினாலும், ருத்ரமந்திரத்தினாலும், கங்கை முதலிய நதிகளை ஆவாஹனம் செய்தார். இவ்விதம் மார்க்கண்டேயர் தீர்த்தக் கரையில் இலிங்கத்தை ஸ்தாபித்து, அவ்விடத்திலேயே பர்ண சாலை அமைத்துத் தினந்தோறும் குடும்பத்துடன் அக்கினிஹோத்திரம் செய்துகொண்டு, வில்வ இதழ்களாலும், சிவபிரானுக் குகந்த பற்பல சுகந்த மலர்களாலும், பக்தியுடன் சிவனை அர்ச்சித்தும், பதினாறுவிதமான உபசாரங்களுடன், சாலி அன்னத்தை நிவேதனஞ் செய்தும், சிறிது காலம் அத்தலத்திலேயே வசித்து வந்தார். இவ்வித மிருக்குங்காற் பகவானாகிய பாரிஜாத வனேஸ்வரர் மார்க்கண்டேய முனிவருக்குப் பிரசன்னமாகிப் பரம சந்தோஷ மடைந்தேனென்று சொல்லிக்கொண்டே முனிவரைப் பார்த்துப் பின் வருமாறு திருவாய் மலர்ந்தருளினார் :

" ஆசார சீலனே! எனது பக்தனாகிய மார்க்கண்டேயனே! உன்னிமித்தம் சொல்கிறேன் கேள். உலகத்தில் எனது பக்தர்களுக்கு அவமானத்தை விளைவிக்கின்றவர்கள் முன் யமதர்மராஜன் உதைபட்டதுபோல நாசத்தை அடைவார்கள். விபூதி ருத்திராக்ஷத்தை நிந்திக்கின்ற நராதமர்கள் எனக்கு விரோதிகளாகி நரகத்தில் விழுவார்கள். மார்க்கண்டேயனே! ருத்திராக்ஷ விருக்ஷம் வில்வ விருக்ஷம் இவைகள் எனது கண்ணீரிலிருந்து உண்டானவைகள். இவைகளைக் காட்டிலும் உயர்ந்தது உலகத்தில் வேறொன்றுமில்லை. இவ்விரண்டு விருக்ஷங்களும் எனக்குச் சமானமானவை. ருத்திராக்ஷத்தை அணிவதாலும் வில்வார்ச்சனை செய்வதாலும் விசேஷ புண்ணிய முண்டாகின்றது, இந்த ரகஸ்யமானது முன்னால் விஷ்ணுவுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்த ரகஸ்யத்தை லக்ஷ்மியானவள் தனது புருஷனாகிய மகா



விஷ்ணுவிடம் கேட்டு வில்வவிருக்ஷத்தை அடைந்தாள். அப் புண்ணிய விருக்ஷத்தின் அடியில் வாசஞ்செய்ததின் பயனாக உலகங்களெல்லாவற்றிலும் பூஜிக்கப்பட்டாள். பரமசிவனது பிரதம பக்தராகிய மகாவிஷ்ணுவின் சௌபாக்கியத்தையும் அடைந்தாள். மார்க்கண்டேயனே! கேட்ட மாத்திரத்திலே பாவத்தை விலக்குகிறதாயும், ரகஸ்யமானதாயும், உத்தம மானதாயும், என்னாற் சொல்லப்பட்டதாயு மிருக்கிற இந்த வில்வத்தின் மகிமை எனது பக்தர்களைத் தவிர மற்றவர்களிடத்திற் சொல்லத்தகுந்த தன்று." இவ்விதம் சிவபிரான் மார்க்கண்டேயருக்கு உபதேசித்து வேண்டிய வரத்தையு மளித்து, அவ்விடத்திலேயே மறைந்தருளினார்.

சூதமுனிவர் பின்னுஞ் சொல்லுகிறார்: மார்க்கண்டே யரும் சிவபிரானது உபதேசத்தைச் செவியுற்று அவ்வாறே அவருக் குகந்த வில்வம் முதலான பற்பல மலர்களால் அவ ரைப் பூஜித்துக்கொண்டு, முனிவர்கள் சூழப் பாரிஜாத வனத்திலேயே வசித்துவந்தார். சிவபெருமானது உபதேசப் படித் தினந்தோறும் வில்வவிருக்ஷசேவையுஞ் செய்துவந்தார். வில்வ விருக்ஷத்தின் அடிமண்ணை எடுத்து நெற்றியிற் பூசிக் கொள்ளுகிறவர்களுடைய நெற்றியிலிருக்கிற கெட்ட எழுத் துக்கள் கூட நல்ல எழுத்துக்களாக மாறுகின்றன. பிரம ஹத்தி முதலான பாவக் கூட்டங்களும் நாசமடைகின்றன. சரீர வியாதிகளும் மனக் கவலைகளும் அபஸ்மாரமான குஷ்டம் முதலிய மகா ரோகங்களும் நாசமடைகின்றன. புத்திரனில்லாத ஒருத்தி இந்துவாசரத்தில் ஒரு பழத்தினுள் வுள்ள அந்த வில்வ மரத்தடி மண்ணை யெடுத்து, அதனுடன் ஜலத்தைச் சேர்த்து, ஒரு மாத காலம் பக்தியுடன் உட் கொள்ளுவாளே யாகில் அவளுக்கு நல்ல புத்திரன் பிறப் பான். இது நிச்சயம். அப்புத்திரன் சிவனடியானாகவும் புத்திர சம்பத்துள்ளவனாயும் இருப்பான். கோடைக்

காலத்தில் அப்புண்ணிய விருக்ஷத்துக்குத் தண்ணீர் விடுகிறவர்கள் ஒவ்வொரு குடத்துக்கும் ஒரு கோடி வருஷகாலம் சிவலோகத்தில் வசிப்பார்கள். அவனுடைய பிதிருக்கள் சுவர்க்கலோகத்தை அடைந்து முத்தியை அடைவார்கள். இரண்டு பாண பாத தூரத்தில் ஆதிரத்நேஸ்வரருக்குத் தென் கிழக்கில் அகஸ்தியதீர்த்த மிருக்கின்றது. இப் புண்ணிய தீர்த்தத்துக்குத் தெற்கில் வில்வவிருக்ஷத்தி னடியை அடைந்து, அகஸ்தீசருடைய சந்நிதியிற் பிதிருக்கள் இறந்த தினத்திற் பிராமண போஜனம் செய்விப்பவனுடைய பிதிருக்கள் அமிருதபானம் செய்தவர்களாகிச் சிவ ஸ்வரூபர்களாவார்கள். தினந்தோறும் வில்வ விருக்ஷத்துடன் கஜேசரையும் பிரதக்ஷணம் செய்பவர்களும், பிரதக்ஷணம் செய்விப்பவர்களும் பூமியை வலம் வந்த பலத்தையும் மற்றுமெல்லா அபீஷ்டங்களையும் அடைவார்கள். மேலும், வெகு தூரத்தில் நின்று இந்த வில்வ விருக்ஷத்தின் கிளையைப் பார்க்கின்றவர்களும் பாப ரஹிதராய் மேலான கதியை யடைவார்கள். இயற்கையாகவே உதிர்ந்த வில்வ பத்திரங்களைக் கொண்டு வந்து, யாக சம்பந்தமான அக்கினியிலோ, ஔபாசனுக்கினியிலோ, ஹோமஞ் செய்பவரும், அந்த விபூதியை பஞ்சாக்ஷர விதிப்படி நெற்றியில் அணிந்து கொள்ளுபவரும் முத்தராவார்கள். ஐயுறவேண்டாம். இந்த வில்வ இதழ்களால் மாலை செய்து பார்வதி பரமேஸ்வரர்களுடைய திருவடிகளிற் சாத்துபவர்கள் ருத்திரகண மாவார்கள். மேற்சொன்ன அக்கினிகளில் ஹோமஞ் செய்யப்பட்ட வில்வ பத்திரத்தின் பஸ்மத்தை அணிந்தால் மனக்கவலை வியாதி முதலியவை சிவாக்ஞையினாலே உடனே நீங்கும். அப் புண்ணிய விருக்ஷத்தி னடியிற் பிராமணருக்கு அற்ப திரவியத்தைக் கொடுப்பவர்கள், மகாமேருவளவு சொர்ணதானம் செய்த பலனை யடைவார்கள். இந்த விருக்ஷத்தின் பெருமையையும்,



க்ஷேத்திரத்தின் சிறப்பையும் எவராலே தான் வருணிக்க
முடியும்? ஆயிர நாக்கள் படைத்த ஆதிசேஷனாலும் முடி
யாது. அந்த விருக்ஷத்தினடியில் க்ஷணகால மிருப்பவன்
விபரீதமான பேதகத்தினின்றும் விடுபட்டவனாய்த் திவ்விய
ஸ்வரூப னாவான். சௌநகரே! திராவிட தேசத்தரசன்
நாய்த்தன்மையினின்று விடுவிக்கப் பெற்றபடியே மற்றவர்
களும் விரூபத்தினின்றும் திவ்விய ரூபத்தை அடைவார்கள்.

## 54. திராவிட தேசத்தரசன் நாய்ப்பிறவி நீங்கினது.

சௌநகர் சூதமுநிவரை நோக்கி, "புராண மறிந்த
வர்களுட் சிறந்தவரே! அந்தத் திராவிட தேசத்தரசன்
எவ்விதம் நாயின் பிறவியை யடைந்தான்? அதினின்றும்
எவ்விதம் விடுதலை அடைந்தான்? அந்த விருத்தாந்தங்க
ளெல்லாவற்றையும் எடுத்துரைக்கவேண்டும்" என்று
பிரார்த்திக்கச் சூதமுநிவர் சொல்லுகின்றார்:

சௌநகரே! கேட்ட மாத்திரத்திலே பாவத்தை
விலக்குகிறதும், கர்வத்தைத் தொலைக்கிறதும், புராதனமு
மான இதிஹாசத்தை இவ்விடத்திற் கூறுகின்றேன்.
கேட்பீராக. நீர்வளம் நிலவளம் முதலிய சர்வ ஐசுவரியமும்
நிறையப் பெற்றுக் காவேரி நதியின் வடக்குக் கரையில்,
எல்லா சம்பத்துக்களும் பொருந்திய உஜ்ஜயினி என்கிற
பட்டணத்தில் வர்ணாசிரம தர்மங்களை ரக்ஷிக்கிறவனாயும்,
உலகத்திற்கே அலங்காரம் போன்றவனாயும், போஜேஸ்வரன்
என்று ஓர் அரசனிருந்தான். அவ்வரசன் தனது பிரஜைக
ளிடம் நீதி வழுவாது செங்கோல் செலுத்தி எல்லா சம்பத்
துக்களும் நிரம்பப் பெற்றிருந்தான். ஒரு சமயம் 'ஹம்சத்
துவஜன்' என்று உலகத்திற் பிரசித்தி பெற்ற அவ்வரசன்
வேட்டையிற் பற்றுடையவனாய் வனத்தை யடைந்தான்.

முநிவர்கள் வசிக்கப் பெற்றுப் பலவித துஷ்ட ஜந்துக்கள்
நிறைந்துள்ள அவ்வனத்தில், மான் பன்றி முதலானவைகளை
வேட்டையாடிக் களைத்து, வெயிலின் கொடுமையாற் பீடிக்கப்
பட்டுச் சேவக ஜனங்களை விட்டுத் தானொருவன் புரவியின்மீ
தேறிப், பைரவி என்கிற வனத்தை யடைந்தான். அவ்
வனத்தின் பெருமையையும், அவ்விடத்தில் வசிக்கும் தபசிக
ளுடைய பெருமையையும் அறியாத அரசன் சுமந்து என்னும்
பிராமணரின் ஆசிரமத்தை யடைந்தான். அச்சமயம்
ஆசிரமத்தில் ஒருவருமில்லை; சுமந்துவும் அவரது பத்தினி
யாரும் நண்பகல் ஸ்நானத்திற்கு நதிக்குச் சென்றிருந்தனர்.
அரசனும் சில நேரங் காத்திருந்து ஒருவரும் வாராமை கண்டு,
பசியின் கொடுமையாற் சுமந்து முநிவரின் பத்தினியாரால்
சமைக்கப்பட்டிருந்த அன்னத்தைச் சாப்பிட்டான். சற்று
நேரங் கழித்து ஸ்நானஞ் செய்யச் சென்ற சுமந்து முநிவர்
ஆசிரமம் வந்து சேர்ந்தார். அப்பொழுது அரசன் போஜனம்
செய்து கொண் டிருந்ததைப் பார்த்துச் சிறிது சினத்
துடன் சொல்லுகிறார்: 'அரசனே! அறியாமையினால் மன
வருத்தத்தை விளைவித்து விட்டாய். இன்னும் தெய்வ பூஜை
நிவேதனம் ஒன்றும் செய்யவில்லையே. கொஞ்ச நேரம்
காத்திருந்து எனது அநுமதியின் பேரில் இக் காரியத்தைச்
செய்யக்கூடாதா? இனி நாங்கள் என் செய்வது? அமுது
படியும் வேறில்லையே. நீ உட்கொண்டு மிகுந்ததை யார்
புசிப்பார்? இந்தப் பாத்திரத்திலிருக்கின்ற அன்னம் நாயினாற்
பரிசிக்கப்பட்டது போலத் தள்ளத் தகுந்ததன்றோ?'
என்றனர். இவ்விதஞ் சுமந்துமுநிவர் சொல்லவே அரசனும்
கோபமுள்ளவனாய்ச் சொல்லுகிறான்: 'சுமந்துவே, நீர்
மீறி நடந்து, என்னாலே தொடப்பட்ட பதார்த்தமானது
நாயினால் தொடப்பட்ட வஸ்துவுக்குச் சமமென்று நிந்திக்
கின்றீர். உலகத்திலே அரசன் எப்பொழுதும் அந்தணர்க



ளாற் போற்றத் தக்கவ னன்றோ? பசிப்பிணியினா லன்றோ
உமது ஆசிரமத்திற் சாப்பிட்டேன்? எனது செய்கையை
அங்கீகரியாது, என்னை நாய்க்குச் சமமாயும் சொன்னபடி
யால், நீரே நாயாக விருந்து, பத்தினியோடு கூடச் சஞ்சரிப்பீ
ராக' என்றான். அச்சமயத்திலே நதியினின்றும் நீராடி
வந்த சுமந்துவின் பத்தினி அரசனிட்ட சாபத்தைச் செவி
யுற்று, உடனே அரசனை 'நாயாகக் கடவை' என்று சபித்
தாள். அப்பொழுதே அரசனும் நாய் வடிவ மடைந்தான்.
முதலிலேயே தவறுதல் செய்த அரசனுடைய சாபமானது
சுமந்துவைத் தொடரவில்லை. அரசன் சுமந்து பத்தினியா
ரது சாபத்தினால் நாய் ஜன்மத்தை அடைந்து, தனது
நிலைவின்றி, ஒவ்வொரு தேசங்களிலும், வனங்களிலும், நதிக
ளிலுஞ் சஞ்சரித்தான், இவ்விதம் பதினாயிர வருஷகாலம்
சாபத்தினால் துன்புறுத்தப் பட்டவனாய்ப் பசிப்பிணியால்
உடல் மெலிந்து, ஆவிமாத்திர முடையவனா யிருந்தான்.
உலகத்தாராலேயும் நிந்திக்கப்பட்டான். முன் ஜன்ம நற்
பயனால் வேகவதி நதியின் வழியாக சோமேஸ்வரத்தை
அடைந்து, அவ்விடத்திலிருக்கும் ஒரு நட்டுவனால் வளர்க்கப்
பட்டு வந்தான். இப்படி யிருக்குங் காலத்தில் ஒரு சமயம்
அந்நட்டுவனுடன் விளையாட்டின் நிமித்தம் கஜேஸ்வர
வனத்தை யடைந்து, தெய்வ வசத்தினால் அந்நட்டுவாங்கம்
செய்பவனை விட்டு, அவ்வனத்திலுள்ள தேவாலயத்தை
யடைந்து, வெயிலின் கொடுமையினால், அவ்விடத்திலுள்ள
வில்வ விருக்ஷத்தின் நிழலைச் சேர்ந்து, நித்திரை செய்து
தெளிந்தெழுந்ததும், நாய்த் தன்மை நீங்கப்பெற்றுத் திவ்விய
ரூபமடைந்து, கஜேசரது உத்திரவுப்படிப் புண்ணிய தீர்த்தத்
தில் ஸ்நானம் செய்து, விமான மேறித் தேவலோக மடைந்
தான். அவ்விடத்தில் அவ்வரசன் தேவேந்திரனாற் பூஜிக்கப்
பெற்று, இந்திர கற்பம் முடியும் வரை அவ்விடத்துள்ள

போகங்களை யெல்லாம் அநுபவித்து, இறுதியிற் சிவலோக மடைந்தான். இஃது ஆச்சரியம். இந்த வில்வ மரத்தின் பெருமையை என்னென் றுரைப்பது? சிவபிரானிடத்துத் தோன்றிச் சிவபிரானுக்குச் சமானமாயிருக்கிற இப்புண்ணிய விருக்ஷத்தின் பெருமையையும் இத்தலத்தின் சிறப்பையும் இத்தீர்த்தத்தின் மகிமையையும் ஆயிர நாக்கள் படைத்த ஆதிசேஷனாலும் சொல்லமுடியாது. சாபத்தினால் நாயாகிப் பிறகு இப்புண்ணிய விருக்ஷத்தின் நிழலை அடைந்ததினால், திவ்விய சரீரத்துடன் சிவலோகத்தை அடைந்த அரச னாலேயே இந்த ஸ்தலத்தின் மகிமையை அறிந்து கொள்ள லாம். இப்புண்ணிய விருக்ஷத்தின் மகிமையானது, சிவபிரானாலேயே முன்னொரு சமயம் எப்படி வில்வ விருக்ஷத்தை ஆராதிக்கவேண்டு மென்று உபதேசிக்கப்பட் டிருக்கின்றது. வேறு தேசத்தி விருப்பவரும், வேறு தீபத்தி விருப்பவரும், இப் புண்ணிய விருக்ஷத்தை நினைத்தவளவிற் பாவங்களினின்றும் விலகுகிறார்கள். அதிகாலையிற் கிருதமாலை என்கிற வனத்தி லிருக்கிற வில்வ விருக்ஷத்தை நினைப்பவன் கொடிய பாவங்களி னின்றும் விலகுகின்றான். இது சத்தியம். இந்த வில்வ மரத் தடியிற் பஞ்சாக்ஷர ஜபம் செய்பவர்கள் ஒவ்வொரு ஜபத் துக்குங் கோடி ஜபபலனை யடைவார்கள். பௌர்ணமையிலும் அமாவாசையிலும், சூரிய சந்திரர்களுடைய கிரஹண காலத்தி லும், இந்த வில்வ விருக்ஷத்தை அர்ச்சித்துப் பிரதக்ஷணஞ் செய்கிறவர்கள், ஒவ்வொரு காலடிக்கும் அசுவமேத யாகம் செய்த பலனை அடைவார்கள். சுக்கிர வாரங்களில் இந்த வில்வ விருக்ஷத்தைக் கந்த புஷ்பங்களாற் பூஜிக்கிறவருடைய கிரகத்தில் மஹாலக்ஷ்மி வாசஞ்செய்வாள். அவர்கள் தினந் தோறும், மங்களத்தோடு கூடினவர்களாகவும், தனம் தானி யம் இவைகள் நிறையப் பெற்றவர்களாகவு மிருப்பார்கள். பூதங்களும், பிரேதங்களும், பிசாசுகளும், சாகினீ, டாகினீ



முதலானவைகளும் இந்த விருக்ஷத்தைச் சேவித்த வளவில்
நீங்குகின்றன. இவ்விருக்ஷத்தைச் சேவிப்பவர்கள் கெட்ட
ஸ்வப்பனங்களினின்றும் நீங்கி இம்மை மறுமைப் பயன்களைப்
பெறுவார்கள். அகஸ்தியமுநிவரும் இவ்விருக்ஷத்தின் மகி
மையை யறிந்தே இதனடியிலே இலிங்கப் பிரதிஷ்டை செய்து
வசித்து வந்தார்.

## 55. அகஸ்தியர் பூஜித்தது.

சௌநகர் சூதமுநிவரை நோக்கிச் ‘ சிவபக்தியிற் சிறந்த
அகஸ்திய முநிவர் எவ்விதம் இந்த வில்வ விருக்ஷத்தின் பெரு
மையை யறிந்தார்? எவ்விதம் இம்மரத்தடியில் இலிங்கத்தைப்
பிரதிஷ்டை செய்தார்? எதற்காக அம்மரத்தடியில் வசித்தார்?
இன்னும் அவர் என்னென்ன செய்தாரோ அவைகள் எல்லா
வற்றையும் ஆதிமுதல் திருவாய் மலர்ந்தருளல் வேண்டும்’
என்று பிரார்த்திக்கச் சூதமுநிவர் கூறுகின்றார் :

சௌநகரே! உலகத்தில் விபூதி ருத்திராக்ஷங்களை
யணிந்து, சிவபூஜை செய்யும் மகாவிஷ்ணு முதலான அநேகம்
பக்தர்களுள் மிகச் சிறந்தவரான அகஸ்திய மகாமுநிவரது
கதையைச் சொல்லுகிறேன் கேளும் :

பத்மகற்பத்தில், அகஸ்திய மகாமுநிவர், கேதாரம் முதற்
சேது மலையபருவதங்கள் வரை, தீர்த்தயாத்திரை செய்தார்.
அவிமுக்தவனம், கௌமாரவனம், காகோலம், நீலகண்டம்,
வடாரண்யம், வேதாரண்யம், பீமவனம், பாரிஜாதவனம்,
வேணுவனம், மாதவிவனம் முதலிய புண்ணிய வனங்க
ளுக்குச் சென்றார். ஆகிரத்நேஸ்வர மென்ற இப்புண்ணிய
ஸ்தலத்தை அடைந்தபொழுது, தெய்வ வசத்தால் அவ்விடத்
தில் வசித்து வரும் மார்க்கண்டேய முநிவரைப் பார்த்ததும்,
க்ஷேமம் விசாரிக்கப்பெற்று, அவரால் அதிதி பூஜையுஞ்

செய்யப் பெற்று, அவரது ஆசிரமத்தில் தங்கி, அத்தலத்திலிருக்கிற தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, ஈசனை வணங்கி, மார்க்கண்டேய முனிவரை யடுத்து, 'இத்தலத்தின் பெருமையைச் சொல்ல வேண்டும்' எனக் கேட்டார். மார்க்கண்டேயரும் முற் காலத்திற் சூரியனாற் பூஜிக்கப்பட்ட இலிங்கத்தின் விருத்தாந்தத்தையும், தான் வந்த விவரத்தையும், வில்வ விருக்ஷத்தின் பெருமையையு மெடுத்துரைத்தார். இவற்றை யெல்லாங் கேட்டு அகஸ்திய மகா முனிவரும், கஜேசரின் பிரீதியின் பொருட்டும், லோகாநுக்கிரகத்தின் பொருட்டும், கஜேசருக்குத் தென் பக்கத்தில், மிக அழகாய்த் தாமரை நீலோற்பலம் முதலிய மலர்களால் அலங்கரிக்கப் பெற்ற தீர்த்தத்தில், அந்தந்த மந்திரங்களினால், அந்தந்த நதிகளை யிருக்கச் செய்து, நீராடிப் பிறகு தேவாலயஞ் சென்று விதிப்படி நமஸ்கரித்தார். கஜேசரது உத்திரவின் படி, அவருக்கு ஆக்கினேய திக்கிற் கிழக்கு முகமாகச் சூரியன் மகரத்தி லிருக்கும்பொழுது, சப்தமி திதியிற், பூர்வ பக்ஷத்தில், ஒரு அழகான இலிங்கத்தைச் சைவாகம விதிப்படி பிரதிஷ்டை செய்து, பூஜை முதலியவற்றைச் செய்து, உகைத்தார் அதனைத் தமது பெயராலே அழைக்கும்படிச் செய்து, அன்புடன் அர்ச்சித்துக்கொண்டு, ஒரு வருஷத்துக் கதிகமாக அந்த ஸ்தலத்தில் வசித்துவந்தார். அப்புண்ணிய தீர்த்தமும் இலிங்கமும் உலகத்திற் பிரசித்தி பெற்றன. சௌநகரே! பிராமணோத்தம ராகிய அகஸ்திய மகா முனிவர் இவ்வாறு சிவபிரான் அன்புக் குகந்தவராய் வேண்டிய வரங்களைப் பெற்றார்.

மீட்டும் விநாயகரையும் ஷண்முகரையும், கஜேசரையும், ஸ்நேகவல்லியையும் நமஸ்கரித்து, மார்க்கண்டேய முனிவருடன் பதரிகாசிரமத்தை யடைந்தார். இன்னும் அநேகர் தவசிரேஷ்டர்கள் நித்திய முத்தர்களாகவே இப்புண்ணிய ஸ்தலத்தில் உறைகின்றார்கள். ராஜ சிரேஷ்டனாகிய அரிச்



சந்திரனும் பாரிஜாத கஜேசரைப் பூஜித்துச் சத்திய விரதத்தைக் கைக்கொண்டவனாய், உலகத்தில் இணையில்லாத கீர்த்தியை யடைந்தான். இன்னும் மநுவின் புத்திரனான **மாந்தாதா** என்ற அரசனும், மகாபராக்கிரமசாலியான **முசுகுந்தனும்**, தேவ தேவனான பாரிஜாத கஜேசரை யாராதித்து, உத்தமமான சிவஞானத்தை அடைந்து, நித்திய முத்தராய்ச் சுவர்க்க லோகத்தை அடைந்திருக்கிறார்கள். இவ்வுத்தம ஸ்தலத்தில் க்ஷணகாலமோ, அல்லது அதிலும் பாதிகாலமோ, வசிக்கிறவர்களுக்கு முக்தி கைகூடுகின்றது. இஃது உண்மையே. சித்திரைமாதம், சுக்கில பக்ஷம், சித்திரை நக்ஷத்திரத்துடன் கூடிய பௌர்ணமையிற் சூரிய மந்திரத்தை ஜபித்துக் கொண்டு, சூரிய தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்பவர்கள் தங்கள் பிதிருக்களுடன் சிவசாலோக்கியத்தை யடைகிறார்கள். வைகாசி மாதம் பௌர்ணமி தினத்தன்று மத்தியான காலத்திற், பஞ்சகவ்வியத்தினாலும், தேனாலும், பாலாலும், பாரிஜாத கஜேசருக்கு அபிஷேகம் செய்பவர்களும், அவர்களது கோடிவம்சத்தார்களும் சிவலோகத்தை யடைகின்றார்கள். கார்த்திகை மாதத்தின் ஞாயிற்றுக் கிழமைகளிலும் திங்கட்கிழமைகளிலும் மார்க்கண்டேயம் முதலான புண்ணிய தீர்த்தங்களில் நீராடித் தேவர்களையும் பிதிருக்களையும் திருப்தி செய்பவர்கள் சிவசாரூப்பியத்தை அடைகின்றார்கள். துலாமாதத்தில், அகஸ்திய தீர்த்தத்தில், சூரியோதயத்துக்கு முன், சூரிய மந்திரத்தினால், விதிப்படி ஸ்நானஞ் செய்து, அத்தீர்த்தக் கரையிற் பிதிருக்களுக்குப் பிண்டத்தை யளிப்பவர்கள் தங்கள் பிதிருக்களுடன் சிவலோகத்தில் துதிக்கப் பெறுவார்கள். மங்களகரமான சிவராத்திரி தினத்தன்று, இத்தீர்த்தங்களில் மௌனமாக ஸ்நானஞ் செய்து, பஞ்சாக்ஷர ஜபம் செய்து, பஞ்சாமிருதம், பஞ்சகவ்வியம், சுத்தஜலம் இவைகளாற் கஜேசரையுந் தேவியையும் விதிப்படி

அபிஷேகம் செய்து, நெய்யும் பருப்புங்கலந்த சாலி அன்னத்தை நிவேதனஞ் செய்கிறவர்களும், நிர்த்தன காணங்களைச் செய்பவர்களும், நித்திய முக்தர்க ளாகின்றார்கள். சந்தேகிக்க வேண்டாம். தினந்தோறும் இத்தீர்த்தங்களில் ஸ்நானம் செய்கிறவர்கள் சிவசாயுச்சியத்தை அடைவார்கள். மகர மாதத்தில் இத்தீர்த்தங்களில் ஸ்நாநஞ் செய்து தினந்தோறும் அன்னமளிப்பவர்கள் சிவபிரானுக்குச் சமமாகின்றார்கள். அவர்கள் செய்த பிரமஹத்தி முதலான பாவங்களும் நீங்குகின்றன. பாரிஜாத கஜேசரது பூஜையின் நிமித்தம், நந்தவனத்தை யுண்டாக்கி, அன்புடன் ஒரு மலரையாவது அர்ப்பணம் செய்பவர்கள் சிவதுல்ய ராகின்றார்கள். இத்தலத்தின் சிறப்பையும் இப்புராணத்தையும் கேட்பவர்களுக்குக் கைவல்யசித்தி அவர்களது கையிலேயே யிருக்கின்றது; சத்தியம். இப்புராணத்தின் ஒரு அத்தியாயத்தைக் கேட்டால் வாஜபேய யாகஞ் செய்த பல னுண்டாகும். மூன்று அத்தியாயங்களைக் கேட்டால் விரதங்களினின்றும் தவறினும விரதமிருந்த பல னுண்டாகும். நான்கு அத்தியாயங்களைக் கேட்டால் ராஜசூய யாக பல னுண்டாகும். ஐந்து அத்தியாயங்களைக் கேட்டால், தெரிந்து செய்த பாபங்களும் நீங்கும். சௌநகரே! இப்புராணத்தைப் பாரிஜாத கஜேசரது சந்நிதியிற் படிக்கும் நல்லொழுக்கமுள்ள பிராமணர்களும், அவர்களைப் படிக்கும்படிச் செய்பவர்களும், கஜேஸ்வரருக்குப் பூஜை செய்பவர்களும், அழிவற்ற பரசிவப் பிரமத்தையடைகின்றார்கள். இத்தலத்தில் எக்காலத்திலும் ஒரு பிடியளவுள்ள அன்னத்தை யளிப்பவர்கள் முத்தராகின்றார்கள். சூரியன் கும்பத்தி லிருக்கும் பொழுதும், பௌர்ணமை தினத்தன்று மத்தியானத்திலும், அன்னமளிப்பது மிகவும் விசேஷம். சௌநகரே! மிகைபடக் கூறுவானேன்? இப்புராணமே கேட்கத்தகுந்தது. இத்தலமே வசிக்கத்தகுந்தது.



ஐந்து குரோச விஸ்தாரமுள்ள இப்புண்ணிய க்ஷேத்திரத்திலிருக்கிறவர்கள் சிவசாயுச்சியத்தை அடைகின்றார்கள். இந்த க்ஷேத்திரமானது மங்களமும் பரிசுத்தமு முள்ளதாதலால் இதிற் சிவபெருமான் பார்வதியுடன் பிரசந்நராக இருக்கின்றார். இப்புராணத்தைப் பக்தியுடன் கேட்பவர்களும் படிப்பவர்களும் பாவங்களினின்று நீங்கி எல்லா சம்பத்தையும் பெறுவார்கள்.

## 56. காமதேநு சாபமடைந்தது

சௌநகர் மீட்டுஞ் சூதமகா முநிவரை நோக்கி, "உலகத் தாராலே வணங்கப் பெற்றவரே! மகாபாக்கியவந்தரே! கேட்பவர்களின் மலங்களை நீக்குவதும், மிக ஆச்சரியம் உள்ளதுமான கோமுக்தீஸ்வரமாகாத்மியத்தை முன்னொரு சமயம் தேவரீரின் திருவாயாற் சுருக்கமாகக் கேட்கப் பெற்றேன். தீர்த்த மகிமையை அருளிச் செய்தது போல, விஸ்தாரமாக ஸ்தல மகிமையையும் திருவாய் மலர்ந்தருளல் வேண்டும். யாது காரணம் பற்றிப் புராதனமான காமதேநு பாரிஜாத கஜேசரைப் பூஜித்தது? ஈசன் திருவருளால் என்ன பேறு பெற்றது? பாண்டுவின் புதல்வனான அர்ச்சுனன் பூஜை செய்த காரணம் யாது? அப்புண்ணிய க்ஷேத்திரம் எந்த தேசத்தில் இருக்கின்றது? அவ்விடத்தி லிருக்கிற வனத்தின் பெயரென்னை? இவற்றை யெல்லாம் முநிவர்களுடைய சந் நிதியில் ஐயமறக் கூறவேண்டும் என்று கேட்கச் சூதமுநிவர் சொல்லுகின்றார்:

சௌநகரே! முன்னாளிற் கிருதயுகத்தில், தேவேந்திரன் முதலிய தேவர்கள் ஒரு காரணம் பற்றிப் பிரமலோகத்தை அடைந்தார்கள். அச்சமயம் காமதேநுவும் அத்தேவர்களுடன் பிரமலோகத்தையடைந்து, இரண்டு மாதகாலம் நான் முகனைச்

சேவித்துக் கொண்டிருந்தது. அத்தருணம் வசிஷ்டமகா
முனிவர் உத்தமமான வாஜபேய மென்ற யாகத்தைச் செய்ய
விருப்பமுள்ளவராய் அன்புடன் காமதேநுவை நினைத்தார்.
நினைத்த வளவில் முன்போல் வாராமைகண்டு கொஞ்சகாலம்
ஆலோசித்தார். பிறகு பிரமலோகத்தி லிருப்பதாக அறிந்து,
மிகவும் துக்கத்துடன், தமது சங்கற்பம் வீணானது பற்றிச்
சிறிது கோபமடைந்தவராய்க் காமதேநுவுக்குப் பய
முண்டாகும் பொருட்டுப் பின்வருமாறு கூறினார்: 'ஏ, காம
தேநுவே! நீ யாகத்தை ரக்ஷிக்கும் பொருட்டு யான் நினைத்த
வளவில் வாராமையால், இன்று முதல் ஹவ்ய கவ்ய முதலியவற்
றிற்கு உரிமையில்லாமற் பிராமணர்களால் நிந்திக்கப்பட்டு,
இக் கணத்திலேயே ஆட்டின் வடிவை யடைவாயாக' என்று
சபித்தார். அவ்வமையத்து உலகம் போற்றும் நாரத மகா
முனிவர் தீர்த்த யாத்திரையின் நிமித்தம் வசிஷ்டரது
ஆசிரம மடைந்தார். வசிஷ்டரும் நாரதரைப் பார்த்து மிகக்
களிப்புற்று, அன்புடன் பூஜித்துக் காய் கிழங்கு முதலிய
வற்றைச் சமர்ப்பித்து, உயர்ந்த ஆசனத்தி லமரச் செய்து,
தமது விருத்தாந்தத்தையும் தெரிவித்துத் தாமும் நாரதருக்
குச் சமீபமாக ஆசனத்தி லமர்ந்தார். நாரதரும் வசிஷ்ட
ருடைய வார்த்தையைக் கேட்டுப் புன்சிரிப்புடன் மாறான
அபிப்பிராயமுள்ளவராய்ச் சொல்லுகிறார்: "மகாபாக்கியவா
னாகிய வசிஷ்டரே! இஃது ஆச்சரியம். தங்களைப் போன்ற
தவசிரேஷ்டர்கள் இவ்விதம் செய்வார்களா? அந்தக் காம
தேநுவானது மிகப் பரிசுத்தமானது. வேதமந்திர ஸ்வரூபமா
யுள்ளது. அதனாலேயே உலகமெல்லாம் ஜீவித்திருக்கின்றது.
தேவேந்திரன் முதலான தேவர்களும் ஜீவித்திருக்கின்றார்கள்.
நீர் இப்பொழுது தேவர்களுக்கு அபராதம் செய்தவராகிறீர்.
ஆகையால் நீர் காமதேநுவைச் சபித்த தோஷநிவர்த்தியின்
பொருட்டு, யாகபூமிக்குச் சமீபத்திலிருந்து, கடுந்தவமியற்றிச்



சிவபூஜையுஞ் செய்யவேண்டும். புண்ணிய பூமியாகிய
பாண்டிய தேசத்தின் கண், வேகவதி நதிக்கு வடக்கில், ஸ்ரீ
காளீஸ்வரருக்குத் தென் கிழக்கில், இரண்டு யோசனை தூரத்
திற் சர்ப்ப நதிக்குத் தெற்கே, லக்ஷ்மிவனேஸ்வரருக்கு நிருதி
திசையில், ஒரு யோசனை தூரத்திலுள்ள மிகப் புனிதமான
மணிமுத்த நதியின் வடகரையில், மூவுலகங்களிலும் பிரசித்த
மான கஜேஸ்வர க்ஷேத்திர மிருக்கின்றது. அத் தலத்தில் ஸ்ரீ
கஜேச பெருமானுக்குத் தென்கிழக்கிற் சூரியனு லுண்டு
பண்ணப்பட்ட சூரிய புஷ்கரணி என்னும் புண்ணிய தீர்த்த
மிருக்கின்றது, இத்தீர்த்தத்தில் நீராடிக் கஜேசரைத் தரி
சிப்பவர்கள் அகாரியத்தைச் செய்த தோஷத்தினின்றும்
விலகுகிறார்கள். அந்தக் காமதேநுவும் உம்முடைய சாபம்
நீங்கும் பொருட்டு ஜம்புத் தீபத்தில், இப் புண்ணியத் தலத்
திற் கஜேசரை அன்புடன் ஆராதித்துத் துதித்துச் சாபத்தி
னீங்கி யாக காலங்களிலும், மற்றெக்காலங்களிலும் உமக்கு
உட்பட்டே யிருக்கப் போகின்றது." இங்ஙனம் பேசிப் பிரம
லோகத்தை யடைந்து, நடந்தவைகளை யெல்லாந் தேவர்கள்
சூழச் சபையில் வீற்றிருக்கும் பிரமதேவரிடம் தெரிவித்தார்.
இதைக் கேட்ட தேவர்க ளெல்லோரும் உடல் நடுங்கினார்கள்.
காமதேநுவும் மிக நடுக்கத்துடன், சாபவிமோசனத்தை நாடித்
தேவர்களெல்லோரும் பார்க்க, நாரதரின் சமீபத்திலிருந்து
கொண்டு, பிரமனை உற்று நோக்கியது. நான்முகனும் காம
தேநு எண்ணினதை யறிந்து, பின் வருமாறு சொல்லுகிறார்:
'ஏ! காமதேநுவே! கேள். நீ தெய்வ வசத்தாற் சபிக்கப்
பட்டாய். நாரதரும் உமது மகிமையை எடுத்துரைத்தார்.
அப்படிக் கிருந்தும், யாகம் செய்யுஞ் சமயத்தில் உன்னைக்
காணாத கோபத்தால், மூன்று காலத்தையும் அறிந்தவராயும்,
தர்மஸ்வரூபராயும், உண்மையைக் கைக்கொண்டவராயு
மிருக்கிற வசிஷ்டர் உன்னைச் சபித்தார். உலகத்திற் செய்யத்

தகுந்ததைச் செய்ய வேண்டும். செய்யத் தகாததைச் செய்யக் கூடாது. செய்யத் தகாததைச் செய்தாற் பெருந்தீமை விளையும். ஆகையால் அப் பெரியோரது கட்டளையை மீறுமற் சாபத்தை யேற்றுப் பிறகு சாப நிவாரண காலத்தை எதிர் பார்ப்பாயாக. காவேரிநதியின் தென்கரையி லிருக்கிற புண்ணிய பூமியில், முன்னாளிற் பிரமன் முதலிய தேவர்க ளாலும் முநிவர்களாலும், யோகியர்களாலும், சூரியனாலும் சேவிக்கப்பட்ட பாரிஜாத மென்னும் பெயருள்ள வனமும், மிகப் புராதனமான சூரிய பூஜித சூக்ஷ்ம பூத லிங்கமும் இருக்கின்றன. அதற்குத் தென்பாரிசத்திற் பாவத்தைப் போக்கும், மிகப் பரிசுத்தமான ஜலத்தையுடைய பாவநாசநதி யென்று பெயர் புனையப்பெற்ற மணிமுத்தநதிக்குத் தென்சார், மூவுலகங்களிலும் பிரசித்தமான பாரத்வாஜேஸ்வரர் என்ற இலிங்கமூர்த்தி வீற்றிருக்கின்றார். பிரமஹத்தி முதலான பாவங்களைத் தொலைக்கும் பொருட்டு, முநிவர்களும் பாரத் வாஜ மென்ற இலிங்கமூர்த்தியைப் பூஜிக்கிறார்கள். மகா பாக்கியம்பெற்ற காமதேநுவே! புண்ணியாரண்ணியத்தி லிருக்கும் இந்த உத்தமமான ஸ்தலத்தை அடைந்து தவஞ் செய்வாயாக. வருத்தப்படாது விரைந்து செல்வாயாக.' பிரம தேவர் இங்ஙனம் கூறிக் காமதேநுவை யனுப்ப, அது உத்தம மான அப் புண்ணிய ஸ்தலத்தை யடைந்தது.

## 57. காமதேநு சாப நீங்கினது.

சூத முநிவர் சொல்லுகிறார் :—'சௌநகரே! கேளும். காமதேநுவும் பத்மபுரமென்று சொல்லப்பட்ட அவ்வுத்தம ஸ்தலத்தை யடைந்து, காலவர் முதலான முநிவரைத் தரிசித்துச் சிவலிங்க பெருமானை வணங்கிப் பின்பு பிரம தேவரின் கட்டளையை நினைந்து, வசிஷ்டரிட்ட சாபம் நீங்கும்



பொருட்டு, அம்மணிமுத்த நதியில் நீராடி, அன்புடன் சிவ பிரானுக்குப் பாலபிஷேகம் செய்து, அநேகதரம் பிரதக்ஷ ணம் முதலியவற்றைச் செய்து, நாவினால் அழுக்கை நீக்கி, வாலாகிய விசிறியினால் துடைத்தும், பசுவாகிய தன்னால் செய்யக்கூடிய உபசார மனைத்தையுஞ் செய்து கடுமையான தவம் புரிந்தது. இவ்விதஞ் சிலநாள் சென்றபின், காமதேநு வின் பூஜையாற் களிப்புற்றுச் சிவபெருமான் பார்வதி சமேத ராய்ச் சுப்பிரமணியர் நந்தி முதலிய கணங்களெல்லாஞ் சூழக் கைலையங்கிரி போல வெளுத்த திருமேனியுள்ள இடபத்தின்மீ தமர்ந்து தரிசநந் தந்தருளினார். காமதேநு சிவபெருமா னது திருவடிகளில் அன்புடன் வணங்கித் தனது சாப விமோசனத்தைப் பிரார்த்தித்தது. சந்திர சேகரரும் அதற் கிசைந்து, அக்காமதேநுவின் சரீரத்தைத் தமது திருக்கரங்க ளால் தடவித், தாம் அடியார்க்கெளிய ரென்பதைக் காட்டின வுடனே, காமதேநு ஆட்டின் வடிவினின்று நீங்கித் தன தியற்கை யுருவத்தை யடைந்தது. தேவர்கள் ஆகாயத்தி னின்றும் பூமாரி பொழிந்தார்கள். சிவபிரான் பின்னருங் கருணைகூர்ந்து, காமதேநுவுக்கு ஹவ்யகவ்ய முதலியவற்றிற்கு உரிமையையும் அநுக்கிரகித்துப் பின் வருமாறு கூறுகின்றார்: 'காமதேநுவே! இன்றுமுதல் இத்தலம் கோமுத்தீஸ்வர மென் றழைக்கப்படும். இத்தலத்தை யடைந்தவர்களெல் லோரும் முத்தர்க ளாவார்கள். இத்தலத்திற் பிரவே சித்த மாத்திரத்திற் பாவங்களெல்லாம் விலகும். எனக்கு மேற்றிசையில், மூன்று பாணபாத தூரத்தில், விருக்ஷத்தி னடியில், ஒரு புண்ணிய தீர்த்தத்தை உண்டுபண்ணுவாயாக' என்று சொல்லிவிட்டு மறைந்தருளினார். காமதேநுவும் பக்தியுடன் தனது குளம்புகளினாலே, நான்கு கோணமுள்ள ஒரு அழகான தீர்த்தத்தை யுண்டுபண்ணி, அதைத் தனது பாலினாலும் நிரப்பிற்று. ஜனங்களுடைய பாவத்தைத்

தொலைக்கும் பொருட்டுக் கங்கை முதலிய புண்ணிய நதிகளையும் அத்தீர்த்தத்தில் ஆவாஹனம் செய்தது. சௌநகரே! இக்காமதேநுவானது சித்திரைமாதம் சூரிய சந்திரர்கள் சேருந் தினமாகிய அமாவாசையன்று சாபவிமோசனமடைந்தது. அது முதல் இத்தலத்துக்குக் கோமுத்தீஸ்வரமென்ற பெயர் வழங்கிற்று. ஆயங் கௌ: என்ற வடமொழி மந்திரத்தினாலே, அமாவாசை தினம் மத்தியான காலத்திலும், சூரியன் மேஷராசியை யடைந்திருக்கும்பொழுதும், இப்புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்கிறவர்கள், இம்மையிலும் மறுமையிலுஞ் சகல பாவங்களினின்றும் நீங்கிச் சர்வ போகங்களையும் புத்திர பௌத்திராபிவிருத்தியையும் அடைவார்கள். மிகப் புநிதமான கோ பாப நாசதீர்த்தத்தில் மகரமாதம், மாகமாதம் இவைகளில் ஸ்நாநஞ்செய்பவர்கள் இம்மை மறுமைப் பயன்களை யடைவார்கள். மாகமாதத்திலும், முக்கியமாகச் சிவராத்திரியிலும், க்ஷீரகுண்டத்திற் செய்யும் ஸ்நாநம் மற்றெல்லா ஸ்நாநங்களிலுங் கோடிமடங்கு அதிகமாகும். இதையறிந்தே வேத மறிந்தவர்களும் நியமத்துடன் அங்கு வசிக்கின்றார்கள். இன்னும் இவ்விதமே இந்த க்ஷேத்திரத்தின் பெருமையை யறிந்து, பிரமரிஷிகளும், தேவரிஷிகளும், ஜநகர் முதலான யோகிகளும், நியமத்தோடும், ஞான வைராக்கியத்தோடும், இத்தலத்தில் வசிக்கின்றார்கள். மேலும் சூரியன் தநுர் லக்நத்தை யடைவது முதல், உபவாசமாகவும், வாக்கு நியமத்துடனும், அம்மாதம் முடியும் வரை அங்கு வசிக்கும் பெரியோர்களால் எல்லா உலகங்களும் பரிசுத்தமடைகின்றன. இப்புண்ணிய ஸ்தலத்தைப்பற்றிப் பேசுபவர்களாலும், அதைப் பரிசிப்பவர்களாலும், தரிசிப்பவர்களாலும், இயற்கையாகவே உலகம் பரிசுத்தமடைகின்றது. ஆகையால் இத்தலமானது பெரியோர்கள் அவசியம் வசிக்கத் தகுந்தது. இக்கோமுத்தி ஸ்தலத்தைக் குறித்து மூன்றடி



எடுத்து வைக்கிறவர்கள் முதல் அடி வைத்தலினாற் பாவங்களினின்றும் விலகுகின்றார்கள். இரண்டாவது அடி வைத்தலினாற் சுவர்க்கத்தை அடைகின்றார்கள். மூன்றாவது அடி வைத்தலினாற் சிவ சாலோக்கியத்தை யடைகின்றார்கள். இது சத்தியம்.

வசிஷ்டரும் யாகமுடிவில், நாரதரின் உத்திரவின்படியே
சூரிய புஷ்கரணியை யடைந்து, கஜேசரது சந்நிதியிலிருந்து
தமது பாபநிவர்த்தியின் பொருட்டுத் தவம் புரிந்தார். ஒரு
வருஷம் இலையையுங் காற்றையும் உட்கொண்டு, சூரிய புஷ்க
ரணியிலும் வேகவதியிலும் ஸ்நாநஞ் செய்து, தினந்தோறும்
கஜேசரையுந் தரிசநஞ் செய்து, பக்திபுடன் வேத மந்திரங்க
ளினாலே துதித்துவந்தார். வருஷ முடிவிற் சூரியன் விருச்
சிகத்தி லிருக்கும்பொழுது, பௌர்ணமை திதியில், கஜேச
பெருமான் வசிஷ்டர் முன் தோன்றியருளலும், அவர் நடு
நடுங்கித் திருவடிகளில் விழுந்தார். கருணாநிதியாகிய சிவ
பிரான், 'வசிஷ்டனே! பயப்படவேண்டாம். உனது அரும்
பெருந் தவத்தினாலே உனக்கு முத்தி யளித்தேன். தேவ
ரூபமுள்ள காமதேநுவும் தவத்தினாலே சாபத்தினின்று நீங்கி
உனக்கு வசமாகும். அதனுடன் நீயும் யாகாதிகளைச் செய்'
என் றநுக்கிரகித்து மறைந்தருளினார். வசிஷ்டரும் காம
தேநுவும் பாவ சாபங்களினின்றும் விடுபட்டு, யாகாதிகிருத்தி
யங்களை நடத்தினார்கள். இந்தச்சரித்திரத்தைக் கேட்பவர்
கள் முத்தியை அடைவார்கள். சிவபக்தியை விளைவிக்கும்
பாண்டுபுத்திரனான அர்ச்சுனனுடைய சரித்திரத்தைக் கேட்
பவர்களும் முத்தியை யடைவார்கள்.

## 58. அருச்சுனன் பூஜித்தது.

சூத முனிவர் பின்னருஞ் சொல்லுகின்றார்: "சௌனகரே! குருவம்சத்திலே பாண்டுவென்று பிரசித்தமான அரசனொருவ னிருந்தான். அவ்வரசனுக்குத் திருதராஷ்டிரன் என்று பிரசித்தமான சகோதர னொருவ னிருந்தான். அத்திருதராஷ்டிரனுக்கு நூறு புதல்வர்க ளிருந்தார்கள். மந்திர சக்தியினாற் பாண்டு மகாராஜனுக்கு ஆறு புதல்வர்கள் உற்பவித்திருந்தார்கள். அவர்களிற் சூரிய மந்திரத்தினின்று உண்டான கர்ணன் தன்னுடன் பிறந்தவர்களான பாண்டவர்களின் சத்துருக்களான துரியோதனனுடன் சேர்ந்திருந்தான். பாண்டு மகாராஜனிறந்தவுடன் துரியோதனன் முதலிய திருதராஷ்டிரனின் புதல்வர்கள் பாண்டவர்களை மிகத் தொந்திரவு செய்ததோடு, சூதாட்டத்தால் அவர்களுக்கு ஒன்றுமில்லாது போக ஜயித்தும் விட்டார்கள்.

பாண்டவர்களுள் மத்தியி லுதித்தவனாகிய அர்ச்சுனன் சத்துருக்களை ஜயிக்கும் பொருட்டுச் சிவபிரானது திருவருளாற் பாசுபதம் என்ற அஸ்திரத்தைப் பெற, இப்பாரிஜாத கஜேசுரரை யடைந்து, விதிப்படித் தீர்த்தத்தில் நீராடிப், பாசுபத விரதத்தை யநுஷ்டிக்கக் கருதி, வாயு, இலை யிவைகளை யுட்கொண்டு, பஞ்சாக்கினி மத்தியி லிருந்து, கடுந்தவம் புரிந்தான். தினந்தோறும் மூன்று காலங்களிலும் இத்தலத்துப் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து, மனம் வாக்குக் காயங்களை யடக்கிச் சிவ ஸ்தோத்திரங்களிற் பற்றுடையவனாய்க் கோமுக்தீச்வரனை ஆராதித்து வந்தான். கருணைக் கடலாகிய முக்கண் மூர்த்தி அர்ச்சுனனது தவத்தையும் பக்தியையுங் கண்டு மகிழ்ந்து, யானைத் தோலைத் தரித்தவராய், ஆபரணங்களால் அலங்கரிக்கப் பெற்றவராய், அர்த்தநாரீச்வர வடிவினராய், அவன் முன் தோன்றித் திவ்விய



மான பாசுபதத்தைக் கொடுத்தருளினார். காண்டீபனும்
கஜேசரை வணங்கி ஸ்தோத்திரங்கள் செய்து, அநேக வரங்
களைப் பெற்று வணங்கித் "தேவர்களுக்குந் தேவரே!
உலகங்களினாற் பூஜிக்கப்பட்டவரே! கொடிய பாவங்களை
விலக்குவதும், மிக மங்களகரமானதும், ஜயத்தை யளிப்
பதும், முனிவர்களாற் சேவிக்கப் பெற்றதுமான இத்தல
மானது, எனது பெயரினாலே பிரசித்தி யடையும்படித் திரு
வருள் பாலித்தல் வேண்டுமென்று பிரார்த்திக்கச் சிவபிரா
னும் அவ்வாறே அநுக்கிரஹித் தருளினார். பிறகு, விஜயனும்
மாகமாசத்தின் மகாநக்ஷத்திற் பௌர்ணமையில் மகுடாகம
விதிப்படி சிவத்துவிஜர்களைக் கொண்டு உற்சவம் நடாத்தி
னான்.

இவ்விதம் சிவபிரானுக்கு உற்சவங்களை விமரிசையாக
நடத்தி, எல்லா சம்பத்தும் நிறையப் பெற்றவனாய், வேண்டிய
வரங்களைப் பெற்றுப் பின்னும் சிவபிரானைப் பிரார்த்தித்து,
'பிரபுவே! தங்களுடைய திருவடிகளில் ஸ்திரமான பக்தி
என்று மிருக்கும்படி யருளல்வேண்டுமென்று விண்ணப்பிக்கக்
கருணையங் கடலாயும் பக்தவத்சலராயுமுள்ள கஜேசரும்
'அப்படியே ஆகுக' என்றுரைத்து மறைந்தருளினார்
காண்டீபனும் காம்யகத்திலிருக்கும் தனது சகோதரர்களை
யடைந்தான். இக்காண்டீபனது சரித்திரத்தைப் படிப்பவர்க
ளும் கேட்பவர்களும் சுவர்க்கத்தை யடைவார்கள். சிவ
பத்தியைத் தருவதும், அஷ்டைச்வரியங்களை அளிப்பது
மான இக்கோமுக்தீச்வர மான்மியத்தைச் செவியுற்றவர்கள்,
பாபங்களினின்றும் விடுபட்டுக் கைலாசத்தில் வசிப்பார்கள்.
மேலும் அந்த க்ஷணத்திலேயே தீர்த்த யாத்திரை செய்த
பலனையு மடைவார்கள். விஜயேச்வரனை ஒருதரம் பிரதக்ஷி
ணம் செய்தாற் சிவலோகம் சித்திக்கும். சக்திக் கியன்றவாறு
செய்யவேண்டும். பாபங்களை
அவரவர்கள் பிரதக்ஷணஞ்

நசிக்கச் செய்வதும், புண்ணியத்தைத் தருவதும், ஞானத்தை யளிக்கிறதும், மோக்ஷத்தைக் கொடுப்பதும், சுகத்தை வருவிப்பதுமான இப்புண்ணிய புராணத்தைக் கேட்பவர்கள் பாவங்களினின்றும் நீங்கிச் சிவபிரானுடைய மேலான ஸ்தானத்தை அடைவார்கள்.

77091

திருவாடானைத் தலபுராணம் முற்றிற்று.

சுபம்.

Tirupati Sri Mahant's Press, Madras.